மதுரை மாநகர்

(ஒரு வரலாற்று நூல்)

V21195

புலவர் K. K. நடராசன்
வித்துவான் R. சீனிவாசன்

(Printed on White Printing Paper : D. Cr. 10·9 kg.)

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிப்புரிமை] [விலை ரூ. 1—00

Printed Oct. 1965

11870

முன்னுரை

மனிதர் தோன்றி, வாழ்ந்து மறைகின்றனர். அது போன்று நகரங்கள் பலவும் தோன்றி, வளர்ந்து, மறைந்து விடுகின்றன. ஆனால், ஒரு சில மாநகரங்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தோன்றி, மங்காப் புகழுடன் இன்றும் நிலைபெற்று விளங்குகின்றன. அத்தகைய பழம்பெரு நகரங்களுள் **மதுரை மாநகர்** ஒன்றாகும்.

தமிழகத்தின்கண் உள்ள பேரூர்களில் மதுரையம்பதி நடுநாயகமாகத் திகழ்ந்து வந்துள்ளது. நமது நற்றமிழ் செழுமையுற வளர்ந்த இடம் இம் மதுரை மாநகரமே யாகும். தமிழ்மொழியைப் போற்றி வளர்த்த தனிப் பெருமை மதுரை மக்களுக்கும், அதனை ஆட்சி செய்த மன்னர்களுக்கும் பெரிதும் உரியதாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்னரும் பின்னருமான புராண வரலாறுகளும், சரித்திர வரலாறுகளும், இலக்கிய வரலாறுகளும் மதுரை மூதூரைப்பற்றி எண்ணிறந்தன உள. அவ் வரலாறுகள் யாவற்றையும் தொகுத்து விவரிப்பதாயின், அஃது ஒரு மாபெருங் காவியமாகும். ஆதலால், இன்றியமையாத சில வரலாறுகள் மட்டுமே இந் நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இவை தமிழ் மக்களின் வீரம், நல்லொழுக்கம், நீதிமுறை, நாகரிகம், கடவுட்பற்று முதலிய சீரிய சமூகப் பண்புகளை உணர்த்த வல்லன. இந் நூலைப் பயிலும் மாணவர்களுக்கு இப் பண்புகள் இயல்பாகவே படியும்.

தமிழ்மொழியின் தொன்மையையும், அருமை பெருமை களையும் மாணவர்கள் உணர, இந் நூலிற் காணும் வரலாறுகள் துணைபுரியும் என்பது திண்ணம். மேலும், அவை மாணவ மாணவிகளிடம் மொழிப்பற்றினையும், நாட்டுப்பற்றினையும் விளைவித்து, பின்னர் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பாடுபட அவர்களை ஊக்குவிக்கும்.

இந் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இந் நூல் எழுதப் பெற்றுள்ளது. இந் நூல் மாணவர்க்கும் ஏனையோர்க்கும் பயன்படத் தமிழன்னை இன்னருள் புரிவாளாக!

ஆசிரியர்கள்

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
	நூன்முகம் ...	1
1.	மதுரை கண்ட தமிழ்ச் சங்கங்கள்	
	(i) தலைச்சங்க காலத்திய வரலாறு ...	4
	(ii) இடைச்சங்க காலத்திய வரலாறு ...	7
	(iii) கடைச்சங்க காலத்திய வரலாறு ...	9
2.	பழங்கால மதுரை	
	(i) மதுரையின் தொன்மை ...	13
	(ii) மதுரை நகரின் பழங்கால அமைப்பு ...	14
3.	மதுரையும் புராண வரலாறுகளும்	
	(i) மதுரையின் மறு பெயர்கள் ...	17
	(ii) மீனாட்சியம்மை திருமணம் ...	21
	(iii) மதுரையம்பதியும் மாணிக்கவாசகரும் ...	23
	(iv) மதுரையம்பதியும் திருஞானசம்பந்தரும் ...	30
	(v) மூர்த்தி நாயனார் ...	36
	(vi) தமிழ் கண்ட வையை ...	38
4.	மதுரையும் பாண்டிய மன்னர்களும்	
	(i) பாண்டியன் முடத்திருமாறன் ...	41
	(ii) பொற்கைப் பாண்டியன் ...	42
	(iii) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் ...	42
	(iv) பாண்டியன் நெடுஞ்செழியன் ...	43
	(v) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ...	43
	(vi) கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி ...	44

எண்	பாடம்		பக்கம்
5.	மதுரையும் முகமதியர்களும்	...	49
6.	மதுரையும் நாயக்க மன்னர்களும்		
(i)	நாகம நாயக்கர்	...	52
(ii)	விசுவநாத நாயக்கர்	...	53
(iii)	முத்துக்கிருட்டினப்ப நாயக்கர்	...	56
(iv)	திருமலை நாயக்கர்	...	57
(v)	சொக்கநாத நாயக்கர்	...	65
(vi)	அரங்கமுத்துக் கிருட்டின வீரப்ப நாயக்கர்	...	68
(vii)	இராணி மங்கம்மாள்	...	68
(viii)	நாயக்கர் ஆட்சியின் இறுதி நிலை	...	70
7.	மதுரையும் புலவர் பெருமக்களும்		
(i)	நக்கீரர்	...	73
(ii)	சீத்தலைச் சாத்தனர்	...	80
(iii)	இடைக்காடர்	...	83
(iv)	நல்லந்துவனர்	...	86
(v)	நச்சினர்க்கினியர்	...	87
(vi)	வள்ளுவர்	...	88
(vii)	புகழேந்திப் புலவரும் ஒட்டக்கூத்தரும்	...	91
8.	இக்கால மதுரை	...	98


பண்டைத் தமிழகம்
சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள்

மதுரை மாநகர்

நான்முகம்

பூவுலகின் கண் பழங்காலம் முதலாக நம் பாரத நாடு புனிதமும் புகழும் வாய்ந்து விளங்குகின்றது. இப் பாரத நாட்டின் தென்பகுதியே நாம் வாழும் தமிழ் நாடு அல்லது தமிழகம் ஆகும். பனம்பாரனர் என்ற பண்டைக்கால ஆசிரியர், 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனவும், அமரகவி பாரதியார்,

"நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"

எனவும் தமிழ் நாட்டின் எல்லைகளைக் குறிப் பிட்டுள்ளனர்.

நம் தமிழ்நாடு மலைவளம், காட்டுவளம், நீர் வளம், நிலவளம் பெரிதும் வாய்ந்தது; குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் எனப்படும் நால்வகை நிலங்களையும் உடையது.

சேர நாடு: முற்காலத்தில் தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பெரும்

பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் சேர நாடு என்பது இன்றுள்ள திருவாங்கூர், கொச்சி, ஆகிய கேரள மாநிலமும், கோயமுத்தூர், சேலம் முதலிய மாவட்டங்கள் அடங்கிய நிலப் பகுதியுமாகும்.

வஞ்சி மாநகர் சேர நாட்டின் தலைநகரமாகவும், தொண்டி, முசிறி என்பன சிறந்த துறைமுகங் களாகவும் அமைந்திருந்தன. சேர நாட்டு மலைச் சாரல்களில் யானைகள் மிகுதியாதலின், 'வேழ முடைத்து மலைநாடு' என்று அது சிறப்பித்துக் கூறப்படுகிறது.

சேர நாட்டை ஆண்ட மன்னர்கள் சேர மன்னர்கள் என வழங்கப்பெறுவர். இவர்கள் பனம்பூ மாலையையும், வில் எழுதிய கொடியையும் அரசியல் சின்னங்களாகக் கொண்டவர்கள். இம்மன்னர்கள் தமிழ் மொழியைப் பெரிதும் வளர்த்து வந்தனர். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் நூல் சேர மன்னர் மரபில் தோன்றிய இளங்கோவடி களால் இயற்றப்பட்டதாகும்.

சோழ நாடு : 'வான் பொய்ப்பினும் தான் பொய் யாக்' காவிரி ஆறு பாயும் சோழ நாடு, இக்காலத் திய தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களையும் தென்னார்க்காடு மாவட்டத்தின் தென்பகுதியையும் தன்னகத்தே கொண்ட நிலப்பகுதியாகும். முதலில் புகாரும், பின்னர் உறையூரும், தஞ்சை மாநகரும் இதன் தலைநகரங்களாக விளங்கின.

'ஏழ்தலம் புகழ் காவிரியால் விளை சோழ மண்டலம்' என்றும், 'சோழ வளநாடு சோறு டைத்து' என்றும் இதன் சிறப்பினைப் புலவர்கள் புகழ்ந்து கூறுவார்கள். சோழ மன்னர்கள் ஆத்தி மாலையையும், புலிக்கொடியையும் உடையவர்கள். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் முதலிய புலவர்கள் பலர் சோழநாட்டில் வாழ்ந்திருந்தனர்.

பாண்டிய நாடு: வையையும், தாமிரவருணியும் வளம்படுத்தும் பாண்டிய நாடு, இப்போதைய மதுரை, இராமநாதபுரம். திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பகுதியாகும். 'பூழியர் கோன் தென்னாடு முத்துடைத்து' என்றபடி பாண்டிய நாட்டு முத்துக்கள் பாரில் புகழ்பெற்று விளங்கின. பாண்டிய மன்னர்கள் வேப்பம் பூ மாலையையும், கயற் கொடியையும் கொண்டிருந்தனர்.

இனி முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்த பாண்டியர்களின் தலைநகராகிய மதுரை மாநகரைப் பற்றிய சிறப்பியல்புகளைக் காண்போம்.

1. மதுரை கண்ட தமிழ்ச் சங்கங்கள்

முச்சங்கம் : பண்டைத் தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் ஒன்றன் பின் ஒன்ருகப் பல்வேறு காலங்களில் விளங்கின என்று தெரிகிறது. அச்சங்கங்களைப் போற்றி வளர்த்த புரவலர்களைப் பற்றியும், அவற்றில் அமர்ந்து தமிழாராய்ச்சி செய்து நூல்கள் இயற்றிய புலவர்களைப் பற்றியும் அக்காலத்திய தமிழ் இலக்கியங்களால் ஓரளவு அறியலாகும். சங்க நூல்களில் மதுரை மாநகரைப் பற்றிய செய்திகள் விரவி வருவதால் தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற முச்சங்கங்களைப் பற்றி முதலில் ஈண்டுக் காண்போம்.

(i) தலைச்சங்க காலத்திய வரலாறு

குமரி நாடு : இப்பெயர் கொண்ட நாடொன்று குமரி முனைக்குத் தெற்கே இந்துப் பெருங்கடலில் இருந்தது. இந்நாடு பின்பு கடலால் கொள்ளப் பட்டது. கடலால் கொள்ளப்பட்ட இப்பகுதியை 'மறைந்த குமரிக் கண்டம்' அல்லது 'இலெமூரியா கண்டம்' என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். மேலும், இப்பகுதியே பண்டைத் தமிழகமாகச் சிறப்புற்றிலங்கியது என அறிஞர் கூறுவர். முதன் முதல் மக்கள் தோன்றிய இடம் இஃதே என்பர். இப் பகுதி கிழக்கே ஜாவாத் தீவு முதல் மேற்கே மடகாஸ்கர் தீவுவரை அகன்ற நிலப் பரப்பாக இருந்தது. ஹெய்க்கேல் என்பவர், இந்துப் பெருங்கடலில் இந்தியாவின் கரையி

லிருந்து தென் ஆப்பிரிக்கா வரையிலும் ஒரு நிலப்பகுதி இருந்ததாகக் கூறியுள்ளார். கடல் கொண்ட இலெமூரியாவைப்பற்றி எலிபெட் என்ற ஆராய்ச்சி வல்லுநரும் விளக்கி விவரித் துள்ளார். கடல் கோளைப்பற்றி,

“பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”

என்று இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டிருப்பதும் அறியத் தக்கதே.

தலைச் சங்கம்: குமரி நாட்டின்கண் தமிழ்ச் சங்கம் ஒன்று நடைபெற்றது என்றும், அதுவே தலைச் சங்கமாகும் என்றும் இறையனார் களவியலு ரையால் நாம் தெரிந்துகொள்கிறோம். அச் சங்கத் தில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்ற மெறிந்த குமரவேள், அகத்தியனார் முதலாய ஐந் நூற்று நாற்பத்து ஒன்பதின்மர் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். அவர்களால் பரிபாடல், முதுநாரை முதலிய நூல்கள் பாடப்பெற்றன. நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகள் சங்கம் நடைபெற்றது. அச்சங்கம் காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்களால் பாதுகாக்கப் பெற்றது. இச் சங்கத்தில் ஏழு பாண்டிய மன்னர்கள் கவியரங்கு ஏறித் தமிழ் ஆராய்ந்தனர்.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன்: இவன் தலைச் சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டியர்களுள் தலை

சிறந்தவன். இவன் பாண்டியன் மாகீர்த்தி எனவும், நிலந்தரு திருவிற் பாண்டியன் எனவும் வழங்கப் பெறுவான். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், இவனுடைய அவையில் தான் தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றது என்று கூறியுள்ளார். தலைச் சங்கத்துச் சான்றோர் இவனை 'நெடியோன்' எனப் பல இடங்களிலும் குறித்துள்ளனர். இவன் குமரி நாடு அழிதற்கு முன்னர் அந்நாட்டில் பஃறுளி என்ற பெயருடைய ஆற்றை வெட்டுவித்துக் கடல் தெய்வத்திற்கு விழாச் செய்தனன். இச்செய்தியை,

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர் பஃறுளி மணலினும் பலவே"

என்று புறநானூற்றுச் செய்யுள் அடிகளால் அறியலாம்.

ஒருமுறை நாட்டை அழிக்கப் பெருக்கெடுத்த கடலினை இம்மன்னன் தன்னுடைய வேலை எறிந்து வற்றச் செய்து, அக்கடல் தன்னுடைய காலின் வடிம்பை (விளிம்பை) அலம்பும்படி செய்தமையால் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்று வழங்கப்பெற்றான். இதனைக் 'கடல் வடிம்பலம்ப நின்ற கைதவன்' எனப் பாரதமும், 'ஆழிவடிம்பலம்ப நின்றான்' என நளவெண்பாவும் குறிப்பிடுகின்றன.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி: இவனுடைய இயற்பெயர் குடுமி என்பதாகும். இவன் அரசர்க்குரிய வேள்விகள் பல செய்தவன்.

ஆதலால், "பல்யாகசாலை" என்ற அடைமொழி இவன் பெயரோடு சேர்க்கப் பெற்றது. இவன் பகைவர் பலரை அறப்போர் புரிந்து வென்றவன்; சிவபெருமானிடத்துப் பேரன்புடையவன் ; சிறந்த வள்ளலாக விளங்கியவன். இவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியனது வழியில் தோன்றிப் புலவர் போற்ற வாழ்ந்தவன்.

(ii) இடைச் சங்க காலத்திய வரலாறு

இடைச் சங்கம் : இடைச் சங்கம் நிறுவப் பெற்ற இடம் கபாடபுரம் ஆகும். அகத்தியர், தொல்காப்பியர், மோசி, திரையன்மாறன் முதலாய ஐம்பத்து ஒன்பதின்மர் இச்சங்கத்து இருந்தனர். இவர்களால் கலி, வெண்டாளி, அகத்தியம், தொல் காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம் முதலிய நூல்கள் இயற்றப்பெற்றன. இச் சங்கம் மூவா யிரத்து எழுநூறு ஆண்டுகள் நடைபெற்றது என்பர். வெண்டேர்ச்செழியன் முதலாக முடத் திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் இச்சங்கத் தைப் புரந்து வந்தனர். அவருள் ஐந்து பாண்டிய மன்னர்கள் கவியரங்கு ஏறியவர் ஆவர்.

இடைச் சங்க கால இறுதியில் கபாடபுரத் தையும் கடல் கொண்டது. வடமொழி ஆதிகாவிய மாகிய வான்மீகி இராமாயணத்தில் தமிழ் நாட்டைப் பற்றிய சில குறிப்புகள் காணப்படு கின்றன. அப்பெருங் காப்பியத்தில் பாண்டியரின் அரசிருக்கையாகிய கபாடபுரத்திலும், பொதிய

மலையிலும் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றன என்றும், பாண்டிய வேந்தரது தலைநகர் பொன்னாலும் முத்துக்களாலும் வனப்புறச் செய்யப் பெற்ற கோட்டை வாயிலை உடையதாக இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனன். அன்றியும், வியாச முனிவர் இயற்றிய பாரதத்தில் பாண்டவர்களுள் ஒருவனான அருச்சுனன் பாண்டிய குலப் பெண்மணி ஒருத்தியை மணந்த செய்தியும் காணப்படுகிறது.

முடத்திருமாறன்: தலைச்சங்க மிருந்த மதுரையும், இடைச்சங்கம் இருந்த கபாடபுரமும் கடலால் கொள்ளப்படவே இடைச் சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்த முடத்திருமாறன் என்ற மன்னன், மதுரை எனத் தற்காலத்து வழங்கப் பெறும் கூடல் மாநகரை யடைந்து அதனை வளப் படுத்தித் தனக்குரிய தலைநகர் ஆக்கிக்கொண்டு அங்குக் கடைச் சங்கத்தை நிறுவினான். இம்மன்னன் நிறுவிய சங்கத்தில் நல்லிசைப் புலவர் பலர் தமிழ் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி அரிய பல செந்தமிழ் நூல்களை இயற்றினர். தமிழன்னை புத்துயிர் பெற்றாள். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் உயர்நிலை எய்திற்று. கடைச் சங்கத்தை அரும்பாடுபட்டு மதுரையில் நிறுவிய இம் மன்னன் தமிழ்த் தாய்க்குச் செய்த அரும்பணிகள் அளவிட்டு உரைக்க இயலா. இம் மன்னனும் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். குறிஞ்சி, பாலை ஆகிய திணைகளைச் சுவைபடப் பாடுவதில் வல்லவன்.

இதுகாறும் கூறியவற்றால் குமரிக் கண்டத்தில் இருந்ததாகக் கருதப்படும் மதுரையில் தலைச் சங்கம் நிகழ்வுற்றது என்பதும், அப் பகுதி கடல் கோளால் அழியவே கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப் பெற்றது என்பதும், கபாடபுரமும் கடலால் கொள்ளப்படவே தற்பொழுது உள்ள மதுரை மாநகரில் மூன்றும் சங்கம் பாண்டிய மன்னர் களால் தோற்றுவிக்கப்பெற்றது என்பதும் ஒருவாறு புலனாகும்.

(iii) கடைச் சங்க காலத்திய வரலாறு

கடைச் சங்கம்: மூன்றும் சங்கம் முடத்திருமாறன் என்பவனால் தொடங்கப் பெற்றது என்பதை முன் பகுதியில் அறிந்தோம். அச் சங்கம் இருந்து தமிழ்த் தொண்டாற்றிய இடம் இலக்கியங்களில் பெரும் பான்மை கூடல் எனவும், சிறுபான்மை மதுரை எனவும் வழங்கப்பெற்று வந்துள்ளது.

கடைச் சங்கத்தில் குழுமி இருந்து தமிழ் ஆராய்ந் தவர் கணக்காயனார் மகனார் நக்கீரர், மருதன், இளநாகனார், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் முதலிய நாற்பத்தொன்பதின்மராவர். இக் காலத்தில் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முத லாய நூல்கள் எழுந்தன. இச் சங்கம் ஆயிரத்து எண்ணூற்றைம்பது ஆண்டுகள் நடைபெற்றது என்பர். இதனைப் போற்றி புரந்த மன்னர்கள் முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்து ஒன்பதின்மர் ஆவர். அவர்களுள் மூன்று

மன்னர்கள் கவியரங்கு ஏறியவராகக் குறிப்பிடப் பெற்ற போதிலும், ஆராய்ந்து பார்க்குமிடத்து, பன்னிரண்டு பாண்டிய மன்னர்கள் சங்கப் புலவர்களோடு ஒப்பப் பாடும் புலமையும் பெருமையும் பெற்றிருந்தனர்.

ஆராய்ச்சியாளர்களில் சிலர் கடைச் சங்க காலத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது அது நடைபெற்ற காலம் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை என்றும், வேறு சிலர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை என்றும் கூறுவர்.

ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன்: கடைச் சங்க காலத்தில் மதுரை மாநகரில் வீற்றிருந்து ஆட்சி புரிந்த பாண்டியர்களுள் இவ் வேந்தன் பெரும் புகழ் வாய்ந்தவன். இவன் வட நாட்டில் அரசாண்ட ஆரிய மன்னரோடு பொருது போரில் வெற்றி கொண்டவன். ஆதலின், 'ஆரியப்படை கடந்த' என்ற அடைமொழி இவனுக்குக் கொடுக்கப்பட்டது.

இம் மன்னன் வீரத்தில் சிறந்திருந்ததோடன்றிக் கற்றோர்பால் மிகுந்த மதிப்புடையவனுயிருந்தான்; கற்றலையே பெரும் பயனுகக் கருதியவன். இவ் வேந்தன் நீதிதவரு நெறிமுறையில் நடந்ததற்குக் கோவலன் வரலாறு தக்க சான்ருகும்.

இவ்வேந்தனுடைய ஆட்சி காலத்திற்ருன் புகார் நகர வணிகருள் ஒருவனுகக் கோவலன், கணிகை மாதவியுடன் வாழ்ந்து, பெரும் பொருள் இழந்து, பின்னர் இழந்த பொருளை ஈட்ட விரும்பி, மனைவி கண்ணகியுடன் மதுரைமா நகரையடைந்தான். ஆங்கு, 'ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும்' ஆயர்குல

முதுமகள் மாதரி என்பாளிடத்து மனைவியை ஒப்படைத்து கண்ணகியின் காற்சிலம்புகளில் ஒன்றை விலை கூறும்பொருட்டுக் கோவலன் நகருள் சென்றான்; எதிரே, பொற்கொல்லர் நூற்றுவர்சூழ வரும், அரசாங்கப் பொற்கொல்லனைக் கண்டு சிலம்பினை விலை மதிப்பிடுமாறு கூறினான்.

அப்பொற் கொல்லனது சூழ்ச்சித் திறத்தால். கோவலன் கோப்பெருந்தேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் எனக் குற்றம் சுமத்தப்பெற்றுக் கொலை செய்யப்பட்டான். கோவலன் கொலையுண்டதை யறிந்த கண்ணகி வஞ்சினம் கூறிப் பாண்டியனது அவைக்களம் புகுந்தாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைத் தன் சிலம்பால் மெய்ப்பித்தாள். மெய்யுணர்ந்த பாண்டியன், தான் ஆராயாது செய்த செயலிற்கு வருந்தித் தாழ்ந்த குடையனாய், தளர்ந்த செங்கோலனாய்,

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுக வென்னாயுள்"

என்று கூறித் தன் தவறுணர்ந்து அரசு கட்டிலிலேயே ஆவி துறந்தான். இதனால் இவனது செங்கோலின் பெருமை இனிது உணரப்படும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்: ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைப் போன்றே இவனும் வீரமும் செந்தமிழ்ப் புலமையும் நிரம்பியவன். தற்போது தலையாலங்காடு என

வழங்கப்படுகின்ற சிவத்தலமாகிய தலையாலங்கானம் என்ற இடத்தில் இரு பெரு வேந்தர்களாகிய சேர சோழர்களையும், ஐம்பெரு வேளிர்களையும் இளம் பருவத்திலேயே பொருது புறங் கண்டான் இவ் வேந்தன். செய்யுள் செய்தலில் வல்லமையுடைய இவன் புலவரைப் போற்றும் பெருந்தகையன்; மறக்கள வேள்வியும், அறக்கள வேள்வியும் புரிந்தவன். இவனைத் தலைவனாகக் கொண்டே மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை என்ற அரிய தமிழ் நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

2. பழங்கால மதுரை

(i) மதுரையின் தொன்மை

வரலாற்றுக் குறிப்புக்கள்: மதுரை மிகப் பழங் காலந்தொட்டே வரலாற்றுப் புகழ்பெற்ற நகரமாக இருந்து வந்துள்ளது. அயல் நாட்டுத் தூதரும், வரலாற்று ஆசிரியர்களும் மதுரையின் வளத்தையும், சிறப்பையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை யின் வரலாற்றை விளக்கும் மகா வமிசம் என்ற வரலாற்று நூல், இலங்கை அரசன் ஒருவன் கி. மு. 478இல் பாண்டியர் குலப்பெண் ஒருத்தியை மணந்த தாகக் கூறுகிறது. மேலும் மகத நாட்டை ஆண்ட மௌரிய மன்னர்களுள் சிறந்து விளங்கிய அசோகரது கல்வெட்டுக்களில் பாண்டியரையும், மதுரையையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பாடலிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மௌரிய மன்னரான சந்திரகுப்த மௌரியரின் அவைக்களத்திற்கு வந்த கிரேக்க நாட்டுத் தூதராகிய மெகஸ்தனிஸ் பாண்டிய நாட்டினைப் பற்றிக் குறிப்பிட் டுள்ளார். கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஐரோப்பியரான பிளைனி பாண்டிய நாட்டைப் பற்றிய குறிப்புக்கள் வரைந்துவைத்துள்ளார். உரோமாபுரியின் பேரரசராக இருந்த அகஸ்டஸ் என்பவரின் அவையில் பாண்டிய நாட்டுத் தூதன் ஒருவன் அமர்ந்திருந்ததாக ஸ்டிராபோ என்பவர் கூறியுள்ளார். கிரேக்கரும் உரோமரும் வாணிபத்தின் பொருட்டு மதுரையிற் குடியேறியிருந்தனர் என்பதை

மதுரையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அகப்படும் உரோம நாணயங்களால் அறியலாம்.

(ii) மதுரை நகரின் பழங்கால அமைப்பு

மதுரையின் அமைப்பு: கடைச் சங்க காலத்தில் மதுரை தலைசிறந்த நகரமாக விளங்கியது; பல்வகை வளங்களும் நிரம்பப்பெற்றிருந்தது. இந்த நகரம் பாண்டியரின் உள் நாட்டுத் தலைநகரமாகவும், கொற்கை என்னும் ஊர் கடற்கரைப் பட்டினமாகவும் திகழ்ந்தன. மாறனுக்குரிய இம் மாண்புறு துறையில் முத்துக் குளித்தல் சிறந்த தொழிலாக இருந்தது. இங்கு எடுக்கப்பெற்ற முத்துக்கள் அயல் நாட்டவ ரால் பெரிதும் போற்றப்பட்டு விரும்பி வாங்கப்பட்டன. தென்னாட்டின் பொன்னாடான பாண்டிய நாட்டின் முத்துச் சிறப்பை,

> "கொற்கையம் பெருந்துறை முத்து"
> "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து"

முதலான அடிகளால் அறியலாம்.

மதில்: உள்நாட்டுத் தலைநகராகத் திகழ்ந்த மதுரை மூதூரைச் சுற்றிலும் பெரிய மதில் சூழ்ந்து விளங்கியது. இம் மதில் வானுற ஓங்கியிருந்தது. அஃது தக்க பாதுகாப்பு முறையில் அமைக்கப்பட்டு இருந்தது. தானே வளைந்து அம்புகள் எய்யக்கூடிய விற்பொறிகளும், கற்களை உமிழும் கவண்களும், வேல், குந்தம், ஈட்டி முதலியனவும் அம் மதிலகத்து அமைக் கப் பெற்றிருந்தன. மதிலின் தலைப்புறத்தில், ஏறுவா ரைத் தடுக்கும் இரும்புக் கவைகளும், ஊசிகளும்

பொருத்தப்பட்டிருந்தன. இம் மதிலின்கண் ஓங்கி யுயர்ந்த மாடங்களையுடைய வாயில் காணப்பட்டது. வாயிற்கதவுகள் வலிமையாக அமைக்கப்பட்டுத் தாழ்ப்பாள், பூட்டு முதலிய காப்புக்களுடன் இருந்தன. மக்களும், மாக்களும் இடையருது சென்றுகொண்டிருந்த இவ் வாயிலை வாட்படையுடைய வீரர் காத்து வந்தனர்.

அகழி: இம் மதிலைச் சூழ ஆழ்ந்து அகன்ற அகழி ஒன்று இருந்தது. இதில் கொடிய முதலைகள் வாழ்ந்து. நீருள் இறங்கிய பகைவரைக் கொன்று தடுத்துவந்தன. அகழியைச் சூழ கட்டுவேலி யமைந்த காவற் காடுகளும், சுரங்கப் பாதைகளும் இருந்தன.

புறநகர்: புறநகரின்கண் நீர்மிகுந்த ஏரிகளும் விளைவுமிக்க வயல்களும், குளிர்ச்சிமிக்க சோலைகளும் காணப்பெற்றன. தெங்கு, கமுகு, வாழை முதலிய மரங்கள் செழித்து வளர்ந்து நற்பயன் அளித்தன. தண்ணீர்ப் பந்தலும், தவத்தவர் இருக்கையும் இதன் மருங்கில் இடங்கொண்டிருந்தன.

அகநகர்: அகநகர் வியத்தகுவண்ணம் அமைந்திருந்தது. மக்கள் தரத்திற்குத் தக்கபடி வாழ்வதற்கேற்றவாறு வீதிகள் வரிசை வரிசையாக அமைந்திருந்தன. தெருக்கள் அகன்றனவாகவும் நெடியனவாகவும் இருந்தன. மண்டபம். கூடம், தாய்மனை, அடுக்களை முதலிய பகுதிகளோடு கூடியனவாக இல்லங்கள் அமைக்கப்பெற்றிருந்தன.

அங்காடி: அக்காலத்தில் பகலிலும், இரவிலும் அங்காடிகள் இருந்தன. இவற்றை முறையே நாளங்

காடி எனவும், அல்லங்காடி எனவும் குறிப்பிடு கின்றனர். இவற்றுக்கெனத் தனித்தனியே வீதிகள் அக்காலத்தில் இருந்தன. வையம், பாண்டில், தோற் சாமான்கள், தந்தச் சாமான்கள், நறுமணப் பொருள்கள் முதலியனவற்ருல் நிறையப் பெற்றதாய் நாளங்காடி வளமிக்கு இருந்தது. ஆடை வகைகள், பழ வகைகள், காய்கறி வகைகள், இறைச்சிகள், கிழங்கு வகைகள் முதலியவை அல்லங்காடிக்கண் விற்கப் பட்டன.

மற்றும் அந்நகரின்கண்ணே சமன்செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபாற்கோடாத சான்ரேரைக் கொண்ட அறங்கூறு அவைகளும், அந்தணர் இருக்கைகளும், அறவோர் பள்ளிகளும், சிவன், திருமால், முருகன், பலதேவன் முதலானவர் களின் கோயில்களும் அமைந்திருந்தன.

3. மதுரையும் புராண வரலாறுகளும்

(i) மதுரையின் மறு பெயர்கள்

இதுகாறும் இலக்கியம், வரலாறு ஆகியவற்றின் துணைகொண்டு மதுரையம்பதியைப் பற்றிய செய்திகளை ஓரளவு அறிந்தோம். இனி, புராண வாயிலாக மதுரையையும், அதன் சிறப்பையும், ஆங்கு நிகழ்ந்த இறைவனின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களில் சிலவற்றையும் அறிவோம்.

மதுரையைப்பற்றி யறிய உறுதுணையாக உள்ள நூல்கள் பல. அவற்றுள் பெரிதும் பயன்படுவன திருவிளையாடற் புராணம், திருத்தொண்டர் புராணம், கடம்பவன புராணம், நம்பி திருவிளையாடற் புராணம் முதலியனவாம்.

> "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
> தொடங்கினர்க்கோர்
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
> பராபரமே"

என்ற தாயுமான அடிகளின் வாக்கிற்கேற்ப மதுரையம்பதி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருஞ் சிறப்புக்களும் பெற்றதாகத் திகழ்கிறது.

இந் நகருக்குப் பல பெயர்கள் புராணங்களில் வழங்கப்பெற்றுள்ளன. அவற்றுட் சில ஆலவாய், நான்மாடக்கூடல், கடம்பவனம், சிவராசதானி முதலி

யனவாகும். இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒரு புராண வரலாறுபற்றி எழுந்ததாகும்.

நான்மாடக்கூடல்: வருணனால் ஒரு காலத்தில் மதுரையை நோக்கி விடப்பட்ட கடலை, இறைவன் வற்றச் செய்தருளினன். அது கண்டு சீற்றங்கொண்ட வலாரி, மதுரையை அழிக்குமாறு ஏழு முகில்களையும் ஏவினன். மழையின் கொடுமைக்கு ஆற்றாது மக்களும் மன்னவனும் இறைவன்பாற் சென்று, ''எமது துன்பப் பாட்டினை நீக்கி, எங்கள் நல்லுயிரைக் காத்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டனர். மதுரை நாயகனும் மகிழ்ந்து நான்கு மேகங்களைப் படைத்து மழையின் கொடுமையைத் தீர்க்குமாறு ஏவினன். அம் மேகங்கள் மதுரையின் நாற்றிசைகளிலும் பரவி, நான்கு மாடங்களாயின. மக்களும் மன்னவனும் அவற்றின் கீழே தங்கித் தம் இன்னல் போக்கினர். சொக்கநாதரின் சுந்தரச் சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகிக் கூடிநின்று காத்தமையின் நான்மாடக்கூடல் என்னும்பெயர் இந்நகருக்கு ஏற்பட்டது என்பர்.

ஆலவாய்: வங்கிய சேகர பாண்டியன் என்பவன் இறைவன்பாற் சென்று மதுரையம்பதியின் நான்கு எல்லைகளையும் காட்டியருளுமாறு வேண்டிக்கொண்டனன். நுண்ணிய பொருளினும் நுண்ணியதாய இறைவன், மீனவன் அன்பிற்கு எளிவந்து தோன்றித் தன்மீதுள்ள ஆலவாய் அரவினை நோக்கி, எல்லையைக் காட்டி மீளுமாறு பணித்தான். அந்த அரவும் அங்ஙனமே கீழ்த் திசையில் தலை வைத்து உடல் வளைத்து வால் நீட்டி எல்லைக்காட்டி மீண்டது.

ஆலவாய் அரவுகாட்டியபடி மாறனும் மதில் எடுத்து அழகு செய்தான். அம்மதில் ஆலவாய் மதில் எனவும், அந்நகரம் ஆலவாய் எனவும் பெயர் பெற்றன.

மதுரை: ஒரு நாள் வணிகன் ஒருவன் கடம்ப மரங்கள் அடர்ந்திருத்த காட்டின் அருகில் தங்க நேர்ந் தது. அவன் தங்கியிருந்த நாளில் இரவில் வானவர் வந்துசெல்வதைக் கண்டறிந்தான். அக் காட்டிடையில் அவர்கள் வந்து செல்லும் காரணத்தை அறிய விரும்பினுன். காட்டின் நடுப் பகுதியில் செல்லுகையில் சிவலிங்கம் ஒன்று அங்கே பூசிக்கப்பட்டிருந்ததைக் கண்டான். மகிழ்ச்சிகொண்ட மனமுடையவனுய் அவ் வணிகன் மீண்டு வந்து நகரத்தார்க்கு அவ்வற் புதத்தைக் கூறினுன். இச்செய்தியைக் கேள்வியுற்ற பாண்டியன் குலசேகரன், கடம்ப மரங்களையெல்லாம் அழித்து ஆங்கு இலிங்க உருவாய் அமர்ந்திருந்த அழகருக்குத் திருக்கோயில் எடுப்பித்தான்; பின், கோயிலைச் சூழ நகரத்தையும் அமைத்தான். இறைவன் மனமகிழ்ந்து செஞ்சடையில் சிறப்புடன் இலங்கும் வெண்மதியினிடத்துள்ள மதுரமான அமிழ்தத்தைத் தெளித்து அந் நகரைப் புனிதமடையச் செய்த காரணத் தால் அவ்வூர் மதுரை எனப் பெயர் பெற்றது என்பர்.

மற்றும் கடம்ப மரங்கள் அடர்ந்திருந்தமையின் 'கடம்ப வனம்' என்றும், சிவபெருமான் வீற்றிருந்து அரசுபுரிந்த சிறப்புடைமையின் 'சிவ ராசதானி' என்றும் வேறு பெயர்களும் இந் நகருக்கு அமைந்து உள்ளன.

பொற்றாமரைத் திருக்குளம்: மதுரை சொக்கநாதர் கோயிலுள் இருக்கும் திருக்குளம் பொற்றாமரைப்

பொய்கை எனப் பெயர் பெறும். தம் கணைந்தர் களது வேண்டுகோளின்படி, சிவபெருமான் இப் பொய்கையை உண்டாக்கினர் என்று புராணங்கள் கூறும். இத் தூய நீரில் அன்புடன் மூழ்குவாருக்கு உள்ளத்து இருள் நீங்கி ஞான ஒளி தோன்றும் என்றும், அகத்தூய்மையும், புறத்தூய்மையும் ஒருங்கே அமையும் என்றும் சிவனடியார்கள் கூறுவர். பொற்ரு மரைப் பொய்கையில் சங்கப் பலகை மிதந்து வந்ததும், நக்கீரர் நீராடி உய்ந்ததும் இலக்கிய வரலாறுகளாகும், இப் பொற்ருமரைக் குளத்தைக் குமரகுருபர சுவாமிகள் 'கனகம் மன்னு தட நளினி' என்று குறிப்பிடுகிருர்.

இறைவனின் திருவிளையாடல்கள் : இந் நகரில் கோயில் கொண்டுள்ள இறைவனது திருப்பெயர் சொக்கர் அல்லது அழகர் ஆகும். இறைவன் அந்தமில் அழகனுய், உமையை ஒரு பாகத்துடையனுய் விளங்கும் தன்மையை அறிந்தோர், சோமசுந்தரன் என்ற திரு நாமமும் இட்டு அழைக்கலாயினர். இறைவன் இப் பதியில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளான். சவுந்தரபாண்டியனுகிச் சங்கத் தமிழ் வளர்த்தான் ; தேனினும் இனிய திருவாசகத்தை இயற்றிய மணிவாசகப் பெருந்தகைபொருட்டு மண் சுமந்தான் ; அடிபட்டுப் புண் சுமந்தான். 'பொருப் பினுட் சிறந்தது பொற்கோட்டு மேரு. தருக்களில் சிறப்புடையது தண்ணறுந் தெய்வதாரு. தானங் களில் சிறப்புடையது சீரிய அன்னதானம். புனித மந்திரங்களிற் சிறந்தது ஐந்தெழுத்து. இவைபோல் தூய வானவரிற் சிறந்தோன் தூமதி யணிந்த தூயோன் ஆவான்' என்று சிவநேசர்கள் உரைப் பார்கள்.

இங்குள்ள இறைவனுக்குக் கடம்பவன சுந்தரன், கலியாணசுந்தரன், அபிடேகச் சொக்கர், அழகிய சொக்கர், மதுரேசர், சவுந்தரமாறன் முதலான வேறு பெயர்களும் உள்ளன. இத் தலத்து எழுந்தருளியுள்ள அம்மை மீனுட்சியம்மை ஆவாள். இவ்விறைவிக்கு அபிடேகவல்லி, அங்கயற்கண்ணி, தடாதகைப் பிராட்டி, சுந்தரவல்லி முதலான பெயர்களும் வழங்கப் படுகின்றன.

(iii) மீனுட்சியம்மை திருமணம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் செவ்வனே பெற்றுத் திகழும் மதுரையை மலயத்துவசன் என்னும் பாண்டியன் முன்னொரு கால் அரசாண்டு வந்தான். அருட் செல்வமும் பொருட்செல்வமும் பெரிதும் பெற்றிருந்த பாண்டியன் மக்கட்செல்வம் பெருது கவன்ருன். மகப்பேற்றின் பொருட்டு மகவேள்வி செய்கையில், வேள்வித் தீயி னின்று உலகமெல்லாம் ஈன்ற அன்னையாகிய உமா தேவி மூன்று வயதுள்ள மகளாகத் தோன்றினுள். மலயத்துவசனின் மனைவி காஞ்சனை பெருது பெற் றெடுத்த தெய்வத் திருமகவை எடுத்தணைத்து முத்த மிட்டு மகிழ்ந்தாள். மகவின்றி வருந்திய மலயத்துவசன் தனக்கு வேள்வியின் பயனுக ஆண்மகவு தோன்ற வில்லையே என்று வருந்தினுன். எனினும், அம்மன்னன் இம் மகட்குத் தடாதகை எனப் பெயரிட்டு, மங்கல வினைகள் பல மகிழ்வுடன் ஆற்றி, மாற்ருர் போற்ற மாண்புடன் செங்கோலோச்சி வரலாயினுன். தடாதகை பிராட்டியும் தக்க பருவத்தில் கல்வி கற்று அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சிகளைப் பயின்று தேர்ச்சியுற்று

விளங்கினுள். தடாதகையின் எழிலையும், ஆற்றலையும் கண்ட மலயத்துவசன் அவட்கு முடிசூட்டி மணவினையும் காண ஆவல் கொண்டான். நல்லதொரு நாளில் தடாதகைக்கு மங்கல நீராட்டி மணிமுடி கவித்தான். சில நாட்கள் சென்றபின் மலயத்துவசன் மண்ணுடு மகட்களித்து, விண்ணுடு ஏகினுன். மங்கை தடாதகை அரசரெல்லோரும் போற்ற மநுவழியில் நாட்டைப் புரந்துவந்தாள்.

இவ்வாறு ஆண்டுவரும் நாளில் தடாதகையின் தாயார் தன் மகட்கு மணப் பருவம் வந்துற்றமை கண்டு கவலைகொண்டாள். அதனையுணர்ந்த தடாதகை தாயை நோக்கி, 'திருமணம் ஆகும்பொழுது ஆகும்; கவலற்க. யான் இவ்வுலகத்தையும் மற்றைய திசைகளையும் வென்று, வெற்றியை எங்கும் நிலைநாட்டி மீள்வேன்' என்று உரைத்துப் போருக்கெழுந்தாள். தடாதகைப்பிராட்டி நால்வகைப் படைகளும் புடை சூழச் சென்று, மன்னர்களை எல்லாம் புறங்கண்டு, பொன்னகர் காக்கும் புரந்தரன் செருக்கையும் அழித்து அவனிடமிருந்து வெள்ளை யானை, தெய்வத் தருக்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி மீண்டாள். பின்னர் அவள் மற்றைக் காவலர்களையும் வென்று கயிலையங்கிரியை நோக்கிச் சென்ருள்; கயிலையையடைந்து முற்றுகையிடவும் திசைக்காவலர் நந்தியம்பிரானிடம் செய்தியைத் தெரிவிக்க, நந்திதேவன் பூதகணங்களைப் போர் புரிய ஏவினுன். பூதகணங்கள் தடாதகையின் படையோடு போரிட ஆற்ருது புறங்காட்டி ஓடி வருதலைக்கண்ட நந்திதேவன் இச் செய்தியைச் சிவபெருமானிடம் தெரிவிக்க, சிவபெருமான் தாமே போர்க்கோலங் கொண்டு போர்க்களத்தை அடைந்தார். கயிலை

நாயகனைக் கண்ட கயற்கண்ணியாம் தடாதகைப் பிராட்டி, நாணம் மேலிட்டவளாகத் தலை குனியலானாள். அவளையுமறியாமல் உள்ளத்தில் அன்பு பெருக்கெடுத்தது. அச்சம் மேலிட நிலங்கிளைத்து நின்ற தடாதகையை நோக்கி, அவளுடைய அமைச்சன் முன்னொருகால் வானில் எழுந்த இறைவன் வாக்கை நினைத்து, "அன்னையே! இக் கொன்றை யஞ்சடைக் குழகனே நின் மணாளனாவான்" என்று கூறினான். இந்நிலையறிந்த இறைவன் தடாதகையை நோக்கித் தான் மதுரைக்கு வந்து மணம்புரிவதாகக் கூறியருளினான். அவ்வாறே குறிப்பிட்ட நன்னாளில் மதுரையை அடைந்து தடாதகையை மணந்து, சுந்தரபாண்டியன் என்னும் பெயர் பூண்டு செங்கோல் செலுத்தலானான். இவ் வரலாறு பிற்காலப் புலவர்களின் பாடல்களாலும் உணரப்படுவதாகும்.

(iii) மதுரையம்பதியும் மாணிக்கவாசகரும்

முந்திய பகுதியில் மதுரையை ஆண்ட தடாதகைப் பிராட்டியின் திருமணத்தைப்பற்றி அறிந்தோம்; இனி மதுரை மாநகரோடு தொடர்பு கொண்ட மணிவாசகப் பெருமானின் வரலாற்றைக் காண்போம். வையைக்கரை மருங்கு விளங்கும் வாதவூரில் அமாத்திய அந்தணர் குலத்தில் இப்புண்ணிய புருடர் தோன்றினார்; வாதவூரர் என்ற திருப்பெயர் இடப்பெற்றார். வாதவூரர் நான்கு மறைகள், ஆறு அங்கங்கள், எண்ணெண் கலைகள் முதலானவற்றை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். இவர் சிறப்பை அறிந்த அரிமர்த்தன

பாண்டியன் இவரை வரவழைத்து அமைச்சராக்கினன். தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பெயரையும் அளித்தான். இவரும் வேந்தனுக்குக் கண் போன்று விளங்கி முதலமைச்சராய் அலுவல் புரிந்தார். மேலும், இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உன்னி உண்மைப் பொருளாம், பரம்பொருளிடத்து உள்ளன்புகொண்டு ஒழுகிவரலானர்.

இந்நிலையில் பரிகளைப் புரப்போர் பாண்டியனை நோக்கி, " நம் குதிரைப் படையில் பெரும் பான்மையன நோயுடையனவாகவும் மூப்புடையனவாகவும் உள்ளன. ஆதலின் குதிரைப்படையில் சிறந்த குதிரைகள் இலவாயின ' என்று தெரிவித்தனர். பாண்டியன் உடனே வாதவூரரை நோக்கி, ' பெரும் பொருள் கொண்டுசென்று, கடற்றுறையில் வந்திறங்கும் குதிரைகளில் சிறந்தனவற்றை வாங்கி வருக " என்று ஆணையிட்டான். வாதவூரரும் மன்னனிடம் விடைபெற்றுச் செல்லுகையில் திருப்பெருந்துறை என்ற தலத்தை அடைந்தார். ஆங்குள்ள ஆலயத்தை வலம் வருங்கால் குருந்த மரத்தடியில் இறைவன் சனகாதியர் நால்வருக்கும் திருவாய் மலர்ந்தருளாது சின்முத்திரைக் கையனய் இருந்து தெரிவிக்கும் ஆசிரியத் திருக்கோலத்தைக் கண்டார். கண்டமாத்திரத்தில் திருவருள் வந்துகூடவே இறைவனைப் பணிந்தார்; அஞ்சலி செய்தார்; என்பு நெகிழ உருகினர்; அன்பு வலைப்பட்டார்.

இறைவனும் அடியவரைக் கடைக்கணித்து அருள் செய்தான். வாதவூரர் பழுதற்ற சொல்

மணிகளை அன்புக் கயிற்றில் கோத்துப் பாடிப் புகழ்ந்தார். பாட்டில் இன்புற்ற பரமன் வாதவூரருக்கு மாணிக்கவாசகர் என்ற திருப்பெயரைச் சூட்டினான். பின்னர், வாதவூரரின் சுவையுடைய மணிமொழிகளைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவர்கொணர்ந்த பொருளையெல்லாம் அடியார்க்களித்து அதன் பயனாகப் பாண்டியனை முத்தி பெறச்செய்யவும், பௌத்தர்களை வாதில் வென்றிடவும் திருவுளங்கொண்டவனாய், "இத்தலத்தில் இருப்பாயாக!" என்று மொழிந்து மறைந்தான்.

குதிரை வாங்கும் பொருட்டு எடுத்து வந்த பெரும்பொருளை மாணிக்கவாசகர் சிறந்த பூசைகளுக்கும், ஆலயத் திருப்பணிக்கும், சிவனடியாருக்கும் அளித்துச் செலவிட்டார். இந் நிலையில் மன்னன் குறித்த காலத்தில் குதிரைகள் வந்தடையாமையால் அமைச்சராகிய வாதவூரருக்குத் திருமுகம் விடுத்தான். மன்னவன் திருமுகம் கண்ட மாணிக்கவாசகர் செய்வதறியாது திகைத்தார். திருக்கோயிலை அடைந்து, "ஐயனே! பாண்டியனது பொருள் முழுவதையும் நினது ஆலயத்திற்கும், நின் அடியார்க்கும் செலவிடுமாறு நெறி காட்டினாய். ஆதலின், பாண்டியனுக்கு எவ்வாறு பரிகளை வாங்கி அனுப்புவேன்" என்று நவின்று முறையிட்டார். இறைவன், "பரிகளெல்லாம் வருமென ஓலை விடுதி" எனக் கூற, அடியாரும் அவ்வாறே செய்தார். அன்றிரவு வாதவூரடிகளின் கனவில் சோமசுந்தரக் கடவுள் தோன்றி, "யாம்

பரிகளுடன் வருவோம், நீ முன் செல்வாயாக" என்று அருளிச் செய்தார்.

அடிகளாரும் இறைவனைத் தொழுது மதுரைக்குத் திரும்பி, மன்னனது அவையை அடைந்து வணங்கி, "சிறப்புடைய குதிரைகள் பின்னே வருகின்றன" என்று கூறினர். வேந்தனும் அகமகிழ்ந்து அளவிலாச் சிறப்புச்செய்தான். குறிப்பிட்ட மூன்று நாட்கள் சென்ற பிறகும் குதிரைகள் வாராமை கண்ட பாண்டிய மன்னன், சினந்து மாணிக்கவாசகரைத் தண்டித்து, அவர் எடுத்துச் சென்ற பொன்னையெல்லாம் சிறிதளவும் குறையாது திரும்பப் பெறுமாறு காவலர்க்குக் கட்டளையிட்டான். மன்னன் ஆணையைச் சிரமேலேற்ற மறவர் சிலர் வாதவூரடிகள் தலையில் பெருங்கல்லை ஏற்றிச் சுமக்கச்செய்தனர்; கைகால்களைக் கட்டித் துன்புறுத்தினர்; சங்கிலியாற் பிணைத்துச் சிறையில் இட்டனர். சிறையுற்ற மணிவாசகர் ஆலவாய் இறைவனை எண்ணிக் கண்ணீர் சோர முறையிட்டார். தொண்டரின் துன்பங் கண்டு இரங்கிய மதுரேசர் ஆவணி மூல நன்னாளில், நரிகளைப் பரிகளாக்கிப் படைத்தலைமை பூண்டு செலுத்திவந்தார். குதிரைகளின் வருகையைக் கண்டோர் மன்னனை யடைந்து தெரிவித்தனர். அரசன், அமைச்சராகிய வாதவூரரை விடுவித்துச் சிறப்பித்தான். குதிரைகள் மன்னன்முன் வந்தடைந்தன. குதிரைப் படைத்தலைவனாக வந்த இறைவன் அவற்றை மன்னனிடம் ஒப்படைத்தான். அன்றிரவு பரிகளெல்லாம் இறைவன் திருவருளால் நரிகளாயின; மக்களுக்கும், மற்றைய விலங்குகளுக்கும் தீங்கிழைத்துவிட்டுக் காட்டிற்கு ஓடின.

பரிகளைக் காப்போர் இச்செய்தியை மறுநாட் காலை மன்னனுக்கு அறிவித்தனர். வேந்தன் வெகுண்டு வாதவூரரை அழைத்து, " நீர் மாயத்தால் நரிகளைப் பரிகளாக்கிக் கொணர்ந்தீர். அவை பல தீங்கிழைத்தன. அன்றியும், காலங்கருதியிருந்து எமது பொருளைக் கவரவே இக் காரியம் செய்தீர்" என்று கூறித் தண்டலாளர்களை நோக்கி, அவரைத் தண்டித்துப் பொருளை வாங்குமாறு பணித்தான். காவலர், அடிகளாரைக் கொடிய பகற் பொழுதில் வையையாற்றின் சுடுமணலில் நிறுத்திக் கைகளிலும் தலையிலும் கல்லைச் சுமத்தித் துன்புறுத்தினர். துன்பத்தைப் பொறுக்க இயலாது வாதவூரர், சொக்கநாதரை நினைந்து அழுது தொழுதார். அடியவர்க்கருளும் சொக்கநாதர் உடனே வையை யாற்றில் நீர் பெருகச் செய்தார். வெள்ளப் பெருக்கைக் கண்ட காவலர் அஞ்சி வாதவூரரை விடுத்து ஏகினர்.

நகரினுள் கடலெனப் பரந்துவரும் வெள்ளத்தைத் தடுக்க அமைச்சர்க்கு ஆணையிட்டான் அரிமர்த்தன பாண்டியன். அமைச்சரும் குடிமக்களை அனுப்பி அவரவர்க்கெனச் சில பகுதிகளை ஒப்படைத்துக் கரையிடுமாறு ஆணையிட்டனர். நகரின் தென்கீழ்த் திசையில் வந்தி யென்னும் நரை மூதாட்டி யொருத்தி வாழ்ந்து வந்தனள். அன்னவள் சுவையுறு பிட்டு விற்றுப் பிழைத்து வந்தாள். சிவபக்தி மிக்கவள். அவளுக்கென ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தமையால் அதனை யடைக்கக் கூலியாளைப் பெற இயலாது வருந்தினாள்; தன் துன்பநிலையை இறைவனிடம் முறையிட்டாள். மதுரேசர்

அவளது வேண்டுகோளுக்கிணங்கி அழுக்கடைந்த பழந்துணியொன்றை அரையிற்கட்டிக் கொண்டும், தலையில் முடிமீது கொண்ட சுமையடைமேல் கூடையைக் கவிழ்த்துக்கொண்டும், தோளில் மழுங்கிய மண்வெட்டியைச் சுமந்து கொண்டும் வந்தி வாழும் வீதியை அடைந்தார். கூலியாளைக் கண்ட வந்தி மகிழ்ந்து தன் பங்கை அடைக்குமாறு கூறினாள்; கூலியாகப் பிட்டமுதை ஈந்தாள். இறைவனும் வந்திக்கென ஒதுக்கப்பட்ட பகுதியை அடைந்து அடைப்பதும், உடைப்பதும் ஆகிய செயல்களைச் செய்தும், தான் வேலை செய்யாமையோடன்றி மற்றவரையும் வேலை செய்யவிடாது தடுத்தும் வந்தான். இச்செயலை அறிந்த ஏவல்கொள்வார் பாண்டியனுக்குணர்த்த அவன் கனன்று, கையில் இருந்த பிரம்பினால் கூலியாளாக வந்த மதுரேசர் முதுகில் அடித்தனன். இறைவனும் மண்ணை உடைப்பில் கொட்டி மறைந்தான். அரசன் அடித்த அடி பாண்டியன் முதுகிலும், மற்றைய அமைச்சர், குடிகள், பிற உயிரினங்கள் ஆகிய யாவர் முதுகிலும் பட்டது.

அதுகண்டு வியந்த மன்னன் அச்சமுற்று நின்றான். அவ்வேளை இறைவன், வானில் தோன்றி, "வழுதியே! நின் பொருளியாவும் அறத்தாற்றில் ஈட்டப் பெற்றனவாயாதலின் அப்புனிதமான பொருள்களை எமக்கும் எம்மைச் சேர்ந்தவர்க்கும் வாதவூரன் அளித்துதவினான். ஆனால், நீயோ உண்மையுணராது அவ் வாதவூரனைத் தண்டித்த காரணத்தால் நரிகளையெல்லாம் பரிகளாக்கிக்

கொண்டுவந்தோம். அவை இடர் விளைத்து இரவில் ஏகவும், பின்னும் வாதவூரருக்குத் துன்பம் இழைத்தனை. அது பொருது வையையில் நீர் பெருகச் செய்தேம். வந்தியின் பொருட்டுக் கூலியாளாய் வந்து அவள் கொடுத்த பிட்டையும் உண்டு, பங்கையும் அடைத்தேம். அவளது இடும்பையையும் தீர்த்து எமது உலகையும் அவளை அடையச் செய்தேம். இத்துணை அருஞ் செயல்களை யெல்லாம் யாம் செய்தது வாதவூரனின் பொருட்டேயாம். அன்னன் உனக்கு இம்மையோடு மறுமை வாழ்வையும் தேடித் தந்த மேலோன் ஆவான். ஆதலின், அவனை அவன் விருப்பப்படியே வாழவிட்டு, அளவிலாச் செல்வங்களை அடைந்து நீ வாழ்வாயாக!" என்று கூறி மறைந்தான்.

பாண்டியனும் இறைவனை யிறைஞ்சி, கோயிலை வந்தடைந்தான்; ஆங்கு மாணிக்கவாசகரைக் கண்டு வணங்கி, விடைபெற்று அரண்மனைக்கு மீண்டான். பின்பு அரிமர்த்தன பாண்டியன் நாளடைவில் மகப்பேறு பெற்று மகனுக்கு முடிசூட்டி, வாழ்வாங்கு வாழ்ந்து இறைவன் திருவடி நிழலை யடைந்தனன்.

வாதவூரர் பல பதிகளுக்கும் சென்று இறைவனை வழிபட்டு, தில்லை மூதூரை அடைந்தார். அவண் இலங்கையிலிருந்து வந்திருந்த பௌத்தர்களோடு வாதம்செய்து வென்றார். இவ்வாறு சிவத்தொண்டு புரிந்த வாதவூரர். சோழ மன்னன் மகளின் மூங்கைத்தன்மையை நீக்கினார்.

அன்னார் தேனினும் இனிய திருவாசகம் என்ற நூலையும், திருக்கோவையாரையும் இயற்றி முடித்தார். பலகாலம் சிவபெருமானை வாழ்த்தி வழிபட்டு இறுதியில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் மணிவாசகர்.

(iv) மதுரையம்பதியும் திருஞானசம்பந்தரும்

பல்வளங்களும் நிறையப்பெற்ற பாண்டிய நாட்டைக் கூன்பாண்டியன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அக்காலத்தில் சிவநெறியானது குன்றிச் சமணசமயம் ஓங்கியிருந்தது. பாண்டியனும் சமண சமயநெறியையே பின்பற்றி வரலானான். வலிமிக்க இம்மன்னன் வளவனையும், வானவனையும் போரில் புறங்காட்டி ஓடுமாறு செய்தான். தோல்வியுற்ற சோழ அரசன் தன் மகள் மங்கையர்க்கரசியைப் பாண்டியனுக்கு மணம் செய்வித்தான். பாண்டியனுக்குப் பரிசில்களையும், சீர்வரிசைகளையும் வழங்கித் தன்பால் இருந்த அறிஞராகிய குலச்சிறையார் என்ற அமைச்சரையும் உடன் அனுப்பிவைத்தான்.

சோழர் குலக்கொடி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் ஆகிய இருவர் மட்டுமே சைவ நெறியிலிருந்து பிறழாது இருந்ததோடு மன்னன் சமண சமயத்தைப் பின்பற்றியதை எண்ணி வருந்திவந்தனர். நன்னெறியில் ஒழுகும் அம்மையாரும், அமைச்சரும் ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் செய்துவரும் அற்புதங்களை எல்லாம் கேள்வியுற்று, அகமகிழ்ந்து, சைவ நெறி தழைக்கச் செய்யும் அப் பிள்ளையைத் தம் நாட்டிற்கு வருவிக்க எண்ணினர்;

காழி அண்ணலை மதுரைக்கு அழைத்துவருமாறு சில பரிசனங்களை விடுத்தனர்.

குலச்சிறையார் அனுப்பிய தூதுவர்கள் திருமறைக் காடு சென்று அங்குத் தங்கியிருந்த திருஞானசம்பந்த ரிடம் பாண்டிய நாட்டின் நிலைமையையெல்லாம் கூறித் தம் நாட்டிற்கு எழுந்தருளுமாறு அவரை வேண்டினர். அதுபொழுது சம்பந்தரின் அண்மையிலிருந்த நாவுக் கரசர் சமணர்கள் கொடுமையை உய்த்துணர்ந்தவ ராதலின். அவர்கள் இயல்புகளைக் கூறிச் சம்பந்தப் பெருமானிடம் போகவேண்டாம் என்று உரைத்தார். திருஞானசம்பந்தர், 'சிவனைத் துதிக்கும் நமக்கு எத்தகைய தீங்கும் வராது' என உரைத்து நாவரச ரிடம் விடை பெற்றுப் பாண்டிய நாடு அடைந்தார். ஆங்கு, மணமுடைய மலர்க் கொத்துக்களை இரு மருங்கும் வீசி வருகின்ற ஆறுகளையும், மான் துள்ளும் காடுகளையும், வளம் மிக்க மலைகளையும், நீர் நிறைந்த நாடுகளையும் அவர் கடந்து, மதி தவழும் மதில்கள் சூழும் மதுரை மாநகரத்தின் எல்லையை அடைந்தார்.

இஃது இவ்வாறிருக்க, மங்கையர்க்கரசியாருக்கும், குலச்சிறையாருக்கும் பல நன்னிமித்தங்கள் தோன்றின. மனமகிழ்ந்த அரசியார் அமைச்சரை நோக்கி அண் ணலை அழைத்து வருமாறு பணித்தார். அமைச்சரும் ஆணை வழி நடந்து திருஞானசம்பந்தரை அழைத்து வருகையில் ஆலவாய்க் கோயிலுக்குச் சென்று, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாருமாகிய இருவ ரின் தொண்டுகளையும் சிறப்பித்துப் பதிகம் ஒன்று பாடியருளினர். பின்பு கோயில் திருமுன்றிலில் வருங் கால், சோழர்குலப் பெருமாட்டியான தேவியார்,

சிவக்கன்றாகிய சம்பந்தப் பெருமானுடைய திருவடி களில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றார். பின் குலச் சிறையார், சம்பந்தப்பெருமான் எழுந்தருளுவதற்குரிய திருமடத்தைக் காட்ட, ஆங்கு அடியார்களோடு அன் னார் இனிதே தங்கியிருந்தார்.

சம்பந்தர் வருகையையும்; அடியார்கள் ஓதும் திருப்பதிக ஓசையையும் கேள்வியுற்ற சமணர்கள் அரசனிடத்துச் சென்று நடந்ததைக் கூறி, சம்பந்தருக் குத் தீங்கு இழைத்து அவரை அகற்றவேண்டும் என்றனர். அக்கூற்றை நம்பின பாண்டியன் 'ஆவன செய்யுங்கள்' எனக் கூறினான். சிவனடியார்கள் துயில் கின்ற திருமடத்திற்குச் சமணர் தீமூட்டி மறைந்தனர். தீயின் வெம்மை உணர்ந்த அடியார்கள் துயிலெழுந்து பிள்ளையாரிடம் தெரிவித்தனர். காழிப் பிள்ளையார். 'வெய்ய தீங்கு இது வேந்தன் மேலதேயாம்' என்ற முறையை எண்ணி, "சிவனடியார்கள் வாழும் திரு மடத்திற்கு சமணர் கொளுவிய தீ, பையவே சென்று பாண்டியனுக்கு ஆகுக" என்று பணித்தார். மங்கை யர்க்கரசியாரின் மங்கல நாணினைப் பாதுகாத்தல் வேண்டுமாதலாலும், மந்திரி குலச்சிறையாருடைய அன்பினாலும், அரசன் சமணர்கள் தவற்றுக்குக் காரண மாக இருந்தமையாலும், மன்னன் மீண்டும் சைவனாகி நல்வினை புரியும் ஊழ்வினை இருத்தலாலும், நோய் தீர்த்துக் கூன் நிமிர்த்தித் திருக்கரத்தால் தீண்டும் பேறு உடைமையாலும் "பையவே செல்க" என்று பணித்தார். வெந்தழல் வெப்பு நோயாகிப் பாண்டி யனைப் பற்றியது.

தேவியாரும், சமணர் செயல் கேட்டு வருந்தி யிருக்கையில் பாண்டியற்கு உற்றதை மெய்க்காப்பாளர்

உணர்த்தப் பதைபதைத்து, அரசனைக் காண விரைந்து சென்றார். அமைச்சரும் அவ்வாறே அரசனை அடைந்தார். சுற்றிலும் சமணர்கள் சூழ்ந்துகொண்டு நோய்க்கு மூலம் எதுவென உணராதவராய் மணி, மந்திர, மருந்துகளால் நோயைத் தீர்க்க முயன்றனர். ஆனால், நோய் மேலும் மேலும் மிகுதியாகத் துன்பத்தைக் கொடுத்தது. மன்னவனும் ஆற்றாது, சமணர்களை நோக்கி, 'இங்கிராது போமின்' என்று கூறி உணர்வு சோர்ந்து மயக்கமுற்றான். மயக்கம் சிறிது நீங்கியபின் மங்கையர்க்கரசியாரும், அமைச்சரும் மன்னவனை வணங்கி, "மதுரைக்கு வந்த தமிழ்ப் பிள்ளையாருக்குச் சமணர்கள் செய்த தீமையினால் வந்த தீங்காகும் இது. இந்நோய் அவ் வண்ணலாரின் திருவருளால்தான் நீங்கும். ஆதலால், அவர் விரும்பி நோக்கினால் இந்தத் தீப்பிணியே யல்லாமல் பிறவிப் பிணியும் தீரும்" என்றனர். மன்னனும் சற்றுத் தெளிந்து, "அங்ஙனமாயின் அவரை அழைத்து வாருங்கள். அவருடைய அருளால் இந் நோய் நீங்கிடின் உண்மை நிலையினை அறிவேன். பிணியைத் தீர்த்து வெல்லுபவர் யாவரோ, அவர் பக்கம் சேர்வேன்" என்று மொழிந்தான்.

பின்னர் இருவரும் சம்பந்தப்பெருமான் எழுந்தருளியிருந்த திருமடத்தை அடைந்து, வணங்கி, வந்த நோக்கத்தை எடுத்துரைத்தனர். பிள்ளையாரும் அடியார் குழாத்தோடு ஆலவாய்ப் பிரானை வணங்கித் துதித்து, அருள் விடைபெற்று அரண்மனையை அடைந்தார். சம்பந்தரைக் கண்டதும் மன்னவன் கைகூப்பி வணக்கம் கூறித் தம் பக்கத்தில் இடப்பட்டிருந்த பொன் இருக்கையில் எழுந்தருளும்படி

வேண்டிக் கொண்டான். சம்பந்தர் அமர்ந்தபின், அரசன் விருப்புடன் அவரை நோக்கி, "தங்கள் ஊர் யாது?" என வினவவும், பிள்ளையார் சீகாழிக்கு உள்ள பன்னிரண்டு திருப்பெயர்களையும் கூறிக் "கழுமலம் யாம் கருதும் ஊர்" என்று நவின்று அருளினார்.

வெப்பு நோய் வாதம்: சம்பந்தர் எழுந்தருளிய நிலையைக் கண்ட சமணர்கள் அங்குச் சூழ்ந்து கொண்டு வாதுசெய்ய வருமாறு கூவினார்கள். அது கண்ட மன்னவன் இரு திறத்தாரையும் நோக்கி, "இவ்வெப்பு நோயினை நீங்கள் இருவரும் தனித்தனியே நீக்க முற் படுங்கள். தெளிவு பெறத் தீர்த்தவர்களே வாதில் வென்றவர்களாவர்" என்றான். அதற்கு உடன்பட்டுச் சமணர்கள் தாங்கள் இடப்பக்கத்து வெப்பத்தைத் தீர்ப்பது எனவும், பிள்ளையார் வலப்புறத்து நோயைத் தீர்ப்பது எனவும் முடிவு செய்து, தீர்க்க முற்பட்டனர். சமணர்கள் தங்கள் கைகளில் கொண்ட மயிற் பீலி களால் தடவியும், மந்திரங்களை ஓதியும் இடப்புற நோயைத் தீர்க்க முயன்றனர். ஆனால், நோய் தீரப் பெறாது மென்மேலும் ஓங்கியது. நோயின் வெம்மைக்கு ஆற்றாது அரசன் சம்பந்தப் பெருமானை வணங்கினான்; குறிப்பால் நோக்கினான். பின்பு சம்பந்தர் "மந்திர மாவது நீறு" என்று தொடங்கும் திருநீற்றுப் பதிகத் தைப் பாடித் திருநீற்றினைக் கொண்டு தமது திருக்கை யால் அரசனது உடலின் வலப் பக்கத்தில் தடவினார். பாண்டியனது வலப்புறம் நோய் நீங்கிக் குளிர்ந்தது. ஆயினும், இருபுறத்தின் வெப்பமும் ஒன்றுகூடி இடப் பக்கத்தில் அதிகமாயிற்று. மன்னன் இடப் புறத்தில் இருந்து வருத்திய நோயையும் தீர்க்குமாறு வேண்டிக் கொண்டான். சம்பந்தரும் திருநீற்றுத் திருப்பதி கத்தை முடித்துப் பாடி, திருநீற்றை எடுத்துப்

பாண்டியன் உடலிற் பூசினர். இடப் பக்கத்து வெப்பு நோயும் உடனே தீர்ந்தது. பாண்டியன் இன்பமுற்று எழுந்து சம்பந்தருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, "நான் உய்ந்தேன்" என்று கூறித் துதித்தான்.

அனல் வாதம்: சமணர்கள் தம்முடைய மந்திர வித்தைகள் முழுவதும் திருஞான சம்பந்தருடைய சொற்களாற் பயனின்றி யொழிந்தமை கண்டு, "அவரைத் தருக்க வாதத்தால் வெற்றி கொள்ள இயலாது; ஆதலால் தீயினுலும், நீரினுலும் வெற்றி பெறுதல்வேண்டும்" என எண்ணினர். பாண்டியன் முன்னிலையில் அவர்கள், "இருதிறத்தினரும் தத்தம் சமய உண்மைப் பொருளின் கருத்தினை ஏடுகளில் எழுதி அனலில் இடுவோம். எவ்வேடு அவ்வனலில் வேகாது விளங்குகின்றதோ அச்சமயமே வென்றதாம்" என்று கூறினர். சம்பந்தரும் அதற்கிசைந்து, திருநள்ளாற்றுப் பதிகத்தைக் கொண்ட ஏட்டை யாவரும் காணும்படி தீயிடை இட்டார்.

இட்ட அவ்வேடு தீயில் வேகாது இருந்ததோடன்றிப் பசுமையாகவும் விளங்கியது. சமணரும் தமது சமய உண்மைப் பொருளை எழுதிய ஏட்டைத் தீயில் இட்டனர். இட்ட நிமிடமே ஏடு எரிந்தொழிந்தது. இவ் வாதத்திலும் சம்பந்தர் வெற்றி பெற்ருர்.

புனல் வாதம்: இரு முறையும் வெற்றி காணுத சமணர், "இரு முறை வாது புரிந்து தோற்ருேம்; இன்னும் ஒரு முறை வாது செய்வோம். மூன்று முறைகளில் ஒரு முறையேனும் வெற்றி காண்போம்" என்று பகர்ந்தனர். பிறகு சம்பந்தரை நோக்கி, "மெய்ப்

பொருள் எழுதிய ஏட்டினை ஓடுகின்ற வையையாற்றில் இடுவோம். ஆற்றொழுக்கிற் செல்லாது எதிர்த்தேகும் ஏடே மெய்ப் பொருளுடையது" என்று கூறிட, அதற்கும் ஆளுடைய பிள்ளையார் உடன்பட்டார்.

யாவரும் வையையை அடைந்தனர். சமணர் தம் சமய மந்திரமொன்றை ஏட்டில் வரைந்து ஆற்றில் இட்டனர். அப்பொழுதே அதனை ஆற்று நீர் விரைந்து அடித்துச்சென்றது. உடனே திருஞானசம்பந்தர், "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று தொடங்கிய பன்னிரண்டு திருப்பாடல்களைப் பாடி ஏட்டில் எழுதச் செய்து அந்த ஏட்டைத் தமது திருக் கரத்தால் வையையில் இட்டார். அந்த ஏடு இறைவன் திருவருளால் ஆற்று நீரில் எதிர்த்துச் சென்று திரு ஏடகம் என்ற திருத்தலத்திற்கு அருகில் நின்றது. பாண்டியனும் சம்பந்தர் அருளால் தனது கூன் நீங்கப் பெற்று நின்றசீர்நெடுமாறன் ஆனான்; மதுரை யெங்கும் சைவநெறி தழைத்தோங்கியது.

(v) மூர்த்தி நாயனார்

முத்தமிழ் வளர்த்த மூதூரான மதுரை மாநகரில் முன்னொருகால் வணிகர் குலத்தில் மூர்த்தியார் என்ற செந்நெறியாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அப்பெரியார், 'சிவபெருமான் திருவடிகளைத் தொழுதலே சிறப்புடையது' என அறிந்து நாடோறும் ஆலவாய் இறைவனுக்குச் சந்தனக் காப்புச் சாத்தும் திருத்தொண்டினை ஆற்றி வந்தார். எக்காரணத்தாலும் அப்பணிக்கு இடையூறு வராது பணியாற்றுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

இந் நிலையில் வடுகர் குலத்தைச் சேர்ந்த கருநாடக மன்னன் மதுரையைக் கைப்பற்றித் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியலானன். அவன் சைவத்துக்கு ஊறிழைத்தான்; அடியாராகிய மூர்த்தி நாயனுர்க்கும் இன்னல்கள் பல இழைத்தான். மூர்த்தியாரும் அவற்றைப் பொருட்படுத்தாது, தம் பணியை விடாது தொடர்ந்து செய்து வந்தனர். அது கண்டு பொருத மன்னன் அவர்க்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காத வாறு செய்தான். ஆதலால் நாடு முழுவதும் தேடியும் சந்தனக்கட்டைகள் கிடைக்கப் பெருமையால் வருந்தி, அவ்வடியார் திருக்கோயிலை அடைந்தார்.

சந்தனக் கட்டைக்கு மாருகத் தம் முழங்கையைச் சந்தனக் கல்லில் தேய்க்கத் தொடங்கினுர். குருதி பெருகித் தோலும் எலும்பும் தேய்ந்தன. இச் செயலைக் கண்ட சிவபெருமான் காட்சி தந்து, "தீங்கிழைத்த இம் மன்னன் மடிய, நீ ஆட்சியை ஏற்றுத் திருத் தொண்டு செய்து சிவலோகத்தை அடைதி" என்று கூறி மறைந்தார். ஊறுபாடடைந்த உடல் நல்லுடல் ஆகியது.

இறைவன் கூறியவண்ணம் அன்றிரவே மன்னன் இறக்க, அமைச்சர்கள், "பட்டத்து யானையை அழகுறச் செய்து அனுப்புவோம்; அஃது யாரை எடுத்து வருகிறதோ அவரையே அரசனுகக் கொள்வோம்" என்று முடிவு செய்து யானையை விடுத்தனர். பட்டத்து யானை மூர்த்தி நாயனுரைக் கண்டு வணங்கி அவரை முதுகின் மீது எடுத்து வந்தது. அது கண்ட அமைச்சரும் மக்களும் மகிழ்ந்தனர். அரசேற்ற நாயனுர் சைவ நெறி தழைக்குமாறு திருநீறு, உருத்திராக்கம்,

சடைமுடி இம் மூன்றையும் தம் திருமேனியிற் கொண்டு அரசாண்டார். நாடு நன்னிலை அடைந்தது.

(vi) தமிழ் கண்ட வையை

மதுரையின் வளம்: ஒரு நாடு தழைத்தோங்க நீர் வளம் இன்றியமையாததாகும். அந்நீரையளித்து நல்வளம் பெருகச் செய்யும் பேராறுகள் பல நம் நாட்டில் உள்ளன. அவற்றுள் மதுரைப் புறத்தைத் தொன்றுதொட்டு செழிக்கச் செய்து வருவது வையை ஆருகும். இவ் வையையில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருப்பதில்லை, மாரிக்காலத்து மட்டுமே இதன் நீர் வேளாண்மைக்குப் பயன்படுகிறது. என்ருலும், வையை மதுரையின் வளத்துக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பெரிதும் காரணமாக இருந்து வந்துள்ளது. அன்றியும் இலக்கியங்களிலும் புராணங்களிலும் இந்த ஆறு சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது.

வையையும் தமிழ் நூல்களும்: செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் வையை ஆறு புகழ்ந்து உரைக்கப்படுகிறது.

"உலகு புரந்தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்து
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி"
"வையை என்னும் பொய்யாக்குலக்கொடி"

என்பர் இளங்கோ அடிகள். பரிபாடல் என்னும் தொகை நூலுள் வையையைப் பற்றிய இசைப் பாடல்கள் உள்ளன. இந்த ஆற்றில் ஆற்றிடைக் குறைகளும், வெள்ளிய மணல் திட்டுகளும் இருந்தன என்றும், மதுரையைச் சூழ்ந்திருந்த மதிலின்மீது இதன்

நீர்ப்பெருக்கு மோதும்படியாகச் சென்றது என்றும் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. மேலும் பத்துப் பாட்டு, புறநானூறு, அகநானூறு முதலிய நூல்களிலும் இவ் வையையைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. சமணர்க்கும் சைவர்க்கும் நடந்த புனல் வாதம் இவ் வையை யாற்றில்தான் நிகழ்ந்தது என்பதையும், ஆலவாய்க் கடவுள் பிட்டுக்கு மண் சுமந்தது இவ்வாற்றின் நீர்ப்பெருக்கால் என்பதையும் நாம் அறிவோம். வையையில் நிகழ்ந்த புனல் வாதத்தைப் பாட்டில் அமைத்துப் பாடிய பாவலர் பலர். தமிழ் மொழியைச் சிறப்பிக்கப் போந்த புலவர் வில்லி,

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து, வையை
ஏட்டிலே தவழ்ந்த பேதை"

என்று குறிப்பிட்டுள்ளார். அமரகவி பாரதியாரும் தென்னாட்டு ஆறுகளைத் தொகுத்துக் குறிக்குமிடத்து,

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி"

என்று வையை யாற்றின் சிறப்பைத் தமிழோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்.

"நாலடியார்" தோன்றியது: ஒருகால் தாம் வாழ்ந்த பகுதியில் கொடிய பஞ்சம் ஏற்பட்டதனால் சமண முனிவர்கள் பாண்டிய நாட்டை அடைந்து பாண்டியனின் ஆதரவுபெற்று மதுரையில் வாழ்ந்தனர். அவருள் பலர் தமிழை நன்கு கற்றறிந்து, பாண்டியன் அவைக்களத்துத் தமிழ்ப் புலவராய்

விளங்கி வந்தனர். பல ஆண்டுகளுக்குப் பின் தாம் வாழ்ந்த பகுதி மழை வளத்தால் செழித்தமை அறிந்த சமணர்கள் தம் இருப்பிடம் செல்லப் பெரிதும் விரும்பிப் பாண்டியனிடத்துத் தமது விருப்பத்தைக் கூறினர். கற்றறிந்த சமணப் புலவர்களைப் பிரிய மனம் இசையாத பாண்டியன் விடை கொடாது காலந்தாழ்த்தி வந்தான்.

ஒரு நாள் இரவு சமணர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்க்கைப் பேறுகளை விளக்குமாறு அமைந்த பாடல்களைக் கொண்ட ஏடுகளைத் தத்தம் இருக்கைகளின் கீழிட்டு அகன்றனர். பொழுது புலர்ந்ததும் புலவர்களைக் காணுது அரசன் பணியாளர்களைக் கூவி அப்புலவர்களின் இருக்கைகளை அகற்றக் கட்டளையிட்டான். அப்பொழுது அவ்விருக்கைகளின் கீழ் பாடல்கள் எழுதப் பெற்ற ஓலைத் துண்டுகள் காணப்பட்டன. புலவர்களின் செயலைப் பொருத மன்னன் வெகுண்டு, வெறுப்புடன் அவ்வோலைத் துண்டுகளை வாரி வையையில் எறியுமாறு காவலாளர்க்குக் கூறினுன். வையையில் எறியப்பட்ட ஏடுகளில் நானூறு ஏடுகள் ஆற்றின் போக்கிற் செல்லாது நீரை எதிர்த்துச் சென்றன. இவ்வற்புதத்தைக் கண்டு வியந்த மன்னன் அவைகளை ஒருங்கு திரட்டித் தொகுக்கச் செய்தான். அத்தொகை நூலே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகிய நாலடியார் என்னும் நீதி நூலாம். இப்பழைய வரலாறும் வையையாற்ருேடு இயைபுடையதாக வுள்ளது. இக்காரணங்களால் வையை யாற்றைத் "தமிழ் வையை" என்று பரிபாடல் குறிப்பிடுவது பொருத்தமுடையதேயாகும்.

4. மதுரையும் பாண்டிய மன்னர்களும்

சங்க காலப் பாண்டியர்

மதுரை மாநகரம் ஏற்றத்திற்கும் எழிலுக்கும் நிலைக்களனாக இருப்பதற்கு வழிவகுத்தவர்கள் சங்க காலப் பாண்டியரும், அவர்களுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த மன்னர்களுமே ஆவர். அவர்களுள் ஒரு சிலரைப் பற்றி இங்குப் பார்ப்போம்.

கடைச்சங்க காலத்தில் மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவர்கள் சற்றேறக் குறைய ஓராயிரத்து எண்ணூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்றும் நூல்கள் கூறுகின்றன. நாற்பத்தொன்பதின்மர் அரசாண்டனர் எனக் குறிப்பிட்டிருப்பினும் அவர்களுள் ஒரு சிலரைப் பற்றியே நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. அவர்களுள் மிகக் குறிப்பிடத்தக்கவர் முடத்திருமாறன், பொற்கைப் பாண்டியன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன், கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி முதலியோர் ஆவர்.

(i) பாண்டியன் முடத்திருமாறன்

இப்பாண்டிய மன்னவன் இடைச்சங்க காலத்தே கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களில் இறுதியாகக் கூறப்படுபவன் ஆவான். இவன் காலத்தில்தான் கடல்கோள் தோன்றிக் கபாடபுரத்தைக் கொள்ளை கொண்டது.

அதனல் இம்மன்னவன் வடதிசை நோக்கி வந்து, இன்றைய மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிவாஞனன். மேலும், மதுரை மாநகரத்தில் கடைச் சங்கத்தை நிறுவித் தமிழாய்ந்து பெரும் புகழ்பெற்றான். இம்மன்னவன் புவியரசனகத் திகழ்ந்ததோடு கவியர சனகவும் திகழ்ந்தான் என்பது, இவன் பாடியனவாகக் கூறப்படும் நற்றிணையிலுள்ள இரண்டு செய்யுட்களால் நன்கு அறியலாம்.

(ii) பொற்கைப் பாண்டியன்

இம்மன்னவன் நீதிமுறை தவருது நேர்மையுடன் ஆண்டு வந்தவன் எனச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. தான் கோல் முறை திறம்பாத கொற்றவன் என்பதை மெய்ப்பித்துக் காட்டவே இம் மன்னவன் தன் கரத்தைக் குறைத்து, பொற்கையினைப் பெற்றுப் பொற்கைப் பாண்டியன் என்ற பெயரையும் அடைந்தான் என்பது வரலாறு ஆகும்.

(iii) ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இம் மன்னவன் பெயரைச் சார்ந்திருக்கும் அடை மொழியால் இவன் ஒல்லையூர் என்ற ஊரை வெற்றி கொண்ட மன்னவன் என அறியலாகும். இம் மன்னவன் சிறந்த தமிழ்ப் புலமை பெற்றிருந்தனன் என்பது இவன் பாடிய தமிழ்ப் பாடல்களால் நன்கு அறியப் பெறலாகும். இவன் பாடியனவாக அகநானூற்றிலும், புறநானூற்றிலும் பாடல்கள் உள்ளன. இம் மன்னவனேயன்றி இவன் மனைவியாகிய பெருங் கோப்பெண்டும் சிறந்த தமிழ்ப்புலமை பெற்றிருந்தார். இவ்வம்மையார் சிறந்த கற்பரசியுமாவார். தம் கணவன் இறந்த காலத்தே இவர் தாமும் தீப்பாய்ந்து

உயிர்விடத் துணிந்தார். அவ்வமயம் சான்றோர் பலர் இவரைத் தடுக்க, இவர் அவர்களை மறுத்து, "பல் சான்றீரே, பல்சான்றீரே" என்ற பாடலைப் பாடித் தீப் பாய்ந்து உயிர் துறந்தார் எனின் இவர்தம் கற்பின் திறனை என்னென்று இயம்புவது ?

(iv) பாண்டியன் நெடுஞ்செழியன்

இம் மன்னவன் ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் எனவும் அழைக்கப்படுகின்றான். இவன் சிறந்த போர் வீரன்; நீதி தவருதவன்; சிறந்த புலவனும் ஆவான். ஊழ்வினை வசத்தால், குற்றமற்ற கோவலனைக் கொன்ற தன் அறியாமையை நினைந்து, அரியாசனத்திலேயே தன் உயிரை விட்டு நீதியை நிலைநிறுத்தினன் என்பது சிலப்பதிகாரத்தால் அறிகின்றோம். இவன் பாடிய, "உற்றுழி உதவியும்" என்ற புறநானூற்றுப் பாடல் கற்றலின் இன்றியமை யாமையையும், இம் மன்னவன் கல்வியினிடத்துக் கொண்ட ஈடுபாட்டினையும் நன்கு எடுத்துக்காட்டும்.

(v) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

இவன் இளமையிலேயே தலையாலங்கானம் என்ற இடத்தில் தன்னை எதிர்த்த சேர, சோழர் என்ற இரு பெரும் வேந்தர்களையும், அவர்கட்குத் துணையாக நின்ற ஐம்பெரு வேளிர்களையும் தான் ஒருவனுகவே தனித்து நின்று, வெற்றி வாகை சூடிய பெரு வீரனு வான். இம் மன்னவன் மாங்குடி மருதனுர், நக்கீரர் இரு பெரும் புலவர்களாலும் போற்றப்பட்டவன் ஆவான். அவர்களால் பாடப்பெற்ற மதுரைக்காஞ்சி,

நெடுநல்வாடை என்ற இரு பெரும் நூல்களுக்கும் இவன் தலைவன் ஆவான். இம்மன்னவன் பாடியதாக வுள்ள "நகுதக் கனரே" என்று தொடங்கும் புற நானூற்றுச் செய்யுளால் இவனுடைய வீரத்தை உணர் வதுடன் புலமையையும், தமிழ்ப்பற்றையும், தமிழ்ப் புலவர்கள்பால் கொண்டிருந்த பெருமதிப்பையும் நன்கு அறியலாம்.

(vi) கானப்பேர் கடந்த உக்கிரப்பெருவழுதி

கடைச்சங்கக் காவலர்களாக இருந்த பாண்டிய மன்னவர்களுள் இம் மன்னவனே இறுதியானவன் ஆவான் என்பது ஆராய்ச்சியாளர் கொள்கையாகும். வேங்கை மார்பன் என்ற பகையரசனைக் காளையார் கோயில் என இன்று வழங்கப்படும் "கானப் பேரெயில்" என்ற ஊரில் வென்று, அந் நகரைக் கைப் பற்றினன் என்று நூல்கள் கூறுகின்றன. நற்றிணை என்ற நூலை, உப்பூரிகுடி கிழார் மகன் உருத்திரசன் மனைக்கொண்டு தொகுப்பித்தவன் இவன் என்று கூறுவர். இவன் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றுமாக இரு பாடல்கள் உள்ளன. மதுரையில் இருந்த கடைச்சங்கம் இவன் காலத்திற்குப் பிறகு கலைந்துவிட்டதாகத் தெரிகின்றது.

இடைக்காலப் பாண்டியர்

உக்கிரப் பெருவழுதிக்குப் பின்னர் பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களைப் பற்றித் தெளிவாக அறிதற்கு ஒன்றும் இல்லை. கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய நாட்டைக் களப்பிரர் என்போர் சிலகாலம் ஆண்டனர். கி. பி.

575 முதல் 600 வரை ஆண்ட கடுங்கோன் என்ற பாண்டிய மன்னவன் களப்பிரர்களிடமிருந்து பாண்டிய நாட்டை மீட்டுப் பாண்டியர் ஆட்சியை மீண்டும் தொடங்கினுன். அவனுக்குப் பின்னர் மாறவர்மன் அவனி சூளாமணியும், செழியன் சேந்தனும், மாறவர்மன் அரிகேசரியும் ஆட்சிபுரிந்தனர்.

மாறவர்மன் அரிகேசரி

மாறவர்மன் அரிகேசரி என்பவர் சுந்தர பாண்டியன் என்றும், கூன் பாண்டியன் என்றும் வழங்கப்படுகின்ருர்.

இம் மன்னர் கி. பி. 640க்குப் பிறகு அரியணையில் அமர்ந்தார். இவரைப் பற்றிய வரலாறு பெரிய புராணம் என்னும் நூலில் காணப்படுகிறது. மாறவர்மன் அரிகேசரி முதலில் சமண சமயத்திற் பற்றுள்ளவராக வாழ்ந்தார். பின்பு சைவ சமய நாயன்மாருள் ஒருவராகிய திருஞானசம்பந்தரின் அருளினுல் சைவராக மாறினுர். இவர் காலத்தில் சமண மதம் தமிழ் நாட்டில் பெரிதும் பரவத் தலைப்பட்டது. இவ்வரசன் முன்னிலையில்தான் திருஞான சம்பந்தருக்கும் சமண முனிவர்களுக்கும் அனல் வாதமும், புனல் வாதமும் நிகழ்ந்தன. அரிகேசரியின் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவ சமயத்தில் பெரிதும் பற்றுக்கொண்டு விளங்கினர். இப் பாண்டிய மன்னர் குறுநில மன்னர்கள் பலரை வென்று பேரரசராகத் திகழ்ந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் சீன நாட்டினராகிய 'யுவான் சுவாங்' பாண்டிய நாட்டிற்கு வந்தார். பாண்டிய நாட்டில் கிடைக்கப்பெற்ற முத்துக்களின் சிறப்பினையும், மக்களின் சீரிய வாழ்க்கையையும்,

வாணிக வளத்தையும் பற்றி யுவான் சுவாங் தாம் இயற்றிய ஒரு நூலில் புகழ்ந்து விவரித்துள்ளார்.

நெடுஞ்சடையன் பராந்தகன்

இப் பாண்டிய வேந்தர், பல்லவர்களேயும், ஆய் வேள் என்பவனேயும் போரில் வென்றதாகத் தெரிகிறது. இவர் பேரூரில் திருமாலுக்குக் கோயில் எடுப்பித்தார். இவர் காலத்தில் வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவராகிய பெரியாழ்வார் வாழ்ந்தார் என்றும், அவர்பால் இம் மன்னர் பெரிதும் பற்றுடையராக இருந்தார் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சடையவர்மன் சுந்தர பாண்டியன்

இப்பெயர் கொண்ட அரசர் கி. பி. 1200க்குப் பிறகு மதுரையை ஆண்டனர். இவர் சேர, சோழரைப் போரில் வென்று தமது ஆட்சியைச் செம்மையுறச் செய்தார்; இறைவனிடத்து மிகுந்த பக்தியுடையவர்; தில்லேக்குச்சென்று நடராசப் பெருமானே வழிபட்டுப் பொன்னம்பலத்துக்குப் பொன் ஓடு வேய்வித்தார்; திருவரங்கத்திற்குச் சென்று அரங்கநாதரை வணங்கி, அக்கோயிலின் விமானத்துக்குப் பொற்றகடு வேய்வித்தார். இம்மன்னர்க்குப் பிறகு முதலாவது மாறவர்மன், குலசேகர பாண்டியன் முதலியோர் செங்கோலோச்சி வந்தனர். இவர்கள் காலத்தில்தான் இத்தாலிய நாட்டினராகிய மார்க்கோ போலோ என்பவர் பாண்டிய நாட்டைக் காணவந்தார். இவர் பாண்டிய நாட்டுச் செல்வ நிலேயையும் அரசியல் முறைகளேயும் குறித்து மிகைபடப் பாராட்டியுள்ளார்.

அரசியல் ஒழுங்கு: பாண்டிய மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் வளநாடு, நாடு, மண்டலம், கூற்றம் என்ற பிரிவுகளாகப் பாண்டிய நாடு பிரிக்கப் பட்டு, அரசியல் முறை நடைபெற்றது. அரசியல் அலுவல்களைப் பல திறப்பட்ட அதிகாரிகள் நடத்தி வந்தனர். அமைச்சர், படைத்தலைவர் முதலிய பேரதிகாரிகளின் கீழ் அரையர், வரியிலார், திருமுகம் எழுதுவோர் என்ற அரசியல் ஊழியர்களும் இருந்தனர். அரையர் என்போர் நாட்டைச் சுற்றிப் பார்த்துக் குடி களின் நலம், அறநிலையங்களின் பராமரிப்பு, நீதி வழங்குதல் முதலிய அலுவல்களைக் கவனித்து வந்தவ ராவர். வரியிலார் என்பவர் நிலவரியின் மூலம் அரசி யலாருக்குக் கிடைக்கப்பெறும் வருவாயைக் கணக்கில் பதிந்து வந்தவராவர். திருமுகம் எழுதுவோர் என் பார், அரசனுடைய ஆணையை ஊர்ச்சபைகளுக்கும் பிற அதிகாரிகளுக்கும் ஓலையில் எழுதி அனுப்பிவரு பவர். இக்காலத்தில், சிறந்தவர்களுக்குப் பட்டங்கள் அளித்துப் பெருமைப்படுத்துவதுபோன்று, பாண்டி யருடைய ஆட்சியிலும் அரசியல் அதிகாரிகளுக் குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் காவிதி, தென்னவன், தமிழ்வேள், மூவேந்தவேளான் என்பன சிலவாகும். மேலும், இப் பாண்டிய மன்னர்களுடைய ஆட்சியில், சைவ வைணவக் கோயில்களுக்கு நிலங்கள் வரியின்றி அளிக்கப்பட்டன. அவற்றிற்கு இறையிலி தேவதானம் என்று பெயர். பௌத்தப் பள்ளிகளுக்கும் நிலங்கள் வரியில்லாது விடப்பட்டன. அவை பள்ளிச் சந்தம் எனப்படும்.

வாணிகம்: பாண்டியர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் வாணிகம் செழித்து ஓங்கியிருந்தது.

வணிகர் பொருள்களைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லும் பொழுது களவு நிகழாதவாறு காவற் படைகள் நியமிக்கப்பட்டிருந்தன. சிறந்த வணிகர் களுக்கு எட்டி என்ற பட்டத்தினை அரசர் வழங்கும் வழக்கமும் இருந்தது. முத்துக்களும் ஆடை வகை களும் மேனாடுகளுக்கு அனுப்பப்பட்டன. பிற நாடு களிலிருந்து கண்ணாடிச் சாமான்களும், குதிரைகளும், பிற பொருள்களும் வருவிக்கப்பட்டன.

5. மதுரையும் முகமதியர்களும்

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலம் வரையிலும் மிகச் சிறப்பான நிலையில் இருந்த பாண்டிய நாடு அவனது காலத்திற்குப் பிறகு சீர் குலையத் தலைப்பட்டது. இம் மன்னரின் மைந்தர்கள் அரசாட்சியை யடையும்பொருட்டுத் தங்களுக்குள் பகைமைகொண்டு ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் குழப்பம் விளைவித்தனர். இதனால் நாட்டில் உள் நாட்டுக் கலகங்கள் மிகுதியாயின. மக்கள் அமைதியை இழந்தனர். ஒருபுறம் மாவலி வாணதிராயர்கள் என்ற தனிப்பட்ட இனத்தினர் பாண்டிய நாட்டின் ஒரு சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு ஆட்சி புரியலாயினர்.

அப்பொழுது டில்லியிலிருந்து அரசாண்டவர் அல்லாவுத்தீன் கில்ஜி ஆவார். குத்புதீனின் அடிமை வமிசம் முடிந்ததும் கில்ஜி வமிசத்தார் டில்லியைக் கைப்பற்றி அரசாண்டனர். இவ் வமிசத்தின் சிறந்த மன்னரான அலாவுத்தீன் கில்ஜியே முதன் முறையாக முகமதிய ஆட்சியை விந்தியத்திற்குத் தெற்கிலும் பரவு மாறு செய்தவர். இவர் தட்சிணப் பகுதியில் சிறப் படைந்திருந்த யாதவ வமிசத்தை அழியச் செய்தார். இவரது தளகர்த்தர் மாலிக் காபூர் என்பவராவர். இவர் காகதீயர்கள், ஹோய்சலர்கள் முதலிய இனத்தினர் களைப் பின்பு வென்றார். பாண்டிய நாட்டின் குழப்ப நிலையைக்கேள்வியுற்ற இவர் தக்க தருணம் வாய்த்தது என மகிழ்ந்து பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து உள் நாட்டுக் கலகங்களை அடக்கிப் பல நகரங்களையும்,

கோயில்களையும் கொள்ளையிட்டார். பிறகு, இராமேசுவரம் வரை சென்று பெரும் பொருள் திரட்டித் திரும்பினார். இவர் படையெடுத்த காலம் கி. பி. 1310ஆம் ஆண்டாகும். இவர் படையெடுத்து வந்ததைப்பற்றியும், கொள்ளையிடப் பெற்றமையால் பாண்டிய நாடு வறுமையடைந்ததைப் பற்றியும், அற நிலையங்கள், கோயில்கள் முதலியன அழிவுற்றதைப் பற்றியும், மக்கள் அடைந்த இன்னல்களைப் பற்றியும், யூசுப், அமீர்குசுரு முதலிய முகமதிய வரலாற்று ஆசிரியர்கள் விவரித்துள்ளனர். அன்றியும் இபின் பாதுஷா என்ற முகமதிய வரலாற்று ஆசிரியரும் பொதுமக்கள் உள்நாட்டுக் கலகங்களால் அல்லல் அடைந்தனரென்றும், கோயில்கள் கொள்ளையிடப்பெற்றன வென்றும் மக்கள் தத்தம் சமயங்களைக் கடைப்பிடித்து ஒழுக முடியாதவாறு துயருற்றனரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாலிக் காபூர் டில்லி நகருக்குத் திரும்பிய சிறிது காலத்துக்குள் கில்ஜி வமிசம் அழிந்து, துக்ளக் வமிசத்தினர் அரசாட்சி ஏற்றனர். இவ் வமிசத்து மன்னரான முகம்மது துக்ளக் என்பவர் தமது ஆட்சிக் காலத்தில் ஜலாலுத்தீன் அசன்ஷா என்பவரைத் தென்னாட்டிற்கு அனுப்பினார். இவர் அப் பகுதியிலுள்ளவர்களை வென்றபின் பாண்டிய நாடு அடைந்து பாண்டியனை வென்றார். மதுரையின் வளத்தையறிந்த இவர் அதனைத் தலைநகராகக் கொண்டு, டில்லிப் பேரரசின் பிரதிநிதியாக ஆட்சி நடத்தினார். பின்பு, சின்னாளில் டில்லி மன்னரோடு இருந்த தொடர்பை அகற்றி மதுரையில் தனியரசை நாட்டினார். இவருக்குப் பின், முகமதியத் தலைவர் சிலர் அரசாண்டனர். இவர்கள் காலத்தில் உள்நாட்டில் கலகங்கள் இருந்துவந்தன. சிலர் தம் பெயரால் நாணயங்களை வெளியிட்டனர்.

111870

இவர்களது ஆட்சியைக் குறிப்பிடும் கல்வெட்டுக்களும் உள்ளன. இவர்கள் காலத்தில் வாணாதிராயர்கள், சம்புவராயர்கள், பாண்டியர்கள் முதலியோர் குறுநில மன்னர்களாக வாழ்ந்துவந்தனர். மதுரை ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் முகம்மதியரின் ஆட்சியின்கீழ் இருந்தது.

V2.1195
N65

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் விசயநகர அரசு நிறுவப் பெற்றது. அதனை ஹரிஹரர், புக்கர் என்னும் இரு சோதரர் வித்தியாரணிய அடிகளாரின் உதவியால் அமைத்தனர். அவர்கள் இந்து சமயத்தையும், இந்து அறநெறிகளையும் பாதுகாக்கவே இவ்வரசைத் தோற்றுவித்தார்கள். அரசப் பிரதிநிதியாக இருந்த புக்கருடைய புதல்வரான கம்பண்ண உடையார் தக்க படைத் துணையுடன் சென்று மதுரையைத் தாக்கினார். இரு திறத்தவர்க்கும் போர் கடுமையாக நடைபெற்றது. முடிவில் முகமதியர்கள் தோற்றனர். அவர்கள் வசமிருந்த அரசு கைப்பற்றப்பட்டது. நாட்டில் அமைதியும் பரவியது. பின்னர் கம்பணர் முகமதியர்களால் பாழ்படுத்தப்பெற்ற அங்கயற்கண்ணி ஆலயத்தைக் கட்டுவித்தார். கோயில்களினின்று கடத்தப்பட்ட திருவுருவங்களை மீட்டுக் கொணர்ந்து நிலைபெறச் செய்து முன்போலவே விழாக்களும், பூசைகளும் நடைபெறுமாறு ஏற்பாடுகள் செய்தார்.

6. மதுரையும் நாயக்க மன்னர்களும்

(i) நாகம நாயக்கர்

நாகம நாயக்கர் காஞ்சியம்பதியிற் பிறந்தவர். இவர் உடல் உரமும், மேனி அழகும் வாய்ந்தவர்; சிறந்த போர்வீரராக விளங்கினர். வைணவ சமயத்தில் மிகுந்த பற்றுக்கொண்டவர். இவருடைய முன்னோர்கள் அறிவிலும், வீரத்திலும் மேம்பட்டவராய் இருந்தனர்; அக்காலத்திற் சிறப்புற்றிருந்த விசய நகரப் பேரரசில் உயரிய பதவிகள் வகித்து வந்தனர். நாகம நாயக்கரும் தமது முன்னோர்களைப்போலவே விசயநகரப் பேரரசில் வேலைக்கமர்ந்து பின்னர், தமது தளரா ஊக்கத்தாலும் வீரத்தாலும் தென்னுட்டின் மாபெரும் தலைவர் ஆனர். இவருக்கு விசுவநாத நாயக்கர் என்ற புதல்வர் இருந்தார்.

நாகம நாயக்கர் தென்னுட்டின் மாபெருந் தலைவராக இருந்தபொழுது மதுரையில் சந்திரசேகர பாண்டியனும், தஞ்சாவூரில் வீரசேகர பாண்டியனும் அரசாண்டு வந்தனர். இருவரும் விசயநகர அரசர்க்குக் கப்பம் கட்டிவந்தனர். ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று, ஈடும் எடுப்புமின்றி விளங்கிய மதுரையரசு கீழ்நிலை எய்தி முகமதிய மன்னர்களால் பாழ்படுத்தப் பெற்றபின் சிற்றரசு நிலையை எய்தியது; பாண்டிய மன்னர்களும் வலிமை குன்றிவிட்டனர். இந்நிலையில் வீரசேகரன் என்னும் சோழமன்னர், பாண்டி நாட்டின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக்கொண்டார். அதை அறிந்த விசயநகரப் பேரரசர் சோழனை அடக்கி வருமாறு நாகம நாயக்கருக்குப் பணித்தார். நாகம நாயக்கர் பெரும் படையுடன் சென்று வீரசேகரனைத்

தோற்கடித்தார். மதுரைக் கோட்டையினையும், மதுரை அரசையும் கைப்பற்றிக்கொண்டு நாட்டைப் பாண்டிய மன்னனிடம் ஒப்படைக்காமல் தாமே அங்குத் தங்கி ஆட்சி புரியலானார்.

நாகம நாயக்கர் தமது ஆட்சிக்குத் தொல்லை கொடுத்து வந்த சிற்றரசர் பலரை வென்று அமைதியை நிலை நிறுத்தினார்; கோயில்களை யெல்லாம் புதுப்பித்தும் கட்டியும் நன்னிலைக்குக் கொணர்ந்தார்; நீர்ப்பாசன வசதிகளைச் செய்வித்தார்; குடிமக்கள் விரும்பித் தரும் வரியைப் பெற்று அரசாட்சி நடத்தினார். ஆயினும், இவர் விசயநகரப் பேரரசரின் கட்டளைக்குப் பணியாமை காரணமாக, இவர் தலையைத் துண்டிக்குமாறு பேரரசர் ஆணையிட்டார். அக்கட்டளையை இவருடைய மைந்தரான விசுவநாத நாயக்கரே நிறைவேற்றுவதாகக் கூறித் தம் நண்பர் தளவாய் அரியநாத முதலியாருடன் மதுரைக்கு வந்தார்; தந்தையோடு போரிட்டு அவரைச் சிறைப்படுத்திப் பேரரசரிடம் அனுப்பி வைத்தார், பாண்டிய நாட்டைப் பாண்டியனிடம் ஒப்புவித்தார். ஆனால், பாண்டிய மன்னர் தமக்குப் பின்னர் மதுரையை விசுவநாதரே ஆளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பேரரசரிடம் கொண்டு செல்லப்பட்ட நாகம நாயக்கரை, அப்பெருந்தகையாளர் மன்னித்துவிட்டார்.

(ii) விசுவநாத நாயக்கர்

மதுரையை ஆண்ட இரண்டாவது நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கர் ஆவர். இவர் நாகம நாயக்கரின் புதல்வர். நாகம நாயக்கர் நீண்ட காலம் பிள்ளைப் பேறின்றி வருந்திப் பின்பு ஒரு பெரியவர்

கூற்றின்படி காசி மாநகர் சென்று திரும்பினர். அதன் பயனாக இவர் பிறந்தமையால் இவருக்கு விசுவநாதர் என்ற பெயர் சூட்டப்பட்டதென்பர்.

நாகம நாயக்கருக்குப் பின் பாண்டிய நாட்டு ஆட்சியை ஏற்ற சந்திரசேகர பாண்டியர் நீண்ட காலம் ஆட்சி புரியவில்லை. அவர் இறந்த பிறகு விசுவநாதர் மதுரை அரசாட்சியை முறைப்படி ஏற்றுக் கொண்டார். மதுரையை நாயக்க வமிசம் கைப்பற்றி ஆளுவது மற்றைய சிற்றரசர்களுக்குப் பொறுமை யையும், சினத்தையும் மூட்டியது. தம் மனத்துள்ள வெறுப்பைக் காட்ட அடிக்கடி கலகங்களை விளைவித்து வந்தனர். இத் தொல்லை பொறுக்காது, முதலில் இவர்களை அடக்குவதிலே விசுவநாதர் நாட்டங் கொண்டார்; உற்ற அரசியல் துணைவரும், உயிர் நண்பருமாக இருந்த தளவாய் அரியநாத முதலியாரின் உதவியால் கலகஞ் செய்தவர்களை யெல்லாம் அடக்கி னர்; அமைதியான அரசு ஏற்படுமாறு செய்தார்.

விசுவநாதர் திருச்சிராப்பள்ளியைப் பாண்டிய நாட்டிற்கு எல்லை நகராக ஆக்கி, ஆங்குக் கோட்டை கொத்தளங்களைக் கட்டினர். இவர் மதுரையிலே முகமதி யர்களால் பாழ்படுத்தப்பட்ட கோட்டையைப் புதுப் பித்து மதுரைக்குத் தக்க பாதுகாப்புக்களை அமைத்தார்; வையையாற்றில் பல அணைகளைக் கட்டி, நீர்ப்பாசன வசதிக்குரிய கால்வாய்களை வெட்டுவித்தார்; ஆங்காங் கிருந்த காடுகளை அழித்து, நாடாக்கிச் சாலைகளை அமைத்தார்; அதனல் கொடிய விலங்குகளாலும் கள்ளர்களாலும் ஏற்படக்கூடிய இன்னல்கள் ஒழிந்தன. நாட்டில் அமைதியும், வேளாண்மையும் ஓங்கவே வெளியிடங்களுக்குச் சென்றிருந்த பாண்டிய நாட்டு

மக்கள் பலர், தம் நாடு திரும்பினர். நாட்டில் கைத் தொழில் பெருகிற்று; செழிப்பும் செல்வமும் ஓங்கின.

மீனாட்சி ஆலயத்தைப் புதுப்பித்தல்: மதுரையம் பதியின் நடுநாயகமாக விளங்குவது மீனாட்சியம்மை ஆலயமாகும். அஃது அந்நகரின் நடுவண் அமைந்து முகமதியர் படையெடுப்புக்கு முன்னர்ச் சீரும் சிறப்பு முடையதாய்த் திகழ்ந்தது. அதனைச் சுற்றிலும் ஏழு மதில்களும், உயர்ந்த பதினான்கு கோபுரங்களும் இருந்தன. மதிப்பிடற்கரிய இரத்தினங்கள் பதித்த பொன்னணிகளையும் பிற செல்வங்களையும் மாபெரும் அளவில் பெற்றிருந்தது இவ்வாலயம். முகமதியர் தம் படையெடுப்பின்போதும், ஆட்சிக்காலத்திலும் இதன் கண் இருந்த செல்வங்களைக் கொள்ளை கொண்டதோடு கோயிலையும் பாழ்படுத்தினர். பின்னர் குமார கம்பண்ண ரால் ஓரளவு இக்கோயில் சீர்படுத்தப்பெற்றது. எனினும், விசுவநாத நாயக்கரே ஏராளமான பொரு ளைச் செலவிட்டுப் பல திருப்பணிகள் செய்து கோயிலைப் புதுப்பித்தார். இன்றும், காண்பவர் வியக்கும்வண்ணம் அமைக்கப்பெற்றுள்ள ஆயிரக்கால் மண்டபம் இவர் காலத்தில்தான் கட்டப்பட்டது. கோயிலுக்குப் பல நிலங்களைத் தேவதானமாக அளித்து, விழாக்களும் பூசனைகளும் சிறப்புற நடக்கு மாறு செய்தார்.

விசுவநாத நாயக்கர் திருவரங்கம் பெரிய கோயி லைப் புதுப்பித்துக் கட்டி, அதில் பல மண்டபங்களையும், திருச்சுற்றுக்களையும் அமைத்தார்.

தென் பாண்டி நாட்டில் இருந்துகொண்டு அடிக்கடி துன்பங் கொடுத்துவந்த குறுநில

மன்னர்களை விசுவநாத நாயக்கர் அடக்கினுர்; தம் நாட்டைப் பல பாளையங்களாகப் பிரித்துப் பாளையத்திற்கு ஒருவராகச் சிறந்த வீரர்களைச் சிற்றரசராக்கினுர்; நாட்டில் பல இடங்களில் தக்க பாதுகாவலுடன் கூடிய கோட்டைகளை அமைத்தார்; பாளையங்களை மேற்பார்த்து வரப் பல சீமைகளை ஏற்படுத்தி, நம்பிக்கைக்கு உரியவர்களை அவைகட்குத் தலைவராக ஆக்கினுர்; நீதிமன்றங்களை ஏற்படுத்தினுர். இவர் வைணவப் பற்றுடையவர்; ஆயினும் ஏனைய சமயத்தினர்களைப் பொதுநோக்குடன் கவனித்தார். விசுவநாதர் குடி மக்களுக்குக் கல்வி வசதியளித்தார்; வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் கல்விச் சாலைகளை நிறுவி, அம்மொழிகளின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். அக் கல்விச் சாலைகளில் சமயக் கல்வியும் கற்பிக்கப்பட்டது. இந்திய மக்களின் அற நெறிகளை நிலைநாட்டிக் குடிகளின் உள்ளங் கவர்ந்த பேரரசராக இருந்த விசுவநாத நாயக்கர் கி. பி. 1564இல் காலமானுர்.

(iii) முத்துக்கிருட்டினப்ப நாயக்கர்

விசுவநாத நாயக்கர் மரபில் ஐந்தாமவராக முத்துக் கிருட்டினப்ப நாயக்கர் பட்டத்திற்கு வந்தார். இவருக்கு முத்துவீரப்பன், திருமலை, குமாரமுத்து என்னும் மக்கள் மூவர் இருந்தனர். மன்னர் காலத்தில் சடையத்தேவர் என்பவர் எழுபத்திரண்டு பாளையக்காரர்களுக்கும் தலைவராக இருந்தார். முத்துக் கிருட்டினப்பர் அவரைத் தமது சேனுதிபதியாகக் கொண்டார். அவரும் நம்பிக்கைக்கு உரியவராய் ஊக்கமுடன் உழைத்து வந்தார்; தலயாத்திரை செய்வோருக்குத் தீங்கிழைத்த கள்வர்களை அடக்கிப் பல

நன்மைகளை அமைத்து அளித்தார். முத்துக்கிருட்டிணப்பர் தம் ஆட்சியில் போக்குவரத்துச் சாலைகள், குளங்கள், கோயில்கள் முதலியவற்றை நிறுவினர். இவர் காலமானதும், இவரது மூத்த மைந்தர் சிறிது காலம் அரசாண்டார். அவரும் சில ஆண்டுகளில் இறந்து விடவே அடுத்தவராகிய திருமலை பட்டத்தை ஏற்ருர்.

(iv) திருமலை நாயக்கர்

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் தலை சிறந்து விளங்கியவர் திருமலை நாயக்கரேயாவர். இவர் மற்றையவர் எவரும் செய்திராத அளவில் அறச் செயல்களும், திருப்பணிகளும் ஆற்றியுள்ளார். இவர் தம் தமையனுரான முத்துவீரப்ப நாயக்கர் மறைந்த பின்னர், தம் குல வழக்கப்படி அங்கயற்கண்ணியின் திருமுன்பு செங்கோல் ஏற்று, திருச்சியிலிருந்து ஆண்டு வந்தார்.

மதுரை தலைநகர் ஆகியது: இவ்வேந்தர் திருச்சியிலிருந்து ஆண்டு வருகையில் ஊழ்வினைப் பயன் காரணமாகக் காச நோயாற் பீடிக்கப்பெற்று அல்லலடைந்தார். இந் நோயின் கொடுமையால் உணவும் செல்லாது போகவே, நாளுக்கு நாள் உடல்நிலை சீர்கேடு அடையலாயிற்று. நோயைப் போக்க மருத்துவர் பலர் அரும்பாடுபட்டும் நோய் நீங்கிற்றில்லை. அன்றியும், திருமலை நாயக்கர் எத் துணையோ விரதங்களை மேற்கொண்டும் பயனில்லை. இங்ஙனம் ஆருத்துயர் கொண்டு அரசாளும் நாளில் மதுரை செல்லவேண்டிய இன்றியமையாமை

ஏற்பட்டது. நோய் வருந்திய போழ்தும் தளராது, சொக்கநாதரை மனத்தில் உன்னிச் செல்லும் செலவில் இடையே திண்டுக்கல்லில் தங்கும்படி நேர்ந்தது. ஆண்டுத் தங்கியிருக்குங்கால் இரவில், இறைவர் மதுரேசர் மன்னர் கனவில் தோன்றி, 'மதுரையில் தங்கி எம்மைப் பரவி வருவாயாயின், உனது நோய் தீரும்'' என்று கூறித் திருநீறு அளித்து மறைந்தார். மறுநாள் முதல் அவருடைய நோயின் கொடுமையும் குறைந்துவரத் தொடங்கியது. பின்னர் மதுரையை அடைந்து, ஆலவாய் அண்ணலே வழிபட்டு வந்தமையால் நோய் முற்றும் அகல நலம்பெற்று உடலும் நன்னிலே எய்தியது. மதுரையம்பதிக்கு வந்தபின் தமது நோய் தீர்ந்தமை காரணமாக அந்நகரையே தலைநகராக்கிக்கொண்டு திருமலே நாயக்கர் அரசாண்டு வந்தார்.

ஆற்றிய திருப்பணிகள்: திருமலே நாயக்கர் முதற்கண் மதுரை மீனுட்சியம்மையின் கோயிலேப் புதுப்பிக்க எண்ணமுடையவராய்ச் சிற்பக்கலே வல்லுநரைக்கொண்டு சிறந்த முறையில் அக் கோயிலேப் புதுப்பித்தார்; பல கோபுரங்களேயும் மதில்களேயும் கட்டுவித்தார்; திருச்சுற்றுக்களே ஒழுங்குபடுத்தினர்; பல ஊர்களேத் திருவிழா, பூசனே இவற்றிற்காக வரியிலியாக வழங்கினர். தெப்பக்குளம், நீராழி மண்டபம் இவைகளுக்கான திருப்பணிகள் புரிந்தார். சிறந்த ஆடை வகைகள், விலேயுயர்ந்த அணிகலன்கள், திருத்தேர்கள், ஊர்திகள் முதலியவற்றைக் கோயில்கள் பலவற்றிற்கு அளித்தார்.

பின்பு, திருமலே மன்னர் நகரை அழகுபடுத்தத் திட்டமிட்டார்: நகரங்களில் அரிய பெரிய கட்டடங்களே

அமைத்தார் ; யாவரும் வியந்து பாராட்டும் வண்ணம் ஒரு பெரிய அரண்மனையைக் கட்டி, அதற்குத் தம் பெயரையிட்டு அதில் வாழ்ந்துவரலானார். அவ்வரண் மனையே தற்பொழுது சிறந்து விளங்கும் "திருமலை நாயக்கர் மகால்" ஆகும். இவ் வரண்மனையின்கண் அமைந்துள்ள வேலைப்பாடுகள் இன்றும் நம் நாட்டவ



மதுரை திருமலை நாயக்கர் மகால்

ரையே யன்றி அயல் நாட்டவரையும் வியக்கச் செய்யும் வனப்பு வாய்ந்தன. திருமலை மன்னர் காலத்தில் பல வீதிகளும், மாடங்களும் தோன்றின. மதுரை மாநகர் புதிய எழிலும், கண்கவர் தோற்றமும் பெற்றது.

செய்த போர்கள் : திருமலை நாயக்கர் தம் முன்னோர்களைப் போல் விசயநகரப் பேரரசர்க்குக் கட்டுப்பட்டு இருக்க விரும்பவில்லை. விசயநகர மன்னர்க்குச் செலுத்திவந்த கப்பத்தை நிறுத்திவிட்டார். இவ்வாறு செய்வதால் விசயநகர மன்னன் போருக்கு வரக்கூடும் என்பதை எதிர்பார்த்து அவர் தமது படை வலிமை

யைப் பெருக்கினர்; தமது ஆட்சிக்கு உட்பட்டிருந்த கோட்டைகளைப் பழுது பார்த்தும் வலுப்படுத்தியும் வந்தார். ஆனால், நாயக்கர் எதிர்பார்த்தபடி விசயநகர மன்னர் படையெடுத்து வரவில்லை. காரணம் விசய நகர மன்னர்களின் ஆட்சி அப்பொழுது வலிமை குன்றியிருந்தமையேயாகும்.

திருமலை நாயக்கர் மதுரையை ஆண்ட காலத்தில் சாமராஜ உடையார் என்பவர் மைசூரை ஆண்டு வந்தார். மதுரையின் செல்வச் செழிப்பைக் கேள்வியுற்ற உடையார் மதுரையைக் கைப்பற்ற எண்ணங் கொண்டார். அவரது ஆணையை மேற்கொண்ட பெரும் படையொன்று திண்டுக்கல் கோட்டையை முற்றுகையிட்டது. இதனையறிந்த நாயக்கர் தளவாய் இராமப்பையரைப் பெருஞ் சேனையுடன் சென்று பகைப் படையைத் தகர்க்குமாறு கட்டளையிட்டார். இராமப் பையரும் மைசூர்ச் சேனையை வென்று, வெற்றி வீர ராய் வாகை சூடி மீண்டார்.

மேலும், இராமநாதபுரத்தில் ஆட்சியுரிமை காரண மாகக் கலகம் ஏற்பட்டது. தமது உதவி கோரிய இராமநாதபுரச் சிற்றரசருக்குத் துணைப் படை அனுப்பி அங்கு அமைதியை நிலைநாட்டினர்.

தோல்வியுற்ற மைசூர் வேந்தர் பழிவாங்க வேண்டுமென்று உறுதிபூண்டு மீண்டும் படையினை மதுரையை நோக்கியனுப்பினர். இந் நிலையில் நாயக்கர் போரை எதிர்பார்க்கவில்லையாதலின் மாற்றலரை எதிர்க்க இயலாது ஏங்கினர்; எனினும் சேதுபதி மன்னரின் துணைகொண்டு மைசூர்ப் படையைப் புறங்கண்டார். உரிய காலத்தில் உதவி

செய்து வெற்றி தேடித்தந்த சேதுபதி அரசருக்கு அவர் தக்க முறையில் சிறப்புக்கள் செய்தார்.

இவ்வாறு சிறப்புற ஆண்ட நாயக்கர், தமது இறுதிக் காலத்தில் விசயநகரத்தைக் கைப்பற்றிய முகம்மதியரின் எதிர்ப்பைத் தடுக்க முடியாது அவர்கட்குக் கீழ்ப்படிந்து திறை செலுத்தி வந்தார் என்பர். இவர் பதினேழாம் நூற்றாண்டின் இடையில் காலமானார்.

ஆதரித்த புலவர்கள்: திருமலை நாயக்கர் தாம் சிறந்த கல்வி நலம் பெற்று இருந்ததோடல்லாமல் தம் நாட்டிலுள்ளோர்களும் கற்றவர்களாய்த் திகழ்வதற்கு வேண்டிய உதவிகள் புரிந்தார். இவர் காலத்தில், ஸ்ரீ வைகுண்டத்தில் பிறந்து ஐந்தாண்டு வரை ஊமையாகவிருந்து செந்தில் மேவிய வள்ளி மணாளன் அருளால் மூங்கைத் தன்மை நீங்கப்பெற்ற குமரகுருபரர் மதுரையை வந்தடைந்தார். இவரது சிறப்பை அறிந்த நாயக்கர் குமரகுருபரரைத் தமது அவைக்கு அழைத்துச் சிறப்புக்கள் செய்தார். நாயக்கர் வேண்டிக்கொண்டதற்கிணங்கி, குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைப் பாடி முடித்தார். நூல் பாடி முடிந்தமையறிந்த நாயக்கர் அந் நூலையும், குருபரரையும் யானை மீது ஏற்றி நகர் வலம் செய்வித்து, அங்கயற்கண்ணி திருமுன்பு நூலை அரங்கேற்றவும் செய்தார். நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றபோழ்து, மீனாட்சியம்மையார் ஒரு பெண் வடிவமாக வந்திருந்து அதைச் செவியுற்றதாகவும், வருகைப் பருவத்திலுள்ள "தொடுக்கும் கடவுள்" என்று தொடங்கும் எட்டாம் பாடலைப் பாடியபோழ்து மற்றொரு முறை அதற்குப் பொருள் சொல்லச் செய்து செவிமடுத்து மகிழ்ந்து முத்து

மாலையைப் பரிசு அளித்து மறைந்தாரென்றும் கூறப் படுகிறது. மேலும், குமரகுருபரர் நாயக்கரது விருப் பத்திற்கேற்ப நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை குறம் முதலாய நூல்களையும் இயற்றியருளினார். நாயக்கர் தமக்குச் செய்த சிறப்புக்களைப் பாராட்டும் வகையில், தாம் பாடிய மீனாட்சியம்மை குறத்தில் நாயக்கரை 'வாழி திருமலை பூபதி' என வாழ்த்தி யுள்ளார்.

மற்றும் நாயக்கர், திருவரங்கக் கலம்பகம் முதலிய எட்டுப் பாமாலைகளைப் பாடிய பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்ற வைணவப் பெரியாருக்கு நிலங்கள் வழங்கி அவரையும் ஆதரித்தார்.

நிறுவிய கட்டடங்கள்: மொகலாய மன்னன் ஷாஜ ஹானைப் போலத் திருமலை நாயக்கரும் ஒரு சிறந்த கட்டடப் பிரியர் ஆவார். இவர் ஆட்சிக் காலத்தில் புதிய முறையில் நல்ல வேலைப்பாடமைந்த கட்டடங்கள் பல கட்டப்பட்டன. அவை திருமலை நாயக்கரின் சிறப்பை நமக்குத் தெரிவிக்கும் நினைவுச் சின்னங்களாக இன்றும் உள்ளன. நாயக்கர் தமது சீரிய ஆட்சியில் ஐந்து அரும்பெரும் திருப்பணிகளைச் செய்துள்ளார். அவற்றைப்பற்றி ஈண்டு நோக்குவோம்.

திருமலை நாயக்கர் மகால்: நாயக்கரின் நினைவுச் சின்னமாய் விளங்குவனவற்றில் இது மிக்கச் சிறப் புடையதாகும். இங்கு நாயக்கர் தங்கி வதிந்து வந்தா ரென முன்னர் அறிந்தோம். முன்பு மிகப் பரந்த அளவில் கட்டப்பெற்றிருந்த இவ் வரண்மனை தற் பொழுது அழிந்துபட்டனபோக எஞ்சிய பகுதிகளுடன் காணப்படுகிறது. தற்பொழுதுள்ள மகால் முன் னிருந்த நிலையில் நான்கில் ஒரு பகுதியே என்பர்.

இங்கு ஆசார முகப்பு, அரங்க விலாசம், பூசையறை, நாட்டிய அரங்கு, கோப்பெருந்தேவியர் இருந்து இசை நிகழ்ச்சி முதலானவற்றைக் கேட்குமிடம், படைக் கலக் கொட்டில் முதலியன அமைக்கப்பெற்றிருந்தன. மற்றும் கருங்கல் சவுக்கைகள், இரத்தின சிங்காதனம், பொற்கலசங்கள் முதலியனவும் இருந்தன. இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இம் மகால், நாயக்க ருடைய பேரரான சொக்கநாத நாயக்கர் காலத்தில் சிதைவுற்றது.

தெப்பக் குளம்: இது மதுரைக்குக் கிழக்கே சுமார் இரண்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. இது இப்பொழுது 'வண்டியூர் தெப்பக் குளம்' என அழைக்கப்பெறுகிறது. இக் குளம் வண்டியூர் என்னும் சிற்றூருக்கருகில் உள்ளமையால் இப் பெயர் ஏற்பட்ட தென்பர். இதன் கரையில் ஓர் அழகிய மாரியம்மன் கோவில் உள்ளது. இதனால் இதனை 'மாரியம்மன் தெப்பக் குளம்' என்றும் அழைக்கிறார்கள். திருமலை நாயக்கர் மகாலைக் கட்டுவதற்கு வேண்டிய நல்ல மண், இப்பொழுது குளம் இருக்கும் இடத்தில் காணப்பட்ட தால் அதனை எடுத்துச் செங்கல் அறுக்கச் செய்தார். கல்லறுக்கும்பொருட்டு மிகுந்த மண் எடுக்கப்படவே, பெரிய பள்ளம் உண்டாகியது, அப் பள்ளத்தை ஒழுங்குபடுத்தி அமைத்துக் குளமாக்கினார் என்று கூறுவர். இக் குளம் சதுரமாகவும், பக்கங்களில் அழ கான படித்துறைகளுடனும் சுற்றிவருவதற்குப் பாதை யுடனும், அழகிய சுற்று மதிலுடனும் காணப்படு கின்றது. அன்றியும் மூலைப் பகுதிகளிலும், நடுப் பகுதியிலும் மண்டபங்கள் காணப்படுகின்றன. நடுவண் உள்ள மண்டபத்தில் மலர்ச் செடிகளும் பழ

மரங்களும் உள்ளன, இதன்கண் திருமலை நாயக்கரது உருவச்சிலை ஒன்றை இன்றும் காணலாம்.

புது மண்டபம்: திருமலை நாயக்கர் கட்டியவற்றுள் இதுவும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இம் மண்டபம் சிற்ப வேலைப்பாடு கொண்டதாகக் காணப்படுகின்றது. முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பெற்ற இக் கட்டடம் மீனாட்சியம்மையின் திருக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலுக்கு எதிர்ப்புறத்தில் உள்ளது. ஆண்டு தோறும் இளவேனிற் காலமான வைகாசித் திங்களில் நடத்தப்பெறும் இளவேனில் திருவிழாவிற்காக இம் மண்டபம் கட்டப்பெற்றதால் இதனை 'வசந்த மண்டபம்' என்றும் கூறுகின்றனர். திருமலை நாயக்கர் தம் காலத்தில் இதனைப் புதுமையான முறையில் கட்டியதால் புது மண்டபம் என்ற பெயரும் இதற்கு ஏற்பட்டது என்பர். இம்மண்டபத்தைச் சுற்றிலும் சிறிய அகழி ஒன்று காணப்படுகின்றது. முற்காலத்தில் இதில் நீரை நிரப்பிப் பலவகை மலர்களைத் தூவித் திருவிழாக் காலத்தில் அழகுபடுத்தி மகிழ்ந்தனர் என்பர்.

இம்மண்டபத்தின் இருபுறங்களிலும் சிற்ப வேலைப்பாடு அமைந்த தூண்கள் காணப்படுகின்றன. கண்டோர் மகிழும் வகையில் சிற்பங்கள் அமைந்துள்ளன. மண்டபத்தில் உள்ள தூண்களில் திருமலை நாயக்கர், அவருடைய முன்னோர் சிலர் இவர்களுடைய உருவச் சிலைகள் செதுக்கப் பெற்றுள்ளன. புது மண்டபம் கி. பி. 1635ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப் பெற்றதாகும்.

சங்கிலி மண்டபம்: மீனாட்சியம்மையின் திருமுன்பு தெற்கு வடக்காக அமைந்துள்ள மண்டபம் சங்கிலி

மண்டபம் எனப்படும். இங்குள்ள கற்றூண்களில் அனுமன், பாண்டவர் ஐவர் முதலியோரது சிலைகள் காணப்படுகின்றன.

இராயர் கோபுரம்: இது புதுமண்டபத்தின் கிழக்கே உள்ளது; முடிவு பெறாத நிலையில் காணப் படுகிறது. இப்பகுதி ஏனைய கோபுரங்களின் முதல் தளத்தைப்போல் இருமடங்கு உயரம் உள்ளது. இக் கோபுரத்தின் வாயில் சற்றேறக்குறைய அறுபது அடி உயரமுள்ளதாகும். திருமலை நாயக்கருக்குப் போரினில் ஏற்பட்ட அளவிறந்த செலவே இராயர் கோபுரம் முற்றிலும் கட்டி முடிக்கப் பெறாததற்குக் காரண மென்பர்.

தமுக்கம் மாளிகை: இக்கட்டடம் வையை ஆற் றுக்கு வடகரையில் அமைந்திருக்கின்றது. இது இரண்டு மேடைகளுடன் காணப்படுகின்றது. இப் பொழுது இங்கு அரசியலார் அலுவலகங்கள் உள்ளன. இம்மாளிகையில் பழங்காலத்துப் போர்க்கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்போர், விலங்குப்போர் முதலிய போர்களைப் பார்ப்பதற்காக இதனை நாயக்கர் கட்டினார் என்பர்.

திருமலை நாயக்க மன்னரின் கடவுட்பற்றும், தமிழ் மொழி ஆர்வமும், கலை யுணர்வும், பிற நற்பண்புகளும் போற்றற்பாலன.

(v) சொக்கநாத நாயக்கர்

இவர் திருமலை நாயக்கரின் பெயரர் ஆவர். இவர் கி. பி. 1662இல் பட்டம் பெற்றார். ஆனால், இவர் சிறுவராக இருந்தமையால், அமைச்சர்கள் ஆட்சியை

நடத்தி வந்தனர். அவ் வமைச்சர்களுடைய கருத்திற் கிணங்க இவர் திருச்சிராப்பள்ளியை மீண்டும் தலைநகராக ஆக்கிக்கொண்டார்.

சொக்கநாத நாயக்கர், முஸ்லிம்களைத் தமிழ் நாட்டி னின்றும் அறவே அகற்றிவிடவேண்டும் என்ற கருத்து உடையவர் ஆவார். மேலும் விசயநகர ஆட்சியை வலுப் படுத்தவேண்டும் என்பதும் இவரது முக்கிய எண்ணங் களில் ஒன்றாகும். சொக்கநாத நாயக்கர் முஸ்லிம் களிடமிருந்து செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றக் கருதினார். அதனால் தமது படைத்தலைவர் இலிங்கம நாயக்கரைப் பெரும் படையுடன் செஞ்சிக்கு அனுப்பி னார். ஆனால், இலிங்கம நாயக்கரோ எதிரியிடம் பெரும் பொருள் பெற்றுக்கொண்டு, தம் கடமையைச் சரிவரச் செய்யாது இருந்தார். அதனால் அவர்மீது கோபங் கொண்ட சொக்கநாத நாயக்கர் அவரைச் சிறைப்படுத்த முயன்றார். அதனை அறிந்த இலிங்கம நாயக்கர் தப்பிச் சென்று செஞ்சியை அடைந்தார். அவரும் செஞ்சி அரச ரும் சேர்ந்து திருச்சிராப்பள்ளிமீது படையெடுத்தனர். சொக்கநாத நாயக்கர் அவர்களைப் போரில் வென்று புறமுதுகிட்டு ஓடும்படி செய்தார். தப்பி ஓடிய அவர்கள் தஞ்சை அரசரிடம் அடைக்கலம் புகுந்தனர். அதனை அறிந்த சொக்கநாத நாயக்கர் தஞ்சைமீது படையெடுத்துச் செல்லவே, அவர்கள் அஞ்சி செஞ் சிக்கு ஓடினார்கள். தஞ்சை அரசர் சொக்கநாத நாயக்க ருக்குப் பணிந்து சமாதானம் செய்துகொண்டார்.

சொக்கநாத நாயக்கர் காலத்தில் இவ்வாறு போர் நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்ந்ததால் நாட்டில் அமைதி குறையலாயிற்று. பஞ்சமும் பிணியும் தோன்றி மக்களை நலிவுறுத்தின. இந் நிலையில் பீஜப்பூர் சுல்தானால்

அனுப்பப்பட்ட பெரும்படை ஒன்று திருச்சியைத் தாக்கி முற்றுகையிட்டது. தஞ்சை அரசரும், இராமநாதபுரம் சேதுபதியும் முஸ்லிம்களுக்குத் துணை புரிந்தனர். சொக்கநாத நாயக்கர் முஸ்லிம்களின் முற்றுகையைச் சிதறடித்து அவர்களைத் துரத்தியதோடு அவர்களுக்கு உதவி புரிந்த தஞ்சை அரசரையும் தாக்கி வெற்றி பெற்றார். அதன் பயனாக அவருக்கு வல்லம் கோட்டை கிடைத்தது. இராமநாதபுரத்தின் மீதும் படையெடுத்துச் சென்றார். முதலில் அவர் வெற்றி பெற்றபோதிலும் சேதுபதியின் வலிமையை அவரால் முற்றிலும் ஒடுக்க முடியவில்லை.

தஞ்சை மன்னர் தம் அழகிய மகளைச் சொக்கநாதருக்குத் திருமணம் செய்துகொடுக்க மறுத்தார். அதன் காரணமாக கி. பி. 1674ஆம் ஆண்டில் இருவருக்கும் கடும்போர் நடந்தது. அப்போரில் தஞ்சை அரசர் கொல்லப்பட்டார். அவர் மகளும் ஏனைய பெண்டிர்களும் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர். அதன்பின்னர் சொக்கநாத நாயக்கர் சந்திரகிரி மன்னர் மகளான மங்கம்மாளை மணம் புரிந்துகொண்டார்.

சொக்கநாத நாயக்கர் தஞ்சையில் மற்றொரு மன்னரை நியமித்திருந்தார். அவ்வமயம் சிவாஜியின் உடன் பிறந்தவரான ஏக்கோஜி (வெங்காஜி) தஞ்சையைத்தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் மதுரையின் பல பகுதிகளையும் அவர் கைப்பற்றினார். அது முதலாகத் தஞ்சையில் மகாராட்டிர ஆட்சி நிலவலாயிற்று. சொக்கநாதரின் ஆட்சியில் மக்களின் நலம் கவனிக்கப்படாமல் மிக இழிந்த நிலையை அடையலாயிற்று. அந் நிலையில் அவர் கி. பி. 1682இல் காலமானார்.

(vi) அரங்க முத்துக் கிருட்டின வீரப்ப நாயக்கர்

இவர் சொக்கநாத நாயக்கரின் புதல்வர் ஆவார். இவர் சிறுவயதினராயிருந்தபோதிலும் ஆட்சியைத் திறம்பட நடத்தி வந்தார். அதனுல் சொக்கநாத நாயக்கர் காலத்தில் இருந்த நாட்டின் இழிநிலே நீங்கியது. மொகலாய மன்னராகிய ஔரங்கசீப் இவரைத் தமக்குப் பணியும்படி தூது அனுப்பினுர். அத் தூதுவர்களே இவர் அவமதித்துத் துரத்தினுர். மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதி நல்லாட்சி நடத்திவந்த இவர் கி. பி. 1688 ஆம் ஆண்டில் தமது இருபத்திரண்டாவது வயதில் அம்மை நோய் கண்டு இறந்தார். அதன்பின் அவர் மைந்தன் விசயரங்க சொக்கநாதன் ஆட்சிக்கு வந்தனன். அது முதலாகத் தஞ்சையில் மகாராட்டிர ஆட்சி நிலவலாயிற்று.

(vii) இராணி மங்கம்மாள்

நாயக்க மன்னர்களது ஆட்சியில் பெண்களும் அரசுரிமையை ஏற்றுத் திறமையுடன் ஆட்சி செய்தனர் என்பதற்கு இராணி மங்கம்மாளின் ஆட்சியே போதிய சான்ருகும். இவ்வம்மையார் திருமலே நாயக்கரது பெயரரான சொக்கநாத நாயக்கரின் மனைவியாவார். இவர் நிறைந்த கல்வியும், சிறந்த மன வலிமையும், கூர்ந்த மதியும் படைத்தவர்.

கி. பி. 1682இல் சொக்கநாத நாயக்கரும், அதன் பின்னர் கி.பி. 1688இல் அவர் மைந்தன் அரங்க முத்துக் கிருட்டின வீரப்ப நாயக்கரும் இறந்துபடவே, அவர் மகன் விசயரங்க சொக்கநாதன் அரச பட்டத்தை ஏற்ருன். விசயரங்க சொக்கநாதன் ஆண்டில் இளைஞ

ளுக இருந்தமையாலும், முத்துக்கிருட்டின வீரப்பரின் மனைவி முத்தம்மாள் முன்னரே இறந்துபோய்விட்டதாலும், தன் பெயரனுக்குப் பதிலாக மங்கம்மாள் அரசை ஏற்று நடத்தி வருவாளானாள்.

இராணி மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தைக் 'குடிமக்களது நற்காலம்' எனலாம். இவ்வம்மையார் குடிமக்களிடத்து அன்புடையவர் ; கற்றாரைப் போற்றும் தகைமையர் ; செய்யும் செயல்கள் யாவற்றையும் நன்கு சிந்தித்தும், மற்றவர்களோடு கலந்து ஆலோசித்துமே செய்தார். இவர் காலத்தில் நாடு செழிப்புற்றிலங்கியது. உள்நாட்டுக் கலகங்களோ, அயல்நாட்டுப் படையெடுப்போ பெரிதும் இல்லாமையால் குடிமக்கள் நலமுற வாழ்ந்தனர். நாடெங்கும் நல்ல சாலைகள் போடப்பட்டன. சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டன. வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவதற்கெனப் பல சத்திரங்கள் கட்டப்பட்டன. அவை இன்றும் இவ்வம்மையாரின் பெயரால் விளங்கக் காண்கிறோம். மற்றும் குடிமக்களின் நலனுக்காகக் குளங்களும், கிணறுகளும் வெட்டுவிக்கப்பட்டன. அறச் செயல்கள் மிகுதியாகச் செய்யப்பட்டன. மேலும், நாட்டில் போர் நிகழாவண்ணம் சீரிய அரசியல் முறைகளைக் கடைப்பிடித்து அமைதியை நிலைநாட்டி வந்தனர். இவ்வாறு பல சீர்திருத்தங்களைச் செய்து புகழுடன் செந்நெறியில் வாழ்ந்த இராணி மங்கம்மாள் 1704இல் தம் பெயரர் விசயரங்க சொக்கநாதர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வயதை அடையவே, அவர் வசம் நாட்டாட்சியை ஒப்படைத்து அரசியலிலிருந்து விலகி வாழ்ந்துவந்தார். இவர் தம் கடைசி நாட்களைப் பல நற்காரியம் செய்வதில் கழித்துவரலாயினர்.

(viii) நாயக்கர் ஆட்சியின் இறுதிநிலை

அரசி மங்கம்மாள் இறந்தபின் அவருடைய பெயரரான விசயரங்க சொக்கநாதர் முழு ஆட்சியை ஏற்றார். இவரது திறமையற்ற ஆட்சிமுறையால் மதுரையில் மக்கள் அமைதியிழந்தனர். உள்நாட்டுக் கலகங்கள் பல நிகழ்ந்தன. 1731ஆம் ஆண்டில் இவர் இறக்கவே, இவர்க்கு வேறு மகப்பேறு இல்லாமையால் இவர் மனைவி மீனாட்சி அம்மையார் அரசேற்றார். இவருடைய ஆட்சிக்கு, இவர்தம் உடன்பிறந்தவனான வேங்கட ராயப்பெருமாள் நாயக்கன் உதவிபுரிந்தான். எனினும், நாட்டில் அமைதி நிலவவில்லை. வங்காரு திருமலை நாயக்கன் என்பவன் அரசுரிமையைக் கைப்பற்ற அடிக்கடி கலகங்கள் விளைவித்து வந்தான். இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஆர்க்காட்டை ஆண்ட நவாப் ஆலிகான் என்பவர் தம் மூத்த மகன் சதர் ஆலிகானையும், மருமகன் சந்தா சாகிபையும் தக்க படையுடன் அனுப்பினார். சந்தா சாகிபு நயவஞ்சகமாக மீனாட்சியையும் வங்காரு திருமலையையும் ஏமாற்றிவிட்டு மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான்; நாடு முழுவதற்கும் தானே தலைவன் என்று பறையறைவித்தான். மீனாட்சி உயிருடன் இருப்பின் கலகங்கள் நேரிடலாம் என்று அஞ்சி, அவளைச் சூழ்ச்சியால் கொலைசெய்ய முயன்றான். ஆனால், மீனாட்சி அவனது தீய உள்ளத்தை உணர்ந்து அவனால் மடிவதைக் காட்டிலும் தனது உயிரைத் தானே மாய்த்துக்கொள்வது சாலச் சிறந்ததெனக் கருதி நஞ்சு உண்டு மாண்டனள்.

சந்தா சாகேப்

மதுரையை ஆண்ட முஸ்லிம் அரசர்களில் இவன் தலை சிறந்தவன். இவன் ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கி

நடவாமல் தனித்து ஆட்சி செய்ய விரும்பினான். தன்னுடைய ஆட்சிக்கு ஏற்ற இடமாகத் திருச்சிராப் பள்ளிக் கோட்டையைத் தேர்ந்தெடுத்தான். அக் கோட்டையைப் பலப்படுத்தினான், தன்னுடைய ஆட்சி தென்னாட்டில் என்றும் நிலைக்க இவன் ஒரு திட்டமும் வகுத்தான். அதற்கேற்ப தன் தம்பியர் இருவரில் ஒரு வரைத் திண்டுக்கல்லிலும், மற்றொருவரை மதுரையி லும் இருந்து ஆட்சி செய்யுமாறு நியமித்தான். திருச்சியை ஆண்ட சந்தா சாகேப் தஞ்சாவூரிலும் கண் ணோட்டம் விட்டான். அந்த அரசனையும் அடிபணியச் செய்தான்.

சந்தா சாகேபின், இந்த ஆட்சி தொடர்ந்து நடை பெறவில்லை. தஞ்சாவூர் அரசர்கள் மராட்டியருடன் கூட்டு சேர்ந்து கி.பி.1740இல் ஆர்க்காட்டு நவாபுடன் போர் செய்யத் தொடங்கினர். அப்போரில் ஆர்க்காட்டு நவாபு கொல்லப்பட்டான். பின்னர் மராட்டியர்கள் திருச்சிராப்பள்ளிக் கோட்டையையும் முற்றுகையிட்டுத் தாக்கினர். இம்முற்றுகையில் சந்தா சாகேப் சிறைப் பட்டான். அவனது சகோதரர்கள் இருவரும் திண்டுக் கல்லிலும், மதுரையிலும் கொல்லப்பட்டனர். மதுரை நகரம் மராட்டியருக்குச் சொந்தமாயிற்று. இம் மராட்டி யர்களும் இரண்டாண்டுகட்குமேல் மதுரையை ஆள முடியவில்லை.

இந் நிலையில் ஹைதராபாத் நிசாம் தன்னுடைய ஆதிக்கத்தைத் தென்னாட்டில் நிலைநாட்ட எண்ணினார். தென்னாட்டின்மீது படையுடன் வந்து மராட்டியரை மதுரையைவிட்டு விரட்டினார். கி.பி. 1744இல் அன்வா ருதீன் என்பவரை ஆர்க்காட்டு நவாப்பாக்கினார்.

கி. பி. 1748இல் சந்தா சாகேப் மராட்டியரிட மிருந்து விடுதலை பெற்ருர். உடன் பெரும் படை திரட்டலாஞர். ஆர்க்காட்டு நவாப்புடன் போர் தொடுத்தார்; அப்போரில் அன்வாருதீன் கொல்லப் பட்டார். பின்னர் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் ஆகிய இருவரது ஆதரவுகளையும் பெற்றுச் சந்தா சாகேப் கி. பி. 1751இல் ஆர்க்காட்டு நவாப் பதவியை பெற்ருர்.

சந்தா சகேப் ஆர்க்காட்டுக்கு நவாப் ஆனலும் முகம்மது அலியென்பவன் மதுரையையும் திருநெல் வேலியையும் கைப்பற்றிக்கொண்டு தானே நவாப் என்று திருச்சிராப்பள்ளியில் இருந்தான். இந் நிலையில் சந்தா சாகேப் ஆலம்கான் என்னும் படைத் தலைவ னுடன் சென்று மதுரைக் கோட்டையை முற்றுகை யிட்டுத் தந்திரமாகக் கைப்பற்றினர். இருந்தாலும் அவன் சந்தா சாகேபிற்கு அடங்கியே இருந்தான். பாளையக்காரர்களது ஒற்றுமைக் குறைவாலும், உள் நாட்டுக் குழப்பத்தாலும் சந்தா சாகேப்பினல் தொடர்ந்து தென்னுட்டை ஆளமுடியவில்லை. படிப்படி யாகப் பல படையெடுப்புக்கள் நடந்தன. பின்னர் கி. பி. 1790இல் ஹைதரலியிடமிருந்து ஆங்கிலேயர் கள் மதுரையைத் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள்.

இவ்வாறு, மதுரையில் நாயக்கர் ஆட்சியும், அதன் பின்னர் ஏற்பட்ட முஸ்லிம் ஆட்சியும் சீர் குலைந்து, முடிவில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவலாயிற்று.

7. மதுரையும் புலவர் பெருமக்களும்

நமது நாட்டில் புலவர் வரலாறுகளுக்கிடையிடையே இறைவனது வியத்தகு நிகழ்ச்சிகளும் காணப் பெறுகின்றன. அவற்றை முற்றிலும் நம்புவதற்கில்லையெனினும் அவ் வரலாறுகளுக்கு அவை சுவையளிக்கின்றன.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று பொய்யாமொழிப் புலவர் கூறிய வண்ணம், அவற்றில் காணும் உண்மைகளைப் பிரித்தறியவும், அவற்றைப் படித்து இன்புறவும் புலவர் வரலாறுகள் பயன்படுகின்றன. ஆதலால் மதுரை மாநகரில் வாழ்ந்த புலவர் பெருமக்களில் தலை சிறந்து விளங்கிய ஒரு சிலரின் வரலாறுகளை ஈண்டுக் காண்போம்.

(i) நக்கீரர்

வையை ஆற்றினல் சூழப்பெற்று, பாண்டி வள நாட்டின் நடுநாயகமாகச் சிறப்புற்றோங்கி மிளிர்வது மதுரை மாநகரமாகும். அந் நகர், தமிழ் பயின்ற புலவர்கள் பலரை கொண்ட தமிழ்ச் சங்கங்கள் விளங்குவதற்கு உகந்த இடமாக இருந்தது. இறைவனே சங்கப் புலவர்களில் ஒருவராக அமர்ந்து தமிழாராய்ந்த பெருமை அந் நகருக்கு உண்டு. இம் மாநகரில் ஒரு பேராசிரியர் வாழ்ந்து வந்தார். இவர் மாணவர்கட்குத் தமிழ் நூல்களைக் கற்பித்து வந்தார். இவரை, 'ஆசிரியர்' எனப் பொருள்படும் கணக்காயனர் என்று மக்கள் அழைத்து வந்தனர். இவருக்கு இறைவன் திருவருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது.

அம் மகவே நக்கீரர் என்ற பெயரோடு பிற்காலத்திற் பெரும் புலவராய்த் திகழ்ந்தது. நக்கீரர் தமக்கென வகுக்கப்பட்ட தொழில்களேயன்றி, சங்கறுத்து அணி கலன்களைச் செய்த அந்தணர் மரபைச் சார்ந்தவர் என அறிஞர் கூறுவர். இவருடைய பெயரினைப் பற்றிப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. கீர், கீர் என்று சங்குகள் அறுத்தமையால் கீரன் என்று பெயர் உண் டாயிற்று என்பர் சிலர். கீரன் என்பது இயற்பெயரே என்றும், 'ந' என்பது சிறப்பைக் குறிக்கும் அடை மொழி என்றும் ஒரு சாரார் உரைப்பர்.

நக்கீரர் இளமையிலேயே கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுத் தெளிந்து புலமை பெற்றார். இவரது புலமையை உணர்ந்த பாண்டியன் தமிழ்ச் சங்கத்திற்கு இவரைத் தலைமைப் புலவராக நியமித்தான். சங்கத்தில் இருந்த சங்கப் பலகையும் நக்கீரருக்கு முதலிடம் தந்து ஏற்றுக்கொண்டது. தகுந்த புலமையுடையோர்க்கே இடந் தரும் தன்மை வாய்ந்தது இச் சங்கப் பலகை. கபிலர், பரணர், மாமூலர், மருதனிள நாகனார் முதலான புலவர் பெருமக்களோடு நக்கீரரும் இங்கு அமர்ந்து முத்தமிழையும் ஆராய்ந்து தொண்டாற்றி வந்தார்.

இறையனார் அகப்பொருளுக்கு உரைகாணல்: ஒரு முறை பாண்டிய நாட்டில் கொடிய வறுமை ஏற்பட்டது. பாண்டிய மன்னன் புலவர்களை அழைத்து, "வறுமை யின் கொடுமையால் நாடு மிகவும் வருந்துகிறது. நான் இதுகாலை உங்களைப் பாதுகாக்க இயலாத நிலையில் இருக்கின்றேன். ஆதலின், நீவிர் வேற்றிடம் சென்று வாழ்ந்து, நாடு செழித்தபின் இங்கு வருவீ ராக!" என்று இயம்பினான். புலவர் பெருமக்களும்

அவ்வாறே அகன்றனர். பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின் பெருமழை பெய்து நாடு செழித்தது. அரசன் புலவர்களை அழைத்துவர ஏவலாளர்களைப் பல திசைகளுக்கும் அனுப்பினன். அவர்கள் நாற்றிசைகளிலும் அலைந்து புலவர்களை அழைத்து வந்தனர்.

அவ்வாறு திரும்பிய புலவர்களில் பொருளதிகாரம் கற்றுச் சிறந்தவர் இன்மையின் அரசன் கவன்றான். அரசன் கவலையைத் தீர்க்க இறையனார், அகப்பொருள் இலக்கணத்தை விளக்கும் அறுபது நூற்பாக்களைச் செப்பேட்டில் எழுதிப் படிச்சட்டத்தின்கீழ் இட்டுவைத்தார். இறைவனுக்கு வழிபாடு செய்பவன் ஆதிசைவன். முன்பு என்றுமே அலகிடாத அவன், நல்வினைப் பயனால் படிச் சட்டத்தை அன்று அலகிடும்பொழுது சில செப்பிதழ்கள் கிடைத்தன. அவற்றை அந்த ஆதிசைவன் எடுத்துப் பார்த்துப் பொருளிலக்கணமாக இருப்பதை அறிந்து, அரண்மனையை அடைந்து அரசனிடம் அளித்தான். அரசன் சங்கப் புலவர்களை அழைத்து, "இது பொருளதிகாரம். இது நம் இன்னல் தீர்க்க இறைவன் அருளியதாம். இதனைக் கொண்டு சென்று பொருள் காண்மின்" என்று கூறினன். புலவர் பலரும் பலவாறு பொருள் உரைத்தனர். இறுதியில் நக்கீரர் உரைத்த உரையே சிறந்த உரை என்று அறிந்து யாவரும் மகிழ்ந்தனர்.

தருமிக்குப் பொற்கிழி அளித்தல்: ஒரு நாள் பாண்டியன் தனது அரண்மனை மேன்மாடத்தில் இளந் தென்றலின் இனிமையை நுகர்ந்து மகிழுங்கால் புதியதோர் நறுமணம் கமழ, அந் நறுமணம் வந்த திசை நோக்கினன்; அங்குத் தன் மனைவி நிற்பதைக் கண்டு, வீசிய நறுமணம் அவள் கூந்தலினின்றும் வருவதை

உணர்ந்தான். மணங் கமழ்ந்தமை கண்டு வியப்புற்று மகளிர் கூந்தலுக்கு நறுமணம் இயற்கையாகவே உண்டா என்று ஐயம் கொண்டான். தனது மனத்தில் எழுந்த ஐயத்தை எடுத்துக் கூறுவோருக்குப் பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாகப் பறை அறைவித்தான். சங்கப் புலவர்களும் மன்னன் ஐயத்தை உணர இயலாதவராயினர். இவ்வாறிருக்கையில் தருமி என்ற ஏழை அந்தணன் இறைவனுக்கு நாடோறும் பணி செய்து வந்தான். மன்னன் அறிவித்தவாறு பொருளைப்பெற்றால் வறுமை நீங்கி இனிது வாழலாம் என்றெண்ணிய தருமி இறைவனை இறைஞ்சினன். இறைவனும் இரங்கி,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"

என்ற பாடலை எழுதியளித்தார்.

தருமி அரண்மனையை அடைந்து ஆங்கிருந்த புலவர்களிடத்தில் பாடலைக் காட்டினன். அவர்கள் அச் செய்யுளை நோக்கினர். "பூக்கள் தோறும் தேனைத் தேடிச் செல்லும் அழகிய சிறகினை உடைய வண்டே! நீ என் நாட்டு வண்டாதலின் எனக்காகக் கூறாமல், கண்ட உண்மையை எடுத்துச் சொல்வாயாக! என்னை நீங்காத அன்பினளான மயில்போன்ற அழகிய சாயலினை உடைய இம் மங்கையின் கூந்தலைக் காட்டிலும் நறுமணம் வாய்ந்த நல்ல மலர்கள் எவையேனும் நீ கண்டதுண்டோ? கூறுக" என்று அதன் கருத்து அமைந்திருத்தலை உணர்ந்தனர்.

பின்பு, அவர்கள் சொற் சுவையும் பொருட் சுவையும் நிறைந்த அப் பாடலைக் கண்டு மகிழ்ந்தவராய் அரசனிடம் சென்று படித்துக் காட்டினர். அரசனும் தான் எண்ணிய கருத்து அப் பாடலில் இருந்தமையின் மகிழ்ந்து பொற்கிழியைத் தருமிக்கு அளிக்க முற்பட்டான்; அப்பொழுது நக்கீரர் குறுக்கிட்டு இக்கவி குற்றமுடையது என்று கூறித் தடுத்தார். அதுகண்டு தருமி மனமுடைந்து கோயிலையடைந்து இறைவனிடம் முறையிட்டான். சிவபெருமான் புலவர் வேடந்தாங்கி அவையை யடைந்து புலவர்களை நோக்கி, "எமது கவிக்குக் குற்றம் கூறியவர் யாவர்?" என்று வினவினர். அதுபொழுது,

நக்கீரர் : ஏன்? நானே கூறினேன்.

சிவபிரான் : இச் செய்யுளில் உள்ள குற்றம் யாது?

நக்கீரர் : சொற்குற்றமன்று; பொருட் குற்றம்.

சிவபிரான் : நீங்கள் கண்ட பொருட் குற்றம்தான் என்ன?

நக்கீரர் : கூந்தலுக்கு இயற்கை மணம் ஏது? சூடும் பூவினலும், ஊட்டும் புகையினலும் செயற்கை முறையினல்தான் அதற்கு நறுமணம் ஏற்படுகின்றது. இல்லாத தன்மையைக் கூறி இருத்தலின் உமது பாடல் பொருட் குற்றமுடையதாகும்.

சிவபிரான் : பதுமினி போன்ற உயர்வகை மகளிரின் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லையென்பது உமது துணிபோ?

நக்கீரர் : ஆம், ஆம்.

சிவபிரான் : தெய்வப் பெண்களின் கூந்தலுக்கோ?

நக்கீரர்: அதுவும் மந்தார மலர்களால்தான் மணம் கமழ்கின்றது. ஆதலின் அதுவும் செயற்கை மணமே.

சிவபிரான்: நீர் வழிபடும் உமையம்மையாகிய ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லைதானே ?

நக்கீரர்: ஆம், எவர் கூந்தலாக இருந்தாற்றான் என்ன ? பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை என்பதே எமது துணிபு. (உடனே சிவனார் தமது நெற்றிக் கண்ணையும் சடையையும் காட்டினார்.) புலவரே ! நீர் நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே. ஆதலால், சடையைக் காட்டி என்னை வெருட்டுதல் வேண்டா.

சிவபெருமான் உடனே மறைந்தருளினர். குழுமி யிருந்த புலவர்கள் உயர்வகை மகளிரின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்பதை ஏற்றுக்கொண் டனர்; நக்கீரரின் புலமையையும், அஞ்சாமையையும் வியந்தனர். நக்கீரரும் இறைவனை எதிர்த்துப் பேசிய தம் பிழையை உணர்ந்து சிவபிரான்மீது 'கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி' என்னும் நூலைப் பாடி உய்ந்தனர்.

திருமுருகாற்றுப் படை: நக்கீரரைப் பற்றிய மற்றொரு சுவையான வரலாறும் உண்டு. இவர் ஒரு கால் கயிலையை நோக்கிச் செல்லுகையில் இமயமலைக் கருகில் ஒரு பொய்கையில் நீராடி அண்மையிலிருந்த அரசமரத்தின் நிழலில் அமர்ந்து சிவபூசை செய்தார். அப்பொழுது அம்மரத்தினின்று ஒரு பழுப்பு நக்கீரர் முன், ஒரு பாதி நீரிலும் மற்றொரு பாதி நிலத்திலும்

அமைய விழுந்தது. நீரில் வீழ்ந்த பகுதி மீன் வடிவமும், கரையில் வீழ்ந்த பகுதி பறவை வடிவமும் பெற்று ஒன்றையொன்று இழுக்கத் தொடங்கின. இவ்விந்தையைக் கண்ணுற்ற நக்கீரரது கருத்து சிவபூசையிலிருந்து வழுவிற்று. இவ்வாறே அவ்விடத்தில் சிவபூசையில் வழுவினவர்களாகிய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மரை ஒரு மலைக் குகையில் அடைத்து, மேலும் ஒருவர் வேண்டுமெனக் காத்திருந்த 'கற்கிமுகி' என்னும் பூதம் நக்கீரரையும் எடுத்துப் போய் அக்குகையில் அடைத்து ஆயிரவர் ஆக்கித் தன்னுடைய நியமப்படி, அவ்வாயிரவரையும் உண்ணுமுன் நீராடப் போயிற்று. முன்பு சிறைபட்டிருந்த சிவனடியார்கள், எல்லோரும் நக்கீரரை நோக்கி, "யாங்கள் நீண்ட நாட்களாக இப்பூதத்தின் சிறையில் அடைபட்டிருந்தும் பூதத்தால் உணவு முதலியவற்றைப் பெற்று உயிர் வாழ்ந்திருந்தோம். இன்று உம்மால் இப்பூதத்திற்கு யாவரும் இரையாகும் காலம் கிட்டியது" என அழுது புலம்பினர். இந் நிலைக்கு இரங்கிய நக்கீரர் முருகக் கடவுளைக் குறித்துத் திருமுருகாற்றுப் படையாம் அழகிய செந்தமிழ் நூலைப் பாடிப் போற்றினர். முருகப் பெருமான் வேற்படையால் பூதத்தைக் கொன்று, புலவர்களை விடுவித்தார். இந்நிகழ்ச்சி யாவும், திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றதாக சில அறிஞர் கருதுகின்றனர். அக் கருத்திற்கேற்பத் திருப்பரங்குன்றத்தில் பங்குனித் திங்களில் இவ் வரலாறு பற்றிய திருவிழா ஒன்று இன்றும் நடைபெறுகிறது. அன்றியும், முருகன் வேற்படையால் மலையைப் பிளந்து புலவர்களை விடுவித்தான் என்பதற்குச் சான்றுபோலத் திருப்பரங்குன்றத்து மலையின் உச்சியில் ஒரு பாறை இரு கூறாகப் பிளவுபட்டு காணப்படுகிறது.

நக்கீரர் மதுரையம்பதியில் பல ஆண்டுகள் சங்கத்திற்குத் தலைமையேற்றுத் தமிழ்த் தொண்டு ஆற்றி இறுதியில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

"வில்லுக்குச் சேரன் சொல்லுக்குக் கீரன்" என்னும் முதுமொழி இவரது சொல் வன்மையைத் தெளிவுற உணர்த்துகின்றது.

(ii) சீத்தலைச் சாத்தனார்

ஐம்பெருங் காப்பியங்கள்: தமிழ் அன்னைக்கு அணிகலனாக விளங்குவன ஐம்பெருங் காப்பியங்களாகும். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகர் குலத்தைச் சேர்ந்த கோவலன், கண்ணகி ஆகியவரின் வரலாற்றைக் கூறுவது.

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எனப் போற்றப்படும் இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவர். இவர் சேர மரபினர்.

சீவகசிந்தாமணி சீவகன் என்ற அரசனுடைய வரலாற்றைக் கூறும் நூலாகும். இதனைப் பாடியவர் திருத்தக்க தேவர் என்ற சமண முனிவராவார்.

வளையாபதி என்ற நூலின் சில பாடல்களே தற்பொழுது கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து இது ஒரு பௌத்த நூல் என்று தெரிகிறது. இக் காப்பியத்தைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

குண்டலகேசி என்னும் நூல் குண்டலகேசி என்ற பெயருடைய வணிகப் பெண்ணின் வரலாற்றைக்

கூறுவது. இதுவும் பௌத்த மதக் காப்பியமேயாகும். இந் நூலின் பாடல்கள் சிலவற்றைப் புறத்திரட்டு என்ற தொகை நூலிற் காணலாம்.

மணிமேகலை என்ற நூல் கோவலனுக்குக் கணிகையாகிய மாதவியிடத்துப் பிறந்த மணிமேகலை என்பவளுடைய வரலாற்றைக் கூறுவது. மணிமேகலை இளம் பருவத்திலேயே துறவு பூண்டு அறம் வளர்த்துப் பௌத்த சமயத்தைப் பரப்பினாள். ஆதலின் இந் நூலிற்கு 'மணிமேகலைத் துறவு' என்ற பெயருமுண்டு. இந்நூலை இயற்றிய ஆசிரியர் சாத்தனார் என்பவர் ஆவார்.

பெயரும், பெயர்க் காரணமும் : சாத்தனார் மதுரையில் வாழ்ந்தவர் ; நெல், வரகு, தினை, சாமை, துவரை, இராகி, இறுங்கு, புல் என்னும் எண்வகைக் கூலங்களை வைத்து வாணிகம் செய்தவர். ஆதலின் இவர் வணிக மரபினர் என்று தெரிகிறது. வணிக குலத்தினராதலால் இவரைக் கூல வாணிகன் சாத்தனார் என மக்கள் அழைக்கலாயினர். மேலும், இவர் மதுரையில் வாழ்ந்த காரணத்தால் மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் எனப்படுவார். சீத்தலை என்ற அடைமொழியைச் சேர்த்து, இவரைச் சீத்தலைச் சாத்தனார் எனவும் கூறுவர். சீத்தலை என்பது ஓர் ஊரின் பெயராகுமென்றும், அவ்வூரில் அவர் பிறந்தமை பற்றிச் சீத்தலைச் சாத்தனார் என்ற பெயர் எழுந்ததாகவும் சிலர்

கருதுகின்றனர். அரங்கேற்றுதற் பொருட்டுப் புலவர்கள் பாடிவரும் நூல்களிலுள்ள பிழைகளைக் காணுந்தோறும் மனம் பொருது, கையிலுள்ள எழுத்தாணியால் தம் தலையிற் குத்திக்கொள்வார் என்றும், அதனால் புண்பட்டுச் சீழ்த்தலையோடு இருந்தார் என்றும் அக்காரணத்தால் சீத்தலைச் சாத்தனார் எனப் பெயர் பெற்றார் என்றும், சீழ்த்தலை சீத்தலை என மருவியது என்றும் சிலர் இயம்புவர். இவர்கள் வள்ளுவரின் முப்பாலால் இவரது தலைக் குத்து தீர்ந்தது என்று மருத்துவர் தாமோதரனார், திருவள்ளுவ மாலையில் கூறியுள்ளமையை இப் பெயர்க் காரணத்திற்கு மேற்கோளாகக் காட்டுவர்.

சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமயத்தினர்; நிரம்பிய தமிழறிவுடையவர்; "தண்டமிழ்ச் சாத்தன்" எனவும், 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' எனவும், 'நன்னூற்புலவன்' எனவும் சிலப்பதிகாரத்தில் இவர் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளார். இவர் தாம் பாடிய மணிமேகலையில், புத்த முனிவரின் சிறப்புக்களையும், பௌத்த சமயக் கருத்துக்களையும், அறத்தின் உயர்வையும் விளக்கிச் சுவைபடப் பாடியுள்ளார். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் இவர் காலத்தவராவர். சாத்தனார், பத்தினிப் பெண்டிராகிய கண்ணகியின் வரலாற்றையும் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு எடுத்துக் கூறிக் கண்ணகிக்குக் கோயில் கட்டுவிக்கச் செய்தார். கண்

ண்கியின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்குக் கூறுங் கால் அவனுடன் கேட்டுக்கொண்டிருந்த இளங்கோ வடிகளை அவளது வரலாற்றைத் தொடர் நிலைச் செய்யுளாகப் பாடுவதற்குத் தூண்டியவரும் இவரே. சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள், சாத்தனார் முன்னிலையில் அரங்கேற்றியதுபோலச் சாத்தனாரும் தாம் இயற்றிய மணிமேகலையை இளங்கோவடிகள் முன்னிலையில் அரங்கேற்றினார்.

சாத்தனார் திருவள்ளுவரிடத்தும், திருக்குறளிடத் தும் மிகுந்த ஈடுபாடுடையவர். தாம் பாடிய மணி மேகலையில்,

' தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழையென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய் "

என்று வள்ளுவர் குறளை எடுத்துக் கூறி வள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப் புலவர் வாழ்ந்த காலம் சேரன் செங்குட்டுவன் காலமான கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகும்.

(iii) இடைக்காடர்

இப் புலவர் பெருமான் இடைக்காடு என்னும் ஊரிற் பிறந்தவர். பண்டைப் புலவர் பெயர்கள் பெரும் பாலும் ஊர், சினை, தொழில் முதலியனவற்றுல்

வழங்கப் பெற்றுள்ளன என்பதைச் சங்க நூல்களால் அறியலாம். இவருக்கு இப் பெயர் ஊர் பற்றி வந்த பெயராகும். இவர் கபிலருடைய நண்பர்; அவர்பால் அளவுகடந்த அன்புகொண்டிருந்தார்; மற்றைய சங்கப் புலவர்களிடத்து எல்லையற்ற மதிப்புடையவராய் இருந்தார்; கவி பாடுவதில் பெருந்திறமை வாய்ந்தவர்.

பாண்டிய மன்னவன் நிரம்பிய கல்வி கேள்வி மிக்கவன் என்பதைக் கேள்வியுற்று, அவன்மீது சில பாடல்களை இயற்றிக்கொண்டு இடைக்காடர் அவனுடைய அவையை அடைந்தார். சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பிய பாடல்களைப் பாடிக் காட்டினார். அரசன் அழுக்காறுள்ள மனத்தினனாய், வாய் திறவாது செருக்குற்று இருந்தான். புலவர் நாணமடைந்து, மானம் புறந்தள்ளக் கோயில்புக்கு இறைவன் திருமுன்னர் வீழ்ந்து வணங்கினார். "ஆலவாய் இறைவனே! வேம்பன் என்னை இகழ்ந்ததும் அன்றி, சொல்வடிவாகி உனது இடப் பாகத்தினை விட்டுச் சிறிதும் பிரியாத உமையம்மையையும், சொற்பொருள் வடிவாகிய உன்னையும் இகழ்ச்சி செய்தான்" என்று கூறி மதுரைக்குப் புறம்பே வடபாலுள்ள ஓரிடத்தினை அவர் அடைந்தார். பிற புலவர்களும் இறைவனும் இடைக்காடர் சென்று தங்கியிருந்த இடத்தை அடைந்தனர்.

இறைவன் திருக்கோயிலை விட்டுச்சென்ற நிலையை அடியவர்கள் அரசர்க்குணர்த்த, அரசன் மனம் நடுங்கினான்; தான் செய்த பிழையை யுன்னிக் கலங்கினான்.

பின்பு விரைந்து ஓடி வடபால் புலவர் குழுமியுள்ள இடத்தை அடைந்து ஆங்கு இறைவன் வீற்றிருக்கக் கண்டு மகிழ்ந்தான்; இறைவனைக் கண்டு வணங்கித் துதித்தான். அவ் வேளையில் சொக்கநாதர், "தென்னவனே! நீ இடைக்காடன் செய்யுளை இகழ்ந்தமையால் யாம் இவ்விடத்து அடைந்தோம். இன்றுமுதல் இவ் விடம் வட ஆலவாய் என வழங்கப்பெறும்" எனக் கூறி மறைந்தார். மன்னன் இடைக்காடருக்குத் தான் செய்த பிழையை எண்ணி மனம் நொந்து அவரிடம் சென்று மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டு, அவரையும் பிற புலவர்களையும் மதுரைக்குச் சிறப்புடன் அழைத்து ஏகினான்; பின் முறைப்படி இடைக்காடனார்க்கும், ஏனைய புலவர்கட்கும் தக்க முறையில் பரிசுகள் அளித்து அவர்களைப் போற்றினான்.

இடைக்காடர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியுள்ளார்; சிறு கவிகளின் மூலம் பெருங்கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் வல்லவர்.

"கடுகைத் துளைத் தேழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்",

என்னும் குறள் வெண்பாவொன்று இவர் பாடியதாகத் திருவள்ளுவ மாலையில் உள்ளது. அன்றியும் இவர் 'ஊசிமுறி' என்ற ஒரு நூலையும் பாடியுள்ளார் என்று நாம் அறிகிறோம். அந் நூல் "இடைக்காடர் ஊசி முறி" என வழங்கப் பெறுகிறது. உவமைகளை

அமைத்துக் கூறுவதிலும், முல்லைத்திணை, மருதத் திணை இவற்றைப் பாடுவதிலும் இடைக்காடர் ஆற்றல் பெற்றவர்.

(iv) நல்லந்துவனார்

இப் புலவர் மதுரையில் வாழ்ந்தவர். இவர் 'மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்' என்று குறிக்கப் பெற்றுள்ளார். இவரை 'நவ்வந்துவனார்' என்றும் கூறுவர். 'அந்துவன்' என்பது இவருடைய இயற் பெயராகும். நக்கீரர், நப்பசலையார் போன்று இவர் பெயருக்கு முன்பும் சிறப்புப்பொருளை யுணர்த்தும் 'ந' என்பது சேர்க்கப்பெற்றுள்ளது. இவர் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர். இவர் கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையுள் ஈற்றிலுள்ள 'நெய்தற் கலியைப் பாடி ஏனைய நான்கு கலிகளையும் தொகுத்து, கடவுள் வாழ்த்துச் செய்யுளையும் பாடிமுடித்துச் சேர்த்துக் 'கலித்தொகை' என்ற தொகை நூல் ஆக்கினார். இவர் மதுரையையும், திருப்பரங்குன்றத்தையும், வைகை யாற்றையும், அதன் கரையிடத்துள்ள தலங்களையும் புகழ்ந்து சிறப்பித்துள்ளார். நெய்தல் நிலப் பழக்க வழக்கங்களையும், சமய ஒழுக்கங்களிற் சில வற்றையும் இவர் நெய்தற் கலியில் கூறியுள்ளார்; அந் நூலில் உலக மாந்தர்க்கு நன்னெறி காட்டும் கருத்துக் களையும் அமைத்துள்ளார். "நாடும் பொருள் சான்ற நல்லந்துவனாசான்" என்று நல்லந்துவனார் சிறப்பிக்

கப் பெற்றுள்ளார். இவரது பாடல்களை நச்சினார்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகர் முதலான சிறந்த உரையாசிரியர்கள் எடுத்துப் போற்றியுள்ளனர்.

(v) நச்சினார்க்கினியர்

பண்டைத் தமிழ் நூல்கள் அழியாது நிலவ அவைகட்கு உரை எழுதி உய்யச்செய்த சிறப்புடையவர் நச்சினார்க்கினியர் ஆவார். இவர் மதுரையம்பதியினர்; அந்தணர் மரபினர்; தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் நிரம்பிய புலமையுடையவர்; தம் சீரிய அறிவாலும், இடைவிடாத முயற்சியாலும் தொல்காப்பியம், கலித்தொகை, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, குறுந்தொகையில் இருபது செய்யுட்கள் ஆகியவைகட்குச் சீரிய உரை வகுத்துள்ளார். இந்நூல்களின் பெருமையைத் தமிழுலகம் அறியுமாறு செய்தவரும் இவரே. நச்சினார்க்கினியர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் காலத்திற்குப் பிற்பட்டவர்; நூற்பொருள்களை நுண்ணியதாக ஆராய்ந்து உரை செய்ய வல்லவர். இவர் பண்டைப் பனுவல்கள் பல இறவாது நிலவ உரை எழுதி, உலகிற்குப் பேருதவி புரிந்துள்ளார். நச்சினார்க்கினியர் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உரையாசிரியர் ஆவார்.

(vi) வள்ளுவர்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று அமரகவி பாரதியார் தமிழ் நாட்டையும், வள்ளுவரையும் ஒருங்கே வியந்து கூறியுள்ளார். அத்தகைய தெய்வப் புலவர் திருவள்ளுவருடைய பிறப்பினைப்பற்றியும், வாழ்க்கையினைப் பற்றியும் செவி வழிச் செய்தியாகப் பல வரலாறுகள் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. ஆனல், அவற்றையெல்லாம் உண்மையெனக் கொள்ளுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை. திருவள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தவர் என்பர். இவருடைய திருக்கோயில் ஒன்று மயிலையில் இருப்பதை இன்றும் காணலாம். இவர் மதுரையில் தோன்றி வாழ்ந்தவரென்றும் ஒரு சிலர் கூறுவர். தம் கூற்றை உறுதிப்படுத்தத் திருவள்ளுவமாலையில் நல்கூர் வேள்வியார் என்னும் புலவர் பாடிய செய்யுளை எடுத்துக் கூறுவர். அப்பாட்டின் கருத்து, 'கீதாசாரியராய் உலகை உய்வித்த கண்ணபிரான் எங்ஙனம் வட மதுரைக்குச் சிறந்தவரோ அங்ஙனம் திருக்குறள் ஆசிரியராய்த் தமிழகத்தை உய்வித்த திருவள்ளுவர் தென்மதுரைக்குச் சிறந்தவரென்பது ஆகும். அதனின்று கண்ணன் தோன்றிய இடம் வடமதுரை ஆவதுபோல், திருவள்ளுவர் பிறந்த இடம் தென் மதுரை என்பதாகக் குறிப்புப்பொருள் கொள்ளப்படும்.

மதுரை மாநகரை இவரது பிறப்பிடமாகவும், மயிலாப் பூரை இவரது வாழ்விடமாகவும் சிலர் கருதுவர்.

திருவள்ளுவரது காலம் கடைச் சங்க காலம் ஆகும். அதாவது சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் இவர் வாழ்ந்தவரென்று ஆராய்ச்சி யாளர் உரைப்பர்.

திருக்குறள் அரங்கேற்றம் : திருவள்ளுவரது வாழ்க்கை வரலாறு எவ்வாறிருப்பினும், அவர் கடைச் சங்க காலத்தில் மதுரையை அடைந்து தாம் இயற்றிய நூலை அச் சங்கத்தில் அரங்கேற்ற விரும்பினர் என்பது திண்ணம். திருவள்ளுவரின் புலமையையும் புகழையும் கேள்வியுற்ற சங்கப் புலவர்கள் அழுக்காறு கொண்ட னர். ஆதலின், அவர்கள் வள்ளுவர் குறளில் குற்றங் கூறி எங்ஙனமேனும், அரங்கேற்றம் நிகழாதவாறு தடுக்க முற்பட்டனர். ஆயினும், சங்கப் பலகை திருக் குறளுக்கு இடம் தந்தது. சங்கப் பலகை இறைவ ஞல் அளிக்கப்பெற்ற சிறப்புடையதாகும். ஒருகால் பாண்டியனும் புலவர்களும் இறைவனிடத்து உண் மைப் புலமையை அறிவதற்கு உரிய வழியை வகுத்தருள வேண்டுமென்று வேண்ட, அதற்கு இணங்கிய இறைவன், சங்கப் பலகை ஒன்றை அளித்து, “ இப் பலகை முற்றும் கற்று முழுதும் ஐயமின்றி உணர்ந்த அருந்தமிழ்ப் புலவர்க்கே இடமளிக்க வல்லது. தகுந்த புலமை உடையோர்க்குத்தான் ஒரு முழம் வளர்ந்து

இடம் அளிக்கும். இதனைக் கொண்டு உண்மைப் புலமையைக் காணுங்கள்" என்று கூறி மறைந்தார். அத்தகைய சிறப்புடைய சங்கப் பலகை திருக்குறளுக்கு இடம் அளித்ததைக் கண்ட சங்கப் புலவர்கள் வியந்தனர்; பொறாமை நீங்கப்பெற்ற உள்ளத்தினராய் வள்ளுவரைப் புகழ்ந்தனர். வள்ளுவரையும் திருக்குறளையும் சிறப்பித்துப் பாடல்கள் பாடினர். அவ்வாறு பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை எனப்படும்.

'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்றும், 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி', 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்றும் வழங்கும் தொடர்களால் திருக்குறளின் சிறப்பு நன்கு புலப்படும்.

தமிழிலக்கியத்திற்கு ஏற்றத்தையும் தனிச் சிறப்பையும் தந்து நிற்கும் திருக்குறள் எந்நாட்டினராலும், எச் சமயத்தினராலும் போற்றப்படுகிறது; எக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய உண்மைகளைக் கொண்டு இலங்குகிறது; ஒப்பற்ற நீதி நூலாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றது. திருக்குறள் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியின் சிறப்பையும் உலகிற்கு அறிவிக்கும் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளைப் பயிலுவதால் இம்மை மறுமைப் பயன்களை எய்துதல் கைகூடுமென்பது திண்ணம்.

(vii) புகழேந்திப் புலவரும் ஒட்டக்கூத்தரும்

பாண்டிய மன்னர்களால் போற்றப்பட்ட பிற்காலத் தமிழ்ப் புலவர்களுள் புகழேந்திப் புலவர் ஒருவராவார். இவர் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்குமுன் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்விளேந்தகளத் தூரில் பிறந்தார். இவர் இளமையிலேயே அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைக் கற்றுக் கவிபாடும் திறமையும் பெற்றிருந்தார். இவர் நால்வகைப் பாக்களுள் ஒன்ருகிய வெண்பாவினை இயற்றுவதில் வல்லவராகையால் 'வெண்பாவிற் புகழேந்தி'என்று பிற்காலத்தில் புகழப் பெற்ருர்.

புகழேந்தியின் புலமையைப் பற்றிக் கேள்வியுற்ற குலசேகரன் என்ற பாண்டிய மன்னன் அவரைத் தன் நாட்டிற்கு அழைத்துச் சிறப்புச் செய்தான்; தன் அவையிலேயே இருக்கச் செய்தான். புகழேந்தியாரும் அவையில் அமர்ந்து தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்தும், தாம் அறிந்த உண்மைகளையும் இலக்கிய நயங்களை யும் பாண்டியனுக்குக் கூறியும் மகிழ்வித்தார். மேலும், வேந்தனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவனுடைய புதல்விக்குத் தமிழ் நூல்களை முறைப்படி கற்பித்து வந்தார். அப் பெண்மணி சிறந்த அறிவுடையவளாத லால், விரைவில் பயின்று செய்யுள் இயற்றும் ஆற்றல் உடையவளானுள்.

அக் காலத்தில் விக்கிரமசோழன் என்னும் அரசன் உறையூரில் வீற்றிருந்து சோழ நாட்டை அரசாண்டு

வந்தான். அவ்வேந்தனின் அவைக் களப் புலவராக ஒட்டக்கூத்தர் என்பவர் இருந்தார். சோழமன்னன் தன் மகன் குலோத்துங்கனுக்குப் பாண்டியன் மகளே மணம் செய்யக்கருதிக் குலசேகரன் கருத்தை அறிந்து வருவதற்காகப் புலவர் ஒட்டக்கூத்தரை மதுரைக்கு அனுப்பினுன்.

ஒட்டக்கூத்தர் மதுரைக்குச் சென்று, பாண்டிய மன்னனுல் நன்கு வரவேற்கப்பட்டு, அவையில் சிறப்புடன் வீற்றிருந்தார். அத்தருணத்தில்பாண்டியன் வேடிக்கையாகப் புலவரை நோக்கி, "உங்கள் சோழ வேந்தரின் மகன் என் மகளே மணக்கும் பெருமையுடையவனே?" என்று கேட்டான். அதற்கு ஒட்டக்கூத்தர்,

"கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!
வீரர்க்குள் வீரனெரு மீனவனே அம்மானே!
வெற்றிப்புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக்கு (உ)றந்தைநிகர் கொற்கையோ அம்மானே!
ஒக்குமோ சோணுட்டைப் பாண்டிநா டம்மானே!"

என்ற பாடலேப் பாடி மறுமொழி பகர்ந்தார். அதன் கருத்து, 'கோடைக்காலத்திலும் கடலெனப் பரவிப் பாய்ந்து வளம்படுத்தும் காவிரியே சிறந்த ஆறு; வையை அன்று. எம் அரசரது மாலேயாகிய ஆத்தியே சிறந்தது; உமது மாலேயாகிய வேம்பு அன்று. எம்

அரசன் கதிரவன் குலத்தில் தோன்றியவன் ; கதிரவன் முன் ஒளிமங்கும் மதிக்குலம் உம்முடையது; எம் நாட்டுக் கொடியாகிய புலிக் கொடிக்கு உம்முடைய மீனக்கொடி இணையாகாது ' என்பதாகும்.

இதனைக் கேட்ட மதுரை மன்னனின் அரசவைப் புலவர் புகழேந்தியார்,

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்த தம்மானே !
ஒப்பரிய திருவிளையாட்(டு) உறந்தையிலோ அம்மானே!
திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானே !
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே !
கரையெதிரே(டு) ஏறியது காவிரியோ அம்மானே !
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவைபணிந் ததுசோழன் பதந்தனையோ அம்மானே !
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வெளிதோ அம்மானே!"

என்ற பாடலைப் பாடினார். இதன் கருத்து, 'தமிழ் முனிவனாகிய அகத்தியன் தங்கித் தமிழ் வளர்த்தது பொதிய மலையிலாகுமேயன்றிச் சோணாட்டிலுள்ள நேரிமலையிலன்று. சிவபெருமான் திருவிளையாடல்களை நிகழ்த்திய இடம் மதுரையே ; உறையூர் அன்று. உமையொருபாகனின் முடியின்மீது இருக்கும் உயர்வைப் பெற்றது மதியே ; கதிரவன் அன்று. திருமால் மீனாக உருவெடுத்தாரே யல்லாமல் புலியாகத் தோன்றவில்லை. சம்பந்தர் பதிகம் எழுதியிட்ட ஏடு எதிர்த்துச் சென்று கரையேறியது வையை ஆற்றில்தான் ; காவிரியாற்றில் அன்று. கடல் கைதவன் கால்களைப் பணிந்து

அலம்பியதே யல்லாமல் சோழன் கால்களையன்று. ஆகவே, பாண்டியர் பெருமை பகர ஒண்ணாதது ஆகும்' என்பதாம். இவ்வாறு புகழேந்திப் புலவர் பாண்டியன் பெருமையை எடுத்துக்காட்டி, ஒட்டக்கூத்தர் கூறிய ஒவ் வொன்றுக்கும் தக்கவாறு மறுமொழி கூறினர். இதைக் கேட்ட ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்திப் புலவரிடம் சினமும் அழுக்காறும் ஏற்பட்டன.

பிறகு, ஒட்டக்கூத்தர் பாண்டியனிடம் விடைபெற் றுச் சென்ருர். சிறிதுகாலத்திற் பாண்டியன் மகளுக் கும் குலோத்துங்க சோழனுக்கும் திருமணம் நிகழ்ந் தது. பாண்டியன் தன் மகளைச் சோழ நாட்டுக்குச் சீர் சிறப்புக்களுடன் அனுப்பியபொழுது, அவள் விருப்பப் படியே புகழேந்திப் புலவரையும் உடன் அனுப்பினன்.

சிறிது காலஞ் சென்றபின் விக்கிரமன் இறக்க, அவன் மைந்தனை குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான். ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புல்வரிடம் கொண்டிருந்த பகைமையை மறக்கவே இல்லை. ஆத லால், அவர் காலம் இடமறிந்து அரசனிடத்தில் அவரைப்பற்றிக் குறை கூறிச் சினங்கொள்ளுமாறு செய்தார். அரசனின் சினம் புகழேந்தியாரைச் சிறையி லடைத்தது.

சிறையில் அடைபட்ட புலவர் செம்மலாகிய புகழேந்தியார் போதிய உணவு இன்றி மிகுந்த துன்ப மடைந்தார்; தமது விதிப்பயனை எண்ணி நொந்தார். சிறைச்சாலை வழியே தண்ணீர் எடுக்கச் செல்லும்

மகளிர், புலவர் நிலை கண்டு இரங்கி அவர்க்கு வேண்டிய உதவிகள் புரிந்தனர். புலவரும் உளங் கனிந்து அம் மகளிர் மனமகிழ்ந்து பாடிக் களிக்க அல்லியரசி மாலை, பவளக்கொடி மாலை, புரந்தரன் களவு மாலை முதலிய நூல்களைப் பாடிக்கொடுத்தார்,

பல நாட்கள் கழித்தும் புகழேந்திப் புலவர் சிறையி யினின்றும் விடுதலை பெறவே இல்லை; அவரை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணமும் சோழனுக்கு ஏற்படவில்லை. ஒட்டக்கூத்தரின் மொழி கேட்டு அரசன் புகழேந்தியாரைச் சிறையில் அடைத்ததும், புலவர் சிறையில் படும் துன்பங்களையும், மகளிர் அன்னார்க்கு உதவி புரிதலையும் கேள்வியுற்ற அரசியார் வருந்தினர்; புலவரை எவ் வகையிலேனும் விடுவித்துவிட வேண்டு மென்று துணிபு கொண்டாள்.

ஆராயாமற் புலவரைச் சிறையிலிட்ட கணவன்மீது அரசி கோபங்கொண்டாள்; அரசனைக் காண விரும் பாது தனது அறையின் வாயிற் கதவைத் தாழிட்டுவிட் டாள். அரசன் அரசியினது ஊடலைத் தவிர்க்க எவ் வழியில் முயன்றும் ஒன்றும் பயனில்லாமற் போயிற்று. அரசி கொண்டுள்ள கோபத்தைத் தணிக்குமாறு ஒட்டக் கூத்தரிடம் கூறவே, அவர் வாயிற் கதவினருகிற் சென்று சினந் தணியுமாறு அழகிய ஒரு பாடலைப் பாடினார். ஒட்டக்கூத்தரின் பாடலைக்கேட்ட அரசியார் மேலும் கோபம் மூண்டவளாய், "ஒட்டக்கூத்தன்

பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்று கூறி மற்றொரு தாழையும் இட்டாள்.

அரசியின் இத்தகைய சினத்திற்குக் காரணம் யாதென மன்னன் ஆராயலானான்; இறுதியில் ஒட்டக் கூத்தர் புகழேந்தியாரைச் சிறையிலடைக்கச் செய்தமையால் அவர்மீது சினமும், தான் அவர் கருத்துக்கிணங்கித் துணையாக இருந்தமையால் தன்மீது வெறுப்பும் அரசிக்கு ஏற்பட்டனபோலும் என்று உய்த்து உணர்ந்தான். அக்கணமே புகழேந்தியாரை விடுவித்து அரசி கொண்டுள்ள சினத்தை அகற்றுமாறு அவரை வேண்டிக்கொண்டான். புகழேந்தியாரும் அதற்கு இணங்கி, அரசியின் அறையை அடைந்து தன் வருகையை அரசிக்கு அறிவித்தார். மேலும், "சோழ மன்னன் குற்றம் புரியினும் அதைப் பொருட்படுத்துதல் பெருமையாகாது. கற்புடைய மகளிர், கணவர் குற்றம் புரியினும் பொறுத்துக்கொள்ளாது சினங்கொள்வாரோ? ஆதலின் நீ கொண்ட சினம் தணிவாயாக!" என்ற கருத்துப்பட ஒரு பாடலைப் பாடினார். ஆசிரியரின் பாடல் கேட்ட கொற்றவன் மனைவியும் மனமகிழ்ந்தாள். அரசி தாழைத் திறந்து, கொண்ட சினமும் மாறினாள். அது முதல் சோழனும் புகழேந்தியாருக்குக் குறை சிறிதும் நேராதவாறு போற்றிவந்தான்.

பின் புகழேந்தியார் தமிழ்ச் சுவையெல்லாம் ஒன்று கூட்டி அமைத்ததுபோலப் பயில்தொறும் சுவைபயக்கும்

" நளவெண்பா " என்ற நூலைப் பாடிச் சோழன் அவையில் அரங்கேற்றினர்.

நளவெண்பா என்னும் சீரிய நூலால் புகழேந்திப் புலவர் அன்றுதொட்டு இன்றளவும் புகழ் ஏந்தி விளங்கி வருகிருர்.

மதுரையில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் மற்றும் பலர் உளர். இவர்கள் பெயர்களை அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலான எட்டுத்தொகை நூல்களில் பரக்கக் காணலாம்.

---

8. இக்கால மதுரை

ஆங்கில ஆட்சி: வாணிகம் காரணமாக நம் நாட்டிற்கு வந்த ஆங்கிலேயர் நட்புக் கொள்ளுதல், பொருள் கொடுத்தல், வேறுபடுத்தல், ஒறுத்தல் எனும் நால்வகைச் சூழ்ச்சிகளாலும் நாளடைவில் நம் இந்திய நாட்டைக் கைப்பற்றலாயினர். அவர்களது ஆட்சி மதுரைப் புறங்களிலும் ஏற்பட்டு, மதுரை நகர் சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் அவர்களது ஆளுகையில் இருந்தது. ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் மதுரை, மூதூர் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்தது; மக்களும் அமைதி வாழ்க்கை நடத்தலாயினர்.

மதுரை மாவட்டம்: மதுரை மாநகர் மதுரை மாவட்டத்தின் தலைநகரமாகும். இம் மாவட்டம் ஒரு சமவெளிப் பகுதி யெனினும், இதனகத்தே கோடைக் கானல் மலை, பழனி மலை, ஏலக்காய் மலை முதலிய மலைகளும், மற்றும் பல குன்றுகளுமுள்ளன.

பெரியாற்று அணைக் கால்வாய்களும், வையை ஆறும் பாய்வதால் இப்பகுதி நீர்வளம் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தில் ஒன்பான் வகைத் தானியங்களும் விளைகின்றன; பருத்தி விளைவு மிகுதி. மலைச் சாரல்களில் ஏலக்காய் முதலிய நறுமணப் பொருள்கள் கிடைக்கின்றன. தமிழ்க் கடவுளாம் முருகனது ஆறு படை வீடுகளில் பழனி எனப்படும் ஆவினன்குடி, திருப்பரங்குன்றம், அழகர்கோயில் எனும் பழமுதிர்

சோலை இம் மூன்றும் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளனவாகும்.

மதுரைப் பெருங் கோயில்: நமது தமிழ் நாட்டின் இரண்டாவது பெருநகரம் மதுரை. இப் பெரு நகருக்குப் பேரணி தருவது பெரிய கோபுரங்கள் பலவுடைய மதுரை மாநகர்ப் பெருங் கோயிலேயாகும். "திருக்கோயிலில்லாதது திருவிலியூர்" என்பதற்கேற்ப அமையாது. அழகிய கோயில் ஊர் நடுவேயமைந்து காண்போர் கண்ணையும் கருத்தையும் கவருகிறது.

இக் கோயிலைப் பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் பல வகையில் அழகுபடத் திருப்பணி செய்துள்ளார்கள். அவரவர்கள் சிற்ப சித்திரங்கள் கோயிலை அழகுபடுத்துகின்றன. இக் கோயிலின் கோபுரத் தூண்கள் யாவும் ஒரே கல்லால் ஆகி மிக உயரமுடையனவாய் உள்ளன. கோபுரங்கள் யாவும் பல வகையான சிற்பங்களைப் பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றன.

இப் பெருங் கோயிலுள் மிக்க சிறப்புற்று விளங்குவது மீனாட்சியம்மன் கோயில். வழிபாட்டிற்கு வரும் மக்கள் அனைவரும் மீனாட்சியம்மன் சந்நிதி வழியாகவே வந்து வழிபாட்டைத் தொடங்குவார்கள். கோயிலின் முன்னால் காணப்படுவது ஒரு மண்டபம். அதனை எண் சக்தி மண்டபம் என்கிறார்கள். அம் மண்டபத்தில் கோயில் வழிபாட்டிற்குரிய பொருள்கள் யாவும் விற்கப்படுகின்றன.



மதுரைப் பொற்றுமரைத் திருக்குளமும், பெருங்கோயிலும்

இதனையடுத்து விளங்கும் மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபம் எனப்படும். இது திருமலை நாயக்கர்காலத்துக் கட்டப்பட்டது. இம் மண்டபத்தின் இருமருங்கும் பூக் கடைகளும், வளையல் கடைகளும் இருக்கின்றன.

இம் மண்டபங்களை யடுத்து உள்ளே சென்றால் பொற்றாமரைக் குளம் காணப்படுகிறது. குளம் மிகச் சிறியது. ஆனால் அழகானது. தண்ணீர் அருகிக் காணப்படும். இருப்பினும் புனித தீர்த்தமாதலால் அடியவர்கள் அதனில் படிந்தே செல்வர். ஒரு தலத்திற்குரிய மூன்று சிறப்புக்களுள் தீர்த்தச் சிறப்பை விளக்குவது இப் பொற்றாமரைத் தீர்த்த மாகும்.

இக்குளத்தின் கீழ்புறமும், வடபுறமும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் குறிக்கும் அழகிய சுவரோவியங்களைக் காணலாம். தென்புறச் சுவரில் 1330 குறட்பாக்களும் பளிங்குக் கல்லில் பொறிக்கப் பட்டு காட்சி தருகின்றன. குளத்தின் தென்மேற்கே மூலையில் திருநீற்றுப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார்.

இதனையடுத்து அழகிய சிற்பங்கள் பல நிறைந்த கிளிக்கட்டு மண்டபம் உள்ளது. அங்கே இன்றும் அழகிய பல கிளிகள் வளர்க்கப்படுகின்றன. இம் மண்டபத்தில் உள்ள தூண்கள் ஒவ்வொன்றும் அழகிய வேலைப்பாடுடையவை. மண்டபத்தின் மேல் முகட்டிலும் பல சித்திரங்கள் அழகுறத் தீட்டப்பட் டுள்ளன.

இங்குள்ள கதவுகளிலெல்லாம் பலவகையான நாட்டியங்களைக் குறிப்பிடும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மரங்களிலும், கல்லிலும் செதுக்கியுள்ள சிற்பங்கள் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாக அமைந்து விளங்குகின்றன.

இம் மண்டபத்தின் இடப் பக்கத்தில் இத்தலத்துக்குரிய சித்திவிநாயகர் இருக்கின்றார். வலப்பக்கத்தில் முருகக் கடவுள் உள்ளார். இவர்களைக் கடந்து உள்ளே சென்றால் கோயிலின் மகாமண்டபத்தைக் காணலாம். இம் மண்டபத்தின் இடப் பக்கத்தில் திருமலை நாயக்கர் தம் இரு மனைவிமார்களுடன் கூடியிருக்கும் சிலை காணப்படுகிறது. இதனைப் பார்த்து உள்ளே சென்றால் அர்த்த மண்டபம் அழகுற விளங்குவதையும், அதனுள் அங்கயற்கண்ணி நின்ற கோலத்துடன் குழந்தைபோன்று காட்சியளிப்பதையும் கண்டு களிக்கலாம்.

பின்னர், மீனாட்சி கோயிலை வலமாக வந்து வடக்கு நோக்கிச் சென்றால் சொக்கநாதர் கோயிலையடையலாம். செல்லும் வழியில் முக்குறுணிப் பிள்ளையார் என்ற பெரிய பிள்ளையாரைக் காணலாம். பிள்ளையாரை வணங்கிவிட்டுத் திருச்சுற்று வழியாக வலம்வந்து சொக்கநாதர் கோயிலை யடையவேண்டும். இக் கோயில் அம்மன் கோயிலைவிட இருமடங்கு பெரியது.

சொக்கநாதர் கோயிலின் திருச்சுற்றில் பல கட்டளை மண்டபங்கள் காணப்படுகின்றன. அம் மண்டபங்

களில் இறைவர் திருவிழாக் காலங்களில் தங்கிச் செல்வதை இன்றுங் காணலாம். இம் மண்டபங்களை யடுத்துச் சங்கத்தார் கோயில் காணப்படுகிறது. அக் கோயிலுள் நாற்பத்தொன்பது புலவர்களின் திரு வுருவங்கள் உள்ளன.

அதனையடுத்து உள்ளது நடராசப்பெருமான் கோயில். அக்கோயிலின் எதிரில் உள்ள தூண்களில் தாண்டவக் கலையை விளக்கும் சிற்பங்கள் காணப்படு கின்றன. அவற்றுள் ஊர்த்துவதாண்டவரின் சிற்பம் மிகச் சிறப்பானது. இதன் எதிரே சமயாச்சாரியார் நால்வருக்கும் தனியே கோயில் காணப்படுகின்றது.

சந்நிதியின் எதிரே உள்ள மண்டபத்தைக் கம்பத் தடி மண்டபம் என்பர். அம்மண்டபத்தை எங்கிருந்து நோக்கினும் அழகிய சிற்பங்களே காணப்படும். இதனைக் கடந்து உள்ளே சென்றால் திருச்சுற்றில் கடம்ப மரம், சாட்சிக் கிணறு ஆகியவைகளைக் காணலாம்.

சொக்கநாதர் கோயிலின் வலப்புறம் வெள்ளியம் பலம் உளது. இதனுள் பெருமான் வலக் காலைத் தூக்கி மாறியாடியுள்ளார். தமிழ் நாட்டில் உள்ள ஐந்து சபைகளுள் இது ஒன்றாகும்.

இந்நகரை முன்னோர்கள் 'திருவிழா நகரம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதன் காரணம் ஆண்டில் 294 நாட்கள் இக் கோயிலில் விழா நடைபெறுகின்றது.

இங்கு நடைபெறும் விழாக்களில் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவை சித்திரைத் திருவிழா, தெப்பத் திருவிழா, ஆவணி மூலத் திருவிழா ஆகியவைகளாகும். இம்மூன்றனுள்ளும் மிகவும் சிறப்பினையுடைய திருவிழா சித்திரைத் திருவிழாவேயாகும்.

சிற்பச் செல்வம்: மதுரை நகரில் அங்கயற் கண்ணி அமர்ந்திருக்கும் ஆலயத்திற்காணும் வியத்தகு சிற்ப வேலைப்பாடுகள் நம் தமிழ் நாட்டின் சிற்பக் கலை யின் உயர்நிலையை உணர்த்துவனவாகும். ஆலயத் தூண்களில் விளங்கும் கருங்கற் சிலைகள் மிக்க எழில் வாய்ந்தன. மேலும், இக்கோயிலில் ஒலித் தூண் ஒன்று உள்ளது. அதைத் தட்டினல் பல வகையான இசை ஒலிகள் எழுகின்றன. வட நாட்டினரும், அயல் நாட்டினரும் பெருந் திரளாக வந்து இவ் வாலயத் தைக் கண்டு வியந்து செல்கின்றனர்.

நான்காவது தமிழ்ச் சங்கம்: 'தமிழ் மொழி வளர்ச்சியே தாய்நாட்டு வளர்ச்சி' என்றும், 'மொழிப் பற்று இன்றி நாட்டுப் பற்று வலுப்பெருது' என்றும் சேதுபதி பாண்டித்துரைத் தேவர் உணர்ந்து 1901இல் புதியதொரு தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவினர். இஃதே நான்காம் தமிழ்ச் சங்கமாகும். சேதுபதி அவர்கள், செந்தமிழ்க் கலாசாலை ஒன்றையும் தோற்று வித்தார்; அதன்கண் சங்க நூல்களைப் பயின்று தகுதி பெறுவோருக்குப் பண்டிதர் பட்டம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். தமிழ் வளர்ச்சிக்காகப் பாண்டியன்

நூல் நிலையம், நூலாராய்ச்சி நிலையம் முதலியனவும் நிறுவப்பட்டன. ஆனல் சில ஆண்டுகளாகத் தமிழ் நாடு முழுமைக்கும தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்று தோன்றி வருடந்தோறும் பல பேரூர்களில் மாநாடு கூட்டித் தொண்டு புரிந்து வருவதால் நான்காவது தமிழ்ச் சங்கம் ஓரளவே பயன்பட்டு வருகின்றது.

இந்தியக் குடியரசு ஆட்சி: உலகம் போற்றும் மாபெரும் தலைவர் காந்தியடிகள் நிகழ்த்திய அறப் போரின் விளைவாக ஆங்கிலேயர் 1947ஆம் ஆண்டில் நமது நாட்டை விட்டு அகன்றனர். காந்தியாரின் இடை யரு முயற்சியால் அன்னிய ஆட்சி நீங்கி நம் பாரதநாடு முழு உரிமை பெற்றது. இந்தியக் குடியரசு ஆட்சியில் மதுரை மாநகர் புத்துயிர் பெற்று இலங்கி வருகிறது.

மறுமலர்ச்சி: வரலாற்றுக்கும் எட்டாத காலத்தி லிருந்து பன்னூறு ஆண்டுகளாக நிலைபெற்றுள்ள மதுரை மாநகர், மாந்தர் வாழ்க்கையைப்போல் வெவ் வேறு காலங்களில் மேன்மையுற்றும், தாழ்மையுற்றும் வந்துள்ளது. இப்பொழுது மதுரை மாநகர் மறு மலர்ச்சி அடைந்து வருகிறது.

போக்குவரத்து: மதுரை மாநகரில் ஏறத்தாழ ஐந்து இலட்சம் மக்கள் நிறைந்துவாழ்கின்றனர். மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வரு கின்றன. வீட்டு வசதிகள், போக்குவரத்து வசதிகள்

ஆகியவை மதுரையில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளன.

தொழில் நிலையங்கள் : மதுரை மாநகரில் பஞ்சாலைகளும், தொழிற்சாலைகளும் பல உள்ளன. இவற்றில் பெரியதும் சிறப்புமுடையது ஆர்வி நூற்பு ஆலையாகும். இது மதுரை மில் என்றும் வழங்கப்படுகின்றது. இது உலகில் உள்ள பெரிய நூற்பாலைகளுள் ஒன்று. இது ஓர் ஆங்கிலேய நிறுவனம். தரத்தில் மேம்பட்ட நூல் இங்கே நூற்கப்பட்டு வெளிநாடுகட்கு அனுப்பப்படுகிறது. இந்த நூற்பாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கட்குத் தனிக் குடியிருப்பு திருப்பரங்குன்றத்தில் கட்டப்பட்டுள்ளது.

இதற்கடுத்தபடியாக மீனாட்சி பஞ்சாலையைக் குறிப்பிடலாம். இவ்வாலையில் துணியும் தயாரிக்கிறார்கள். இவ்வாலைத் தொழிலாளர்கட்குப் பசுமலையில் குடியிருப்பு அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இவையேயன்றி மகாலட்சுமி நூற்பாலை, இராசா நூற்பாலை முதலிய ஆலைகளும் உள்ளன. மதுரை கைத்தறி நெசவாளர்கள் பலர் நிறைந்த நகரம். கைத்தறி ஆடை நெய்யும் தொழில் இங்கு முதன்மையான தொழில்.

இவையேயன்றி சிற்பஞ் செதுக்குவதிலும், தங்கம், வெள்ளி இவற்றால் ஆகிய அணிகலன்கள் அழகுறச் செய்வதிலும் தேர்ச்சி பெற்றோர் பலர் இன்றும் வாழ்கின்றார்கள். இந்தியாவிலேயே சிறந்த தொழிலாளிகள் பலர் வாழ்கின்ற நகரம் மதுரை மாநகரமே யாகும்.

இஃது சென்னை மாநிலத்தில் இரண்டாவது சீரிய நகரமாக விளங்குகிறது. இந் நகரில் நாகரிக நலன்கள் பலவும் அமைந்துள்ளன. கல்வி நிலையங்களும், தொழிற்சாலைகளும், அரசியலார் அலுவலகங்களும், நூற்றுக்கணக்கான கடைகளும் தோன்றியுள்ளன. மக்களின் மன மகிழ்ச்சிக்காகப் பூங்காக்களும், வானொலிப் பொறிகளும், படக்காட்சிக் கூடங்களும் மலிந்து காணப்படுகின்றன. மின்னொளிர் விளக்குகள் எங்கும் இரவில் மிளிர்கின்றன. மதுரைப் புகைவண்டி நிலையம் பல இடங்களையும் இணைக்கின்றது. புகை வண்டி நிலையத்திலிருந்து பல இடங்கட்கு பேருந்து ஊர்திகள் செல்லுகின்றன. இவ் வசதிகளோடு இங்கு ஒரு விமான நிலையமும் உள்ளது. இங்கிருந்து திருவனந்தபுரம், சென்னை முதலிய இடங்கட்கு விமானங்கள் செல்கின்றன. இவ்வாறு மதுரை மூதூர் புது மெருகுபெற்றுத் திகழ்கின்றது.

இனி வருங்காலத்தில் மதுரை மாநகரம் பலவகைச் செல்வங்களும் பெற்று, மேன்மேலும் ஓங்கி உயர்ந்து விண்ணவரது தலைநகர்போல் இலங்குமாறு இறைவன் இன்னருள் புரிவானாக!

“வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்,
வாழிய பாரத மணித்திரு நாடு”

கட்டுரைத் தலைப்புக்கள்

கீழ்க்காணும் தலைப்புக்கள் ஒவ்வொன்றையும் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மிகாது கட்டுரை வரைக:

[ஒவ்வொரு தலைப்பின்கீழ்க் கொடுத்துள்ள குறிப்புக்களைத் தனித்தனிப் பத்திப் பிரிவுகளாக அமைத்து எழுதின் நலம்.]

I. பாண்டியர் வளர்த்த முச்சங்கங்கள்:

முன்னுரை — பாண்டியர் பெருமை — குமரிக் கண்டம் — முதற்சங்கம் — இடைச் சங்கம் — கடைச்சங்கம்—முடிவுரை.

II. மாணிக்கவாசகரும் அரிமர்த்தன பாண்டியனும்:

பாண்டியர் செங்கோன் முறை — வாதவூரர் அமைச்சராதல் — குதிரை வாங்கச் செல்லுதல்— சைவப்பற்று—கோவில் திருப்பணி — நரிகளைப் பரிகளாக்கல் — மன்னனின் பெருஞ் சீற்றம் — வாதவூரர் பெருமை—முடிவுரை.

III. சைவமும் சமணமும்:

சைவ, சமண சமய நிலை — கூன்பாண்டியன் ஆட்சி—சமண சமயத்தின் ஏற்றம் — பாண்டியனின் வெப்பு நோய் — சம்பந்தர் வருகை — வாதப் போர் — சைவத்தின் ஏற்றம்—முடிவுரை.

111870

IV. பாண்டியர் வீழ்ச்சியும் முஸ்லிம் ஆட்சியும் :

முன்னுரை — நாட்டின் அக்கால நிலை — பாண்டியர் செங்கோன்மை — வீழ்ச்சிக்குக் காரணம் — முஸ்லிம் ஆட்சியும் முடிவும் — முடிவுரை.

Y2:1195
N65

V. மதுரையும் நாயக்க மன்னரும் :

பாண்டிய நாட்டின் நிலை—நாயக்கர் ஆட்சியின் தோற்றம் — அவர்களது செங்கோன் முறை — அரும்பெருந்தொண்டுகள் — முடிவுரை.

VI. திருமலை நாயக்கரும் அவர் செய்த அழியாத் தொண்டும் :

நாயக்க மன்னர்கள்—திருமலை நாயக்கர் — செங்கோன்மை — புலவர்கள்பால் பரிவு — அரும்பெரும் திருப்பணிகளும் பிறவும் —முடிவுரை.

VII. மதுரையும் புலவர் பெருமக்களும் :

தமிழ் வளர்த்த மதுரை—புலவர்கள் பெருமை — நக்கீரர் பெருமை — "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற சிறப்பு — காப்பியத் தலைவர்கள் —அன்னார் தமிழ்த் தொண்டு— மன்னர்கள் அன்னாரைப் போற்றிய வகை — முடிவுரை.